SKY WINGS TRAVEL & TOURS
AMAZING FARES To Srilanka and Beyond
Srilankan £395
QATAR £305
£165
£220
KUWAIT AIRWAYS £230
Chenni £160
Canada £210
Australia £510
New York £160
Many more Destinations
Visa Service
Srilanka, India Australia, USA
Sky Wings Ltd 119, Tooting High Street, London, SW17 0SY
Tel: +44 0 20 8672 9111 Mobile: 078 50 876921
Email: info@Skywings.co.uk
Web: www.skywings.co.uk

Free
Sudar Oli
சுடர் ஒளி
உன்னதமாய் தமிழின் ஒளி உலகமெலாம் பரவட்டும்

உங்கள் தேவைகளை எம்மிடம் தமிழிலே உரையாடி உங்கள் பயணத்தை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக தகவல்களுக்கு எமது CROYDON அல்லது HAYES கிளைகளை நாடுங்கள்
BRITISH AIRWAYS
Flyplaces
Worldwide Travel & Tours
info@flyplaces.co.uk www.flyplaces.co.uk
COLOMBO £169 CHENNAI £189 TORONTO £199
விசேட விமான சலுகைகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும் இன்றே எமது வாடிக்கையாளர் சேவைக்கு தொலைபேசியில் அழையுங்கள்
FOR MORE DETAILS GO TO PAGE 5
BOOK WITH CONFIDENCE
PRICE MATCH GUARANTEED
020 8866 3311
*Note: All fares mention above are low season, excluding taxes & terms.


VINCENT SOLICITORS
UKயில் student visa or work visaவில் இருக்கின்றீர்களா?
06 Apr 2012 யில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிகளுக்கமைய
* பல்கலைக்கழக அனுமதி + பகுதிநேர வேலை அனுமதி
* Tier – entrepreneur விசா பெற்றுத்தரப்படும்
UKயில் உங்களை அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டிருப்பின்
* புதிய விண்ணப்பம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினால் செய்து தரப்படும்
* 2007/03 யிற்கு முன்னர் நிராகரிக்கப்பட்டோருக்கு வதிவிட உரிமை/ வேலை புரிவதற்கான அனுமதி பெற்றுத்தரப்படும்
தமிழ், சிங்களம் மொழிகள் மூலம் ஆலோசனை வழங்கப்படும்
11-13 South Road
Southall, UB1 1SU
020 8574 0666
07870 763 570
Opening Days Mon-Sat

சுடர் - 01 • T.P : 0207 0788 870 • 04-05-2012 • வெள்ளிக்கிழமை • ஒளி - 22

# முள்ளிவாய்க்கால் உயிரிழப்புகளை இனப்படுகொலையாக அறிவியுங்கள்

## ஹிலாரிக்குத் தொலைநகல்கள்

முள்ளிவாய்க்கால் படு கொலைகளின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, முள்ளிவாய்க் காலில் நிகழ்ந்த படுகொலைகளை இனப் படுகொலையாக அங்கீகரித்தும், வன்னி மக்களுக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்தும் அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று கோரி அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனுக்கு தொலைநகல் அனுப்பும் போராட்டம் ஒன்று புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மே 18 நினைவு நாள் அமெரிக்க ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் இந்தத் தொலைநகல் அனுப்பும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் இணைப்பாளர் சுபா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். ருவாண்டா படுகொலைகளின் 19ஆவது நினைவு நாளை முன்னிட்டு அண்மையில் ஹிலாரி கிளின்ரன், அங்குள்ள மக்களுக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே முள்ளிவாய்க்கால் படுகொலைகள் குறித்தும் அறிக்கை ஒன்றை வெளியிட



வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைநகலைக் ஹிலாரி கிளின்ரனின் தொலைபேசி இலக்கங்களுக்கும் அதன் பிரதியை வெள்ளை மாளிகைக்கும், சாத்தியமிருந்தால், புலம்பெயர் தமிழர்கள் தாம் வதியும் நாட்டின் அரச தலைமைக்கும் அனுப்புமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டன் அரசிற்கு மக்கள் ஆதரவு குறைவடைந்துள்ளது



Sunday Express இன் Angus Reid ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட இருதிக் கணக்கெடுப்பில் 4/5 பகுதி மக்கள் அரசிற்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. ஏப்ரல் 27 ஆம் திகதியன்று 2012 மக்களிடம் இவ் ஆய்வு நடாத்தப்பட்டது. 82 சதவீதமான மக்கள் இவ்வாறான நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றனர். மீதி 18 சதவீதமான பொதுமக்களே மக்கள் நலன்களில் கூட்டணி அரசு கவனம் செலுத்துவதாகக் கருதுகின்றனர். அரசின் எரிபொருள் சர்ச்சையை கையாண்ட விதம் மற்றும் வரவுசெலவுத்திட்டத்தில்

4ம் பக்கம் பார்க்க

## ஜேர்மனியில் குடியேற Blue - Card

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சாராத திறன்மிக்க தொழிலாளர்கள் (Non European Union Skilled Workers) ஜேர்மனியில் தொழில் புரிவதற்கு ஜேர்மன் நாடாளுமன்றம் கடந்த 27ஆம் திகதி அங்கீகாரமளித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் தொழில் பார்ப்பதற்கான அனுமதி பத்திரமாக விளங்கும் Blue - Card ஐ பெறுவதன் மூலம் இச்சக நாடுகளில் திறன்மிக்க தொழிலாளர்கள் வேலை செய்யலாம். இதன் மூலம் எதிர்காலத்தில் திறன்மிகு தொழிலாளர்களுக்கு ஜேர்மனியில் பல தடைகள் அகற்றப்படும். அமெரிக்காவில் தொழில் புரியும் வெளிநாட்டு தொழிலாளர்கள் கொண்டிருக்கும் வதிவிட அந்தஸ்த்தை போல ஐரோப்பிய ஒன்றியத்தை சாராத நாடுகளைச் சேர்ந்த ஏனைய தொழிலாளரும் கொண்டிருக்க வேண்டுமென்ற ஐரோப்பிய ஆணைக்குழு 2009 இல் செய்த பரிந்துரைக்கு

4ம் பக்கம் பார்க்க




Accident Courtesy
வாகன விபத்தா?
Courtesy Car
0800 2321 523
07903 810 196

## கிளஸ்டர் குண்டு ஆதாரத்தால் இலங்கை அரசுக்கு புதிய தலைவலி

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் நிறைவடையப் போகின்ற நிலையில், போர்க்குற்ற விசாரணைகள் பற்றிய சர்ச்சை தீர்வதற்கு முன்னர், அரசாங்கத்துக்கு இன்னொரு பிரச்சினை தோன்றியிருக்கிறது.

இறுதிக்கட்ட போரின் போது அரசபடைகளால் கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக ஐ.நா.வின் வெடிபொருள் நிபுணர் ஒருவர் வெளியிட்டுள்ள தகவலே இந்தப் பிரச்சினைக்கான காரணமாகும். புதுக்குடியிருப்பில் அண்மையில்.

4ம் பக்கம் பார்க்க

## 10 வயது சிறுமிக்கு SEX பாடம் போதித்த பிக்குவிற்கு தண்டனை!



பிரிட்டனில் உள்ள பிரபல பௌத்த பிக்குகளில் ஒருவரான பகலகம சோமரட்ண பிக்கு பெண்களிடம் கண்ணியத்தை மீறி நடந்தார் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளார். அவருக்கான தண்டனை ஜூன் முதலாம் திகதியில் வழங்கப்படும். அதேவேளை வயதுக்கு வராத பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்திருந்தார். 1970 கள் மற்றும் 80 களில் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

4ம் பக்கம் பார்க்க

## லண்டன் ஒலிம்பிக் அரங்கை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தல்

தீவிரவாத அச்சுறுத்தல் உள்ள உலகின் தலை நகரங்களில் லண்டன் முக்கியமானதாகும். அதிலும் இவ்வருட கோடைகாலத்தில் லண்டனில் கோலாகலமாகத் தொடங்கவுள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மிக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீவிரவாதிகளின் குறித்த தாக்குதல்கள் வான் வழியாக வந்து நிகழும் வாய்ப்புப் பெரும்பாலும் இருப்பதால் அவற்றைத் தரையிலிருந்தே தடுப்பதற்காக, அதி வேகமுடைய ஏவுகணைகளையும் அவற்றை இயக்க படை வீரர்களுக்கான தற்காலிக நிறுத்தங்களையும், இலண்டனின் ஒலிம்பிக் விளையாட்டு அரங்குகளைச் சுற்றி அமைந்துள்ள சாதாரணமான மற்றும் மாடி வீடுகளின் கூரையில் அமைக்க பிரித்தானிய அரசு திட்டமிட்டுள்ளது.

4ம் பக்கம் பார்க்க

For Worldwide destinations visit www.carltonleiusure.com
CARLTON LEISURE Worldwide Travel & Tours
Emirates Srilankan Gulf Air Oman Air KUWAIT AIRWAYS JET AIRWAYS ETIHAD QATAR ROYAL JORDANIAN IATA
COLOMBO fr £168 +taxes
CHENNAI fr £189 +taxes
Low season fares exclude taxes, subject to availability & conditions apply
கடந்த நான்கு வருடங்களாக இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில் முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்
PRICE MATCH GUARANTEED
GAJEN 020 8554 0000 SELVAN 020 8586 7675 SULAIMAN 020 8672 5757

# Nexus Global

SHIPPING ON TIME




இலண்டனில் எங்கிருந்தாலும் உங்கள் வீட்டிற்கே
வந்து பொருட்களை பெற்றுக் கொள்வதோடு,
கொழும்பு, யாழ், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு,
திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் உங்கள் உறவுகளின்
கரங்களுக்கே பொருட்கள் சேர்க்கப்படும்.

## CARGO SRVICE

உங்கள் ஓர் பொதிக்கு £3 மாத்திரமே
உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று கொள்வதோடு பொதி செய்து தரப்படும்
இலங்கையில் எப்பாகத்திலிருந்தாலும் உங்கள் உறவுகளுளின் கரங்களிற்கே
பொருட்கள் பாதுகாப்பாக சோக்கப்படும்,(cargo or gifts)

**CARGO SERVICE FROM £3 ONLY**

## VEHICLE SHIPPING

எங்கள் நிவுணத்துவ வேலையாட்கள் மூலம்
உங்கள் வாகனங்கள் கப்பலில் ஏற்றப்படுவது மாத்திரமல்ல,
இலங்கையில் உங்கள் வீட்டிற்கே உங்கள் வாகனம்
பாதுகாப்பாக சேர்க்கப்படும்



**CAR SHIPPING FROM £700**

**Buy one box and get 2nd box half price**

## 4 COLLECTION POINTS AROUND LONDON, DROP IN YOUR BOX AND WE WILL SHIP IT JUST FOR THE FREIGHT,

**EASTHAM**
HIGH STREET CONVENIENCE STORE
355 HIGH STREET NORTH
EASTHAM
E12 6PQ
T.P: 0207 183 3541

**HARROW**
BEST CHOICE ESTATE AGENT
395 NORTHOLT ROAD
HARROW
HA2 8JE
T.P: 0207 183 3541

**LESISHAM**
BEST FOOD
30 LOAMPIT HILL
LEWISHAM
SE 13 7SW
T.P: 0207 183 3541

**TOOTING**
TOOTING MINI MARKET
26, TOOTING HIGH STREET
TOOTING
SW 17 0RG (NEXT TO NAT WEST BANK)
T.P: 0207 183 3541




E mail: info@nexuslogistics.net
Tel : 0800056889,
020 71833541, 079 32591089
Fax : 020 71833546

சுடர் ஒளி

Suite 501, Kemp House, 152 - 160 City Road, London, EC1V 2NX
Phone : 02070788870, Fax : 02078998559
E- mail : info@sudaroli.co.uk, Web : www.sudaroli.co.uk

## ஒளிக்கீற்று

# இன்று ஆபிரிக்க ராஜபக்சேக்கள், நாளை இலங்கை ராஜபக்சே!

ICC எனப்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) 1988 ஆம் ஆண்டில் ரோம் சாசனத்திற்கு அமைய உருவாக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு முதல், உலகின் மனித உரிமை போர்க் குற்றங்களை புரிந்த தனி நபர்களை விசாரித்து தண்டனை வழங்குவதற்காக நிறுவப்பட்டது.

இந்த நீதிமன்றம் நிறுவப்பட்டு 10 ஆண்டுகளின் பின்னர் கடந்த மார்ச் மாதம் கொங்கோவின் கிளர்ச்சிக் குழுவின் தலைவரான தாமஸ் லுபாங்கா என்பவர், போர்க்குற்றங்கள் புரிந்தமை நிருபிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.இதற்கு முன்னர், 2005 ஆம் ஆண்டில் உகண்டாவின் கிளர்ச்சிக் குழுத்தலைவரான ஜோசப் கோணிக்கு எதிராக தனது கைது உத்தரவை பிறப்பித்திருந்ததுடன், அதன் பின்னர் சூடான் நாட்டின் அதிபர் ஓமர் அல் பீரை இனப்படுகொலைக் குற்றவாளியாக அறிவித்திருந்தது.

இதன் தொடர்ச்சியில், 26.04.2012 இல், லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி போர்க்குற்றம் செய்துள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆபிரிக்க நாடான லைபீரியாவில் கடந்த 1991 தொடக்கம் 2002 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களை கொன்று குவித்தமை மற்றும் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.இந்த ஆபிரிக்க ராஜபக்சேக்களுடன் ஒப்பிடும் போது இலங்கை ராஜபக்சே தாராளமாக, எண்ணற்ற போர்க்குற்றங்களை நிறைவேற்றியுள்ளார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இதுவரை நடைபெற்ற போர்க்குற்ற விசாரணைகளுக்கு அமெரிக்காவே தூண்டுதலாக இருந்துள்ளதுடன், நிதியுதவிகளையும் வழங்கியுள்ளது.

இப்படியிருக்க, தற்போது இலங்கையின் விவகாரத்தையும் அமெரிக்கா கையில் எடுத்துள்ளதால் ராஜபக்சேவுக்கு போர்க்குற்ற ஜுரம் அதிகமாகிக் கொண்டே போகின்றது என்பதுதான் உண்மையாகும். ராஜபக்சேவின் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு, மூவர் அடங்கிய குழுவை ஐ.நா அமைத்த வேளையில், பயம் கொண்ட சிங்களர், கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தை சூறையாடியிருந்ததுடன், அக் குழுவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து விமல் வீரவம்ச உண்ணாவிரதம் இருந்தமையும் சிங்களக் கடும் போக்கின் வெளிப்பாடுகளே.இனப்படுகொலை நடாத்தியமை, அதன் சாட்சிகளை மறைக்க முற்பட்டமை போன்ற விடயங்களில் ஆபிரிக்க ராஜபக்சேக்கலுடன் போட்டியிட்டு அதில் இலங்கை ராஜபக்சே மிகப்பெரிய வெற்றியும் கண்டுள்ளார்.

சர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட்ட ஆய்தங்களை உள்நாட்டு யுத்தத்தில் பயன்படுத்தியமைக்கான ஆதாரங்களில் முக்கிய சான்றாக, அண்மையில் வடக்கில் கிளஸ்டர் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ராஜபக்சேவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கூண்டில் நிருத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மகத்தான மாமருந்தாகவே அமைந்துள்ளது. இப்போது உலக அரங்கில் ராஜபக்சே ஒரு போர்க்குற்றவாளி என்பது அம்பலமாகியுள்ளது. நாடுகடந்த தமிழீழ அரசிற்கு சூடான் விடுதலை இயக்கமும் ஆதரவு தெரிவித்திருந்தது, இனப்படுகொலை செய்த ஒரு அரக்கனின் தன்மை எவ்வாறானது என்பதை அந்த இயக்கம் நன்கு உணர்ந்திருந்தது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை உறுப்பு நாடு இல்லை. இருப்பினும் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் பரிந்துரைத்தால் ராஜபக்சேக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்கலாம், இந்த நிலைதான் சூடான் அதிபருக்கு நடந்தது.

ராஜபக்சே, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சில வெளிநாட்டு உதவிகளுடன் தற்காலிகமாக வெற்றி கொண்டுள்ளார். ஆனால் அவரும் அவரின் அரசும் தற்பொழுது எதிர்கொள்வது சர்வதேச சமுதாயத்தின் நெருக்கடிகளையாகும் இனி எதிர்கொள்ள இருப்பது சர்வதேச நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளையாகும். இதில் இரண்டாவது விடயம் அவ்வளவு சுலபமான ஒன்றாக அமைந்துவிடப்போவதில்லை. ஒரு நாட்டின் அதிபராக இருந்து, மக்களைக் கொன்றழித்தது மட்டுமல்லாமல் இன்னும் பல காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ராஜபக்சேவை, நாகரிகமான சமுதாயம் கண்டிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் திணை விதைத்தவன் திணை அறுப்பான்

**மீண்டும் புதிது புதிதாய் சந்தித்துக் கொள்வோம்!**

செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ் டைல்ஸின்
தங்கத் திருவிழா
அக்ஷய திருதியை தவறவிட்டவர்களுக்கு
மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு
10-05-2012இற்குள் நகைகள் கொள்வனவிற்கு ஏற்ப
லக்ஷ்மி Coin முற்றிலும் இலவசம்
மற்றும் தாலிக்கொடி அனைத்தும்
செய்கூலி இன்றி செய்து தரப்படும்
TP : 0208 767 3795, MOBLILE : 07825005269
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சீட்டுத்திட்டத்தில்
இணைத்து நீங்களும் ஒரு அதிஷ்டசாலி ஆகுங்கள்
162 B MITCHAM ROAD, TOOTING, LONDON, SW17 9NJ

"11 + Paper Classes
for Girls and Boys"

★Would you like an 11+ Mock Test experience for your child that will be similar in style and length to their real 11+ exam?
★Would you like children to sit only papers they will get in their grammar school's 11+tests?
★Boys 11+ exams include a written paper. Do you think 11 + Mock tests should include a written paper for boys?
★Would you like your child in Rank System, where you compare other children within 2hrs of taking the exam?
★Would a feedback on the papers taken in the 11+ weekly based paper classes (giving detailed information about how your child performed) be of benefit to you?

If you have answered YES to any of the questions above then
CALL Julie on 07800 920 873
For 11+weekly based paper classes

Our unique Paper Classes are held in Wallington. Every grammar school's exam is different so we have selected Test Papers to suit several grammar schools. Sitting the same number of papers at similar length and only the papers they will get in their real test may give a better indication of children's performance.

Our Aim Is To
★To help you gauge your child's level at the time of taking the test
★To give you time to bridge the gap if necessary before the real test
★To give your child the experience of test conditions

CALL Julie on 07800 920 873
"The journey of a thousand miles starts with a single... I believe in PURPOSE DRIVEN LIFE"... Julie

Indian and Eelam Cuisine
Chennai kitchen
Vegetarian & Non vegetarian
Take away in South Ealing
we are specialist Caters for all Occasions including weddings, Birthdays and parties
Free Delivery Unbeatable prices
Tel : 020 8560 1171 / Mob : 07813 456 350
Order online at.. www.chennaikitchen.co.uk
172, South Ealing Road, South Ealing , W5 4QL

# கிளஸ்டர் குண்டு ஆதாரத்தால்........

உலோகங்களாக விற்பதற்காக, வன்னியில் சிதறிக் கிடந்த குண்டுகளின் பாகங்களை சேகரித்து வைக்கப்பட்டிருந்த வீட்டில் ஒரு வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கிளஸ்டர் குண்டின் ஒரு பகுதியான சிறிய குண்டு ஒன்று வெடித்தே, சிறுவன் மரணமானதாகவும், இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில்தான், முதல்முறையாக கிளஸ்டர் குண்டு பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் ஐ.நா கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசகரான அலன் போஸ்டன் தெரிவித்துள்ளார். இந்தச் செய்தி உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிளஸ்டர் குண்டுகள் உலகின் மிகமோசமாக ஆயுதங்களாக கருதப்படுபவை. ஒரு குண்டை விமானத்தில் இருந்து வீசும் போது, அது கீழே விழுந்து, அதிலுள்ள நூற்றுக்கணக்கான சிறிய குண்டுகள் பிரிந்து, வெடித்துச் சிதறி பரவலான சேதங்களை ஏற்படுத்தும். பேரழிவு ஆயுதங்களில் ஒன்றாக கருதப்படும் இக் குண்டுகள் உள்நாட்டுப் போர்களில் பயன்படுத்தப்படுவதை சர்வதேச போர்ச்சட்டங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், உள்நாட்டுப் போர்களில் பயன்படுத்தப்படக் கூடாது என்று கூறப்படும் விமானக் குண்டுகளும், ஆட்டிலறிகளும் இலங்கைப் போரில் மிகச் சாதாரணமாகவே பயன்படுத்தப்பட்டன.

பேரழிவு ஆயுதமாக கருதப்படுவதால், கிளஸ்டர் குண்டுகளை உலகில் இருந்தே - நாடுகளுக்கிடையிலான போர்களின் போதும் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் சர்வதேச உடன்பாடு ஒன்று 2010ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டுள்ளது. உலகில் உள்ள 60 நாடுகள் இதில் ஒப்பமிட்டுள்ளன. இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர்தான், இவ் உடன்பாடு கையெழுத்திடப்பட்ட போதும், இலங்கை அதில் கையெழுத்திட வில்லை. கிளஸ்டர் குண்டுகளைத் தாம் பயன்படுத்த வில்லை என்று கூறும் அரசாங்கம், இந்த உடன்பாட்டில் கையெழுத்திட மறுப்பது சந்தேகத்துக்குயதே. பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கிளஸ்டர் குண்டுகள் உள்நாட்டுப் போர்களில் பயன்படுத்தப்படுவதை கிட்டத்தட்ட ஒரு போர்க்குற்றமாகவே சர்வதேச சமூகம் கருதுகிறது. அதுவும், இலட்சக்கணக்கான மக்கள் குவிந்திருந்த குறுகலான போர் தவிர்ப்பு வலயப்பகுதி ஒன்றின் மீது இத்தகைய குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருப்பது சாதாரண விடயமாகக் கொள்ள முடியாது.

அரசாங்கம் அப்போது அதை நிராகத்தது விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் புதுக்குடியிருப்புச் சமர் மிகவும் உக்கிரமானது. எல்லா வளங்களையும் ஒன்று திரட்டி புலிகள் கடுமையாகப் போரிட்டனர். இதனால், புலிகளைப் பின்தள்ளுவதற்கு அரசபடைகள் கடுமையாகப் போரிடவும் விலை கொடுக்கவும் வேண்டியிருந்தது. எனவே, அந்தப் பகுதியில் கிளஸ்டர் குண்டுகளுக்கான ஆதாரங்கள் சிக்கியிருப்பதில் ஆச்சயப்பட ஒன்றுமில்லை. 2009 ஏப்ரல் முதல் வாரத்தில் புதுக்குடியிருப்பை அடுத்து ஆனந்தபுரம் பகுதியில் நிகழ்ந்த சமரின் போது, அரசபடைகளின் முற்றுகையில் சிக்கியிருந்த புலிகளை அழிக்க, கிளஸ்டர் குண்டுகள், எரிகுண்டுகள் போன்ற தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகின.

இந்தச் சமரின் பின்னர் அரசபடைகளால் மீட்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் உடல்கள் மோசமாக சிதைந்து காணப்பட்டதும், எரிந்து போயிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், புதுக்குடியிருப்பில் கண்டறியப்பட்டுள்ள கிளஸ்டர் குண்டு பற்றிய ஆதாரம், சர்ச்சையாக உருவெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. போரின்போது கிளஸ்டர் குண்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஏற்கெனவே ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால், கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத் தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும், அதுபற்றி விசாக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நா நிபுணர்குழு கூறியிருந்தது. அதேவேளை, நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்னால் சாட்சியமளித்தவர்களும் கிளஸ்டர் குண்டுகள் வீசப்பட்டதாக கூறியிருந்தனர். பலரின் காயங்களில் அதற்கான தடயங்கள் இருந்தன. விமானத்தில் இருந்தும், ஆட்டிலறிகளின் மூலம் வீசப்பட்ட குண்டுகள் அடுத்தடுத்து பல சிறிய குண்டுகளாக வெடித்ததாகவும், தாமதித்து வெடித்ததாகவும் பலர் சாட்சியமளித்திருந்தனர். ஆனாலும் இலங்கை அரசாங்கம் அதனை மறுத்து வந்துள்ளது. இந்தநிலையில் தான் புதிய ஆதாரங்களை ஐ.நா நிபுணர் கூறியுள்ளார். இது இலங்கைக்கு கடும் நெருக்கடி ஒன்றை உருவாக்கக் கூடும். சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் அழுத்தங்கள் மேலும் அதிகரிக்கலாம். ஏற்கெனவே, பல்வேறு நெருக்கடிகள், அழுத்தங்களில் சிக்கிப் போயுள்ள அரசாங்கத்துக்கு புதியதொரு சிக்கலாக கிளஸ்டர் குண்டும் உருவெடுக்கப்போகிறது.

கிளஸ்டர் குண்டுகள் வன்னியில் வீசப்பட்டதற்கு ஏற்கனவே ஆதாரங்கள் பல வெளியாகின. விமானத்தில் இருந்து வீசப்பட்டு வெடிக்காத கிளஸ்டர் குண்டின் நிழற்படங்களும் வெளியிடப்பட்டன. ரஷ்யத் தயாரிப்பான அந்தக் குண்டின் எழுதப்பட்டிருந்த ரஷ்யமொழி எழுத்துகள் நிறப்பூச்சு பூசப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன. அப்போது சர்வதேச சமூகம் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஐ.நாவின் கையில் இப்போது ஆதாரமாகச் சிக்கியுள்ள நிலையில், கிளஸ்டர் குண்டு விவகாரத்தை சர்வதேசம் இனிமேல் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. போர்க்குற்ற விசாரணைகள் விடயத்தில் சர்வதேச சமூகத்தை எவ்வாறு திருப்திப்படுத்துவது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருக்கும் அரசுக்கு கிளஸ்டர் விவகாரம் பெருந்தலைவலியாகவே அமையப்போகிறது.

## ஆரணியில் சிவன் கோவில் தேர் அச்சு முறிந்து சாய்ந்தது. 5 பேர் பலி, 6 பேர் படுகாயம்!!

இந்தியா :

ஆரணியில் கோட்டை அறம்வளர் நாயகி உடனுறை கயிலாயநாதர் சிவன் கோவில் தேரோட்டத்தின்போது தேர் அச்சு முறிந்து சாய்ந்ததில் 5 பேர் பலியாகினர், 6 பேர் படுகாயம் அடைந்தனர். திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் உள்ள கோட்டை அறம்வளர் நாயகி உடனுறை கயிலாயநாதர் சிவன் கோவிலில் சித்திரை திருவிழா கடந்த 25ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி நடந்து கொண்டிருக்கிறது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று நடந்தது. அதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு 40 அடி உயரம், 15 அடி அகலம், 15 டன் எடை கொண்ட தேரை வடம்பிடித்து இழுத்தனர். தேர் மணிக்கூண்டு அருகே சென்று கொண்டிருந்தபோது அச்சு முறிந்து தேர் முன்பக்கமாக சாய்ந்தது. தேரின் பக்கவாட்டில் உள்ள 4 சக்கரங்களும் தனித்தனியாக கழன்றன. தேர் முன்பக்கமாக சாய்ந்ததில் வடம் பிடித்து இழுத்தவர்களும், தேருக்கு கட்டை போட்டவர்களும் தேருக்குள் சிக்கிக் கொண்டனர். தேருக்குள் சிக்கியவர்கள் தங்களை காப்பாற்றுமாறு அலறினர்.

உடனே கிரேன் கொண்டு வரப்பட்டு சுமார் 15 நிமிட போராட்டத்திற்கு பிறகு தேர் தூக்கப்பட்டது. இதில் ஆரணி அருணகிரி தெருவைச் சேர்ந்த கோவில் பக்த சங்க பொருளாளர் சம்பத் என்பவரது மகன் சபரி (வயது 35), ஆரணி ரோட்டரி சங்க செயலாளர் ஜவகர் (35), தேருக்கு கட்டை போட்ட எஸ்.வி. நகரத்தைச் சேர்ந்த செங்கல்வராயன் (60), அவரது மகன் ராமதாஸ் (35), சரவணன் (34), ஆரணியைச் சேர்ந்த மணி (37), செந்தில்வேல் (36), ஆறுமுகம் (32), கீர்த்தி (25), ஆரணி கொசப்பாளையத்தைச் சேர்ந்த ராமு (60), படவேடு கோவில் அய்யர் கணேசன் (35) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். அதில் சபரி, செங்கல்வராயன், ராமதாஸ், சரவணன் ஆகியோரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்கள் இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். மேலும் மணி, ஆறுமுகம், செந்தில்வேல், ராமு, கீர்த்தி, கணேசன் ஆகியோர் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்நிலையில் தேர் விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சமும், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.25,000ம் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

## பள்ளிவாசலை இடம்மாற்றக் கூடாது: காத்தான்குடி நகர சபையில் தீர்மானம்

தம்புள்ள ஜும்ஆ பள்ளிவாசல் அதே இடத்தில் இருக்க வேண்டும் என்ற தீர்மானமொன்று காத்தான்குடி நகர சபையின் விசேட கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. காத்தான்குடி நகர சபையின் விசேட கூட்டம் நகர சபை தலைவர் எஸ்.எச். அஷ்பர் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தம்புள்ள பள்ளிவாசல் உடைத்துச் சேதப்படுத்தப் பட்ட சம்பவத்தை காத்தான் குடி நகரசபை கண்டிக்க வேண்டும் என்ற தீர்மானம் சபை உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டபோது சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. தம்புள்ள பள்ளிவாசல் அதே இடத்தில் இருக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் இந்தப் பள்ளி வாசலை இடம்மாற்றக்கூடாது. பள்ளிவாசல் உடைக்கப் பட்டுச் சேதப்படுத்தப்பட்டதை காத்தான்குடி நகர சபை வன்மையாகக்கண்டிக்கின்றது என்று இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அனுப்புவது மற்றும் காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அலுவலகத்தின் மீது விஷமிகளால் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலை கண்டிப்பது போன்ற தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகக் காத்தான்குடி நகரசபை தலைவர் எஸ். எச். அஷ்பர் தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற காத்தான்குடி நகர சபையின் கூட்டத்தின் போது நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் . எம்.எம்.அப்துர் றஹ்மானினால் தம்புள்ள பள்ளிவாசல் உடைப்புக்கெதிராக காத்தான்குடி நகர சபை கண்டனத் தீர்மானம் நிறை வேற்ற வேண்டும் என்று கொண்டுவந்த பிரேரணை உரிய முறையில் முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்து நகரசபை ஆளும் தரப்பு உறுப்பினர்கள் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து கோடீஸ்வரர்களில் லட்சுமி மிட்டல் தொடர்ந்தும் முதலிடம்



இங்கிலாந்தின் முன்னணி கோடீஸ்வரர்கள் பட்டியலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த லட்சுமி மிட்டல் தொடர்ந்து முதலிடம் பிடித்துள்ளார். கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இங்கிலாந்து கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு சரிந்துள்ளது. இந்நிலையில், வருடாந்திர சண்டே டைம்ஸ் கோடீஸ்வரர்கள் (இங்கிலாந்து) பட்டியல் வெளியாகி உள்ளது. அதில் ஆர்சிலர் மிட்டல் நிறுவன தலைவரும் இந்தியருமான லட்சுமி மிட்டல் ரூ.1.06 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் முதலிடம் பிடித்தார். கடந்த 2011ம் ஆண்டில் இவரின் சொத்து மதிப்பு 25 சதவீதத்துக்கு கீழ் சரிந்தபோதிலும் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

அதேவேளை இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் ஒன்றை மிட்டல் மேற்கொண்டார். பஞ்சாப் மாநிலம் பதிண்டாவில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட மிட்டல் செய்தியாளர்களிடம் பேசுகையில், "இந்திய பொருளாதார வளர்ச்சி முடிந்துவிட்டதாக கருத முடியாது. ஏராளமான வளம் இங்கு நிறைந்து இருப்பதால் தொடர்ந்து வளர்வதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாகவே அங்கு பொருளாதாரம் மந்தமடைந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரிட்டன் அரசிற்கு.....

அறிவித்த வரிக்குறைப்பின் தன்மை காரணமாக David Cameron, கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றார். ஜனநாயகக் கட்சியின் அமைச்சரான Nadine Dorries, பிரதமர் மீதும் அதிபர் George Osborne மீதும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார். இவர்கள் நாட்டின் நிலைமைகளை அறிந்துகொள்வதில்லை, ஏனையோரின் வாழ்வைப் புரிந்துகொள்வதில்லை எனவும் விமர்சித்தார். இந்த நாட்டின் மக்கள் பொருளாதரத்துடன் கடுமையாகப் போரடிவருகின்றார்கள் என்பதை நான் விளங்கிக் கொள்கின்றேன், என பிரதமர் கடந்த 23.04.2012 திகதியன்று கருத்து வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் குடியேற.....

அமையவே இப்புதிய சட்ட மூலம் ஜேர்மன் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் காணப்படும் கிறீன் காட் (Green Card) போலவே Blue Card வைத்திருப்போர் ஜேர்மனியில் காலவரையின்றி தங்கியிருக்க முடியும். Blue Card ஐ பெற விரும்புவோர் கல்லூரி பட்டதாயாகவும் (College Degree) வருடத்திற்கு 45,000 யூரோ வருமானத்தையும் நிரூபிக்க வேண்டும். பொறியியலாளருக்கும் தொழில்நுட்பவியலாளருக்கும் (Technicians) இவ்வருட வருமானம் 35,000 யூரோவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியில் இத் தொழில்களுக்கு அதிக தட்டுப்பாடு நிலவுகிறது. இத்தகைமையுடையவருக்கு தற்காலிக வதிவிட பத்திரம் (Permit) வழங்கப்பட்டு 3 வருடம் ஜேர்மனியில் வேலை செய்த பின்பு நிரந்தர பத்திரம் வழங்கப்படும். தொழில் புரிவோரின் மனைவி தமது விருப்பப்படி வேலைகளை தேட முடியும். ஜேர்மன் மொழி பரீட்சைக்கு சமுகமளிக்க தேவையில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தை சாராத ஜேர்மன் பல்கலைக் கழக பட்டதாரிகள் தமது பட்டப்படிப்பை முடித்த பின்னர் தமது படிப்போடு சம்பந்தப்பட்ட வேலைகளை தேட ஜேர்மனியில் 18 மாதம் தங்க முடியும். அவர்கள் தொழில்களை பெற்றுக்கொண்டால் 2 வருடத்தின் பின்னர் Blue Card வழங்கப்படும். ஜேர்மன் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி 35,000 யூரோ வருமானம் மிகக் குறைவாக காணப்படுவதாக கூறி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. கிறீன் (Green ) கட்சியும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு ஜேர்மன் நாடாளுமன்றத்தின் மேல் சபையான "புண்டஸ்ராற்" இனி அங்கீகாரம் வழங்க வேண்டும்.

## லண்டன் ஒலிம்பிக்.....

இதையொட்டி தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் அரச சார்பற்ற பொதுமக்கள் உட்பட சுமார் 700 மக்களுக்குச் சொந்தமான மாடிவீடுகளில் இத்திட்டத்தை அமுல் படுத்த பிரித்தானிய அரசு வலுக்கட்டாயமாக அனுமதி கோரியதுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளது. இத்திட்டம் பற்றி பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சர் பிலிப் ஹம்மொன்ட் கூறுகையில் இன்னும் சில தினங்களுக்குள் இந்த ஏவுகணைகள் குறித்த இடங்களில் நிறுவப்படும் எனவும் இதற்கு பொதுமக்களின் அனுமதி பெறப்படும் எனவும் கூறியுள்ளார்.

## 10 வயது சிறுமிக்கு.....

65 வயதான இவர், பிரித்தானியா, குறைடனில் உள்ள தேம்ஸ் பௌத்த விகாரையின் தலைமை பிக்குவான பகலகம சோமரட்ணவே தண்டனைக்கு உள்ளாகவுள்ளார்.

## பாகிஸ்தானில் கடத்தப்பட்டிருந்த இங்கிலாந்து அதிகாரி பிணமாக மீட்கப்பட்டார்

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த காலில் டாலே என்பவர் சர்வதேச செஞ்சிலுவை அமைப்பின் சுகாதார பணி மேலாளராக பாகிஸ்தானில் உள குவாட்டா பகுதியில் பணியாற்றி வந்தார். இவரை கடந்த ஜனவரி மாதம் மர்ம நபர்கள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர். இந்நிலையில் டாலேயின் உடல் பையில் அடைக்கப்பட்டு குவாட்டா நகரின் சாலையோரம் கிடந்தது. இவர் கொலை செய்யப்பட்டு வீசிப்பட்டிருக்கிறார். இவரை கொன்றது யார்? காரணம் என்ன? என்பது தெரியவரவில்லை.


உங்கள் தேவைகளை
எம்மிடம் தமிழிலே உரையாடி
உங்கள் பயணத்தை மலிவான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்
BRITISH AIRWAYS
Flyplaces
Worldwide Travel & Tours
info@flyplaces.co.uk
www.flyplaces.co.uk
SPECIAL OFFER
WORLDWIDE FARES
COLOMBO FROM £169
CHENNAI FROM £189
TRIVANDRUM FROM £215
TIRUCHI FROM £299
TORONTO FROM £199
SINGAPORE FROM £249
FLIGHT, HOTEL & TOUR PACKAGES
WE HAVE SEVERAL PACKAGES TO ACCOMMODATE ALMOST ANY NEED, OR YOU CAN LET US CREATE A CUSTOM TRAVEL PACKAGE. CALL US TO FIND OUT MORE ABOUT THESE AND OTHER PACKAGES, OR LET US KNOW WHERE YOU WANT TO GO AND WE CAN CREATE JUST THE RIGHT CUSTOM PACKAGE FOR YOU!
020 7183 4966
மேலதிக தகவல்களுக்கு
எமது CROYDON
அல்லது HAYES
கிளைகளை நாடுங்கள்
MON-SUN:
08.00 – 21.00
EXPRESS VISA SERVICES
020 7183 5733
TOURIST, BUSINESS & LIFE TIME (OCI) VISAS TO INDIA, AUSTRALIA, SCHENGEN COUNTRIES, REPUBLIC OF CHINA & SRI LANKA.
BOOK WITH CONFIDENCE
GUARANTEED PRICES
மேலதிக விசேட விமான சலுகைகளுக்கும் மேலதிக
தகவல்களுக்கும் இன்றே எமது வாடிக்கையாளர்
சேவைக்கு தொலைபேசியில் அழையுங்கள்
020 8866 3311
Note: All fares mention above are low season, excluding taxes & terms.
FULLY BONDED
PROTECTED
PRICE MATCH GUARANTEED
VISA
Maestro
DELTA
WE ACCEPT ALL MAJOR DEBIT & CREDIT CARDS

# சிரியாவில் விடியலைத் தேடி தொடரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்

-சிவா-

2011ம் ஆண்டின் மிக அதிகமாக பகிரப்பட்ட செய்திகளில் முக்கியமானதாக சிரியாவின் மக்கள் எழுச்சி மாறியிருந்தது. இன்னமும் கலவரங்களுடன் 2012 இலும் இது தொடர்கிறது. சிரியா மத்திய தரைக்கடலில் லெபனான், துருக்கி, ஈராக், ஜோர்தான், இஸ்ரேல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட நாடு. உத்தியோகபூர்வ கணிப்பின்படி 74% சுன்னி முஸ்லிம்களும் 12% அலவி ஷீஆக்களும், 9% கிறிஸ்தவர்களும் வாழ்கின்றனர். அரபு மொழி பேசும் சுன்னி முஸ்லிம் மக்களை அதிகளவு கொண்ட சிரிய பேரரசு 1936 ஆம் ஆண்டு பிரான்சிடம் இருந்து மக்கள் ஆணை மூலம் விடுதலை பெற்றது.

இதையடுத்து 1967 இல் இசுரேல் போரிட்டு சிரியாவின் கோகான் மேடுகளை கைப்பற்றியது. எனினும் மிக குறுகிய காலத்தில் அதாவது 1970 இல் இராணுவப் புரட்சி மூலம் ஆளும் கட்சியான பாத் கட்சியை தன் வசமாக்கி நாட்டின் அதிபராக பதவியேற்ற ஹாபிஸ் அல் அசாத் பின்னர் தன்னை சர்வாதிகரியாக நிலை நிறுத்திக் கொண்டார்.

சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல இராணுவப் புரட்சிகளை சந்தித்து வந்த சிரியாவில், 1971 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை ஹாபிஸ் அல் அஸத் என்பவர் ஜனாதிபதியாக இருந்தார். தற்போது அவரது மகன் பஷர் அல் அஸத் பதவி விலக வேண்டும் எனக் கோரி மில்லியன் கணக்கான மக்கள் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

2 ஆம் உலகப் போருக்குப் பின்னர் அறபுத் தேசியவாதத்தின் விளைநிலமாகவே சிரியா இருந்து வந்தது. பலஸ்தீன் தொடர்பான அதன் நிலைப்பாடும் ஒப்பீட்டு ரீதியிலான பலமான இராணுவக் கட்டமைப்பும் சிரியாவின் அரசியல் முக்கியத்துவத்திற்கு ஆதாரமாக இருந்தன. சிரியா ஹமாஸை ஆதரித்து வந்தமையும் அறபு இஸ்ரேல் யுத்தங்களில் பங்குகொண்டமையும் இதன் வெளிப்பாடுகளே.

சிரிய இராணுவத்தில் 6,46,000 படை வீரர்கள் உள்ளனர். 700 கி.மீ. தூரம் சென்று தாக்கும் SCUD-C,SCUD-D ரக ஏவுகணைகளை ஈரான், வட கொரியா என்பவற்றின் உதவியுடன் தயாரித்துள்ளது. - MIG-29, MIC-31 போர் விமானங்களும் உள்ளன.

இப்பின்புலத்தில் நோக்கும்போது சிரியா அரசியல் முக்கியத்துவமுள்ள நாடு என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், பாத் கட்சி அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து இஸ்லாமிய எழுச்சி திட்டமிட்டு நசுக்கப்பட்டு வந்தது. 30 ஆண்டுகள் கொடுங்கோல் ஆட்சியை நிகழ்த்திய அசாத் 2000 ஆம் ஆண்டு மரணமடைந்தார். இதையடுத்து சிரியாவின் அதிபரான அசாத்தின் மகன் பஷார் அல் அசாத் மூலம் சர்வாதிகார ஆட்சி மேலும் தொடர்ந்தது.. மேலும் பஷார் சொந்தமாக மேற்கொண்ட அரச பொருளாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டங்களால் எதிர் மறையான முடிவுகளையே மக்களிடம் தோற்றுவித்தது. இவரது வரிக் கட்டணங்கள் தொடர்பான சீர்திருத்தங்கள் குடிமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. சிரியாவில் வாழும் மக்களின் எண்ணிக்கையில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் நடுத்தர மக்கள். இவர்களிடையே இச்சீர்திருத்தங்கள் காரணமாக பணப் புழக்கம் வீழ்ச்சியடைந்தது. மேலும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் இவர்களில் 20 சதவீதம் படித்த வேலையில்லாத இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 2002 ஆம் ஆண்டு ஊடகங்களின் தகவல் படி நாட்டின் மொத்த சனத் தொகையில் 75 வீதம் வேலை வாய்ப்பின்றி அவதிப்பட்டுள்ளனர்.

அங்கு நிரம்பியுள்ள எண்ணெய் வளத்தை பயன்படுத்த முயலும் அந்நிய மேலைத்தேய ஆதிக்கத்தை எதிர்த்து நாட்டில் நிகழும் ஆர்ப்பாட்டங்களும் இதை அடக்கும் அரசின் அளவுக்கு அதிகமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுமே தற்போது மிகப் பெரியளவில் மக்கள் எழுச்சி ஏற்பட காரணமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் சிரியாவில் 40 ஆண்டுகளுக்கு மேலாக அமுலில் இருக்கும் அவசரகால சட்டத்தினால் இவர்கள் இராணுவம் மற்றும் காவற்துறையால் மோசமாக ஒடுக்கப்பட்டு வந்தனர்.

அதிபர் முறை குடியரசு ஆட்சியை உடைய சிரியாவில் தற்போது பதவியுலுள்ள பசார் அல் அசாத் இன் ஆட்சிக்கு எதிராக 2011 ஜனவரி 26 இல் மக்கள் பேரணியும் ஆர்ப்பாட்டமும் முதன் முதலாக நிகழ்த்தப் பட்டது. இதற்கு முன்னர் துனிசியாவிலும் எகிப்திலும் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்ட மக்கள் எழுச்சியை அடுத்து சிரியாவிலும் அதே பாணியில் தொடங்கப்பட்டது. தூனிஸிய, எகிப்திய மக்கள் புரட்சி சிரிய மக்களையும் வீதிக்கு இறக்கியுள்ளது. எகிப்திய இராணுவம் சிரிய இராணுவத்தை விடப் பலமானது. அதை எகிப்தியர்கள் வெற்றி கொண்டார்கள். இந்த உற்சாகமும் உத்வேகமும் சிரிய மக்களை புரட்சிக்குத் தயார்செய்துள்ளது.

சிரியப் புரட்சி ஒரு பரந்துபட்ட இராணுவ அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம். இந்த மக்கள் பேரணி இதுவரை 4 கட்டங்களாக நிகழ்ந்துள்ளது. 2011 ஜனவரியில் சிரிய அரசுக்கு எதிராக ஹசன் அலி என்பவர் தன்னைத் தானே பெற்றோல் ஊற்றி தற்கொலை செய்து எழுச்சியைத் தொடங்கி வைத்தார். இதையடுத்து ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து நிகழ்ந்த மக்கள் எழுச்சி காரணமாக ஜுலை 24 இல் சிரிய பாராளுமன்றத்தில் மதம், பால், அல்லது இன அடிப்படையான கட்சிகள் அங்கம் வகிக்க முடியாத வகையில் சட்ட வரைவு முன்வைக்கப்பட்டது.

எனினும் 1970 முதல் குடும்ப ஆட்சி செலுத்தி வரும் பாசாட் கட்சியின் செல்வாக்கால் இச்சட்டம் முன் வைக்கப்பட்ட போதும் பாராளுமன்றத்தில் இது எடுபடவில்லை. இந்நிலையில் ஒவ்வொரு மாதமும் ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டங்களை தொடர்ந்து நடத்தி வந்தனர். மக்கள் புரட்சி தீவிரமானதை அடுத்து ஏப்ரல் 21 அங்கு அவசர கால சட்டம் தீவிரமாகப் பிரயோகிக்கப்பட்டது. சிரியாவில் கடந்த ஒரு ஆண்டாக அதிபர் பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதுவரை போராட்டக்காரர்கள் மீது ராணுவம் நடத்திய துப்பாக்கி சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதலில் சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இதே வேளை வெளிநாட்டு நிறுவனங்கள், மனித உரிமைகள் அமைப்பு, மற்றும் மீடியாக்கள் என்பன அனுமதிக்கப் படாத நிலையில் சிரியாவின் உள்ளே என்ன நடக்கிறது என எவராலும் தெளிவாக கூறமுடியவில்லை.
அந்நிய ஆதிக்கம் செல்லுபடியாவதற்கும் தனது முதலீடுகளை மேற்கொள்வதற்கும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் சிரியாவில் தாராளமய கொள்கை வருவதை விரும்புகின்றன. இதனால் அமெரிக்கா சிரியாவின் மக்கள் கிளர்ச்சியை ஆதரிப்பதாகவும் அதிபர் பதவி விலக வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கும் அதே நேரம் மறை முகமாக அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

சிரியாவில் சுதந்திரமாக செயற்படும் இராணுவத்தினை கண்டித்து பல நாடுகள் அறிக்கை வெளியிட்டுள்ளன. இதில் அரேபிய சமூகம், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா செயலாளர், இஸ்லாமிய கூட்டுறவு நிறுவனம், கல்.:ப் கோப்பரேசன் கவின்சில், சவுதி அரேபியா, துருக்கி, அமெரிக்கா மற்றும் ஈரான் என்பன முக்கியமானவை. இதில் சர்வதேச அரேபிய சமூகம் அல்லது அரபுலீக் சிரியாவின் அங்கத்துவத்தை ரத்து செய்ததன் மூலம் மக்கள் புரட்சிக்கு ஆதரவளித்துள்ளது. சிரியாவில் நிகழும் அரச ராணுவ அடக்கு முறை காரணமாக ஆயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் தஞ்சம் கோரி வருகின்றனர்.

இதில் லெபனானுக்கு தப்பிச் செல்ல முனைந்த நபர் ஒருவர் சிரிய ராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும் தகவல் வெளி வந்திருந்தது. மேலும் அகதிகள் இடம் பெயராமல் இருப்பதற்காக எல்லைகளில் சிரிய ராணுவம் கன்னி வெடிகளை புதைத்து வருகின்றது. இதில் காலை இழந்த ஒருவரே லெபனானில் முதல் அகதியாக வந்துள்ளார் எனவும் தகவல்கள் தெரிவித்தன. இன்னொரு பக்கத்தில் வெளிநாட்டு ஊடகங்கள் சில அயல் நாடான ஈரான் சிரிய அரசுக்கு இராணுவம், புலனாய்வு, தொழில்நுட்பம், ஆயுதங்கள், சினைப்பர்கள் முதலிய விடயங்களில் உதவுவதாக குற்றம் சாட்டியுள்ளன. இவ்வருடம் 2012 இல் ஆவது சிரியாவில் மக்கள் புரட்சி பாரிய இழப்புக்கு பின்னரும் தொடர்ந்து வெற்றி பெறுமா அல்லது சில மேற்குலக நாடுகளின் அனுசரையோடு அரசாங்கத்தின் அடக்கு முறை தொடருமா என பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இந்த கலவரத்தை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. சபையும், அரபு கூட்டமைப்பு நாடுகளும் தீவிர முயற்சி கொண்டுள்ளன. உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா.சபை கோபி அனனை சமாதான தூதுவராக அனுப்பியது. அவர் சிரியா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதை தொடர்ந்து 3 நாட்களுக்கு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அங்கு அமைதி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதன் பிறகும் சிரியா ராணுவம், போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.ஐரோப்பிய ஒன்றியம் சிரியா மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் சிரியா மீது விதிக்கும் 14 ஆவது சுற்றுப் பொருளாதாரத் தடையாகும் இது. ஜனாதிபதி பஷார் அல் அசாட் குடும்பத்தினரின் சொகுசு வாழ்க்கையைத் தடுக்கும் வகையில் ஆடம்பரப் பொருட்களை அந் நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகள் ஒப்புக் கொண்டிருக்கின்றன. ஆனால் சிரியாவில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு ஐ.நா. பார்வையாளர்களை அங்கு அனுப்புவதற்கு சம்மதித்திருக்கும் ரஷ்யா இந்தப் புதிய தடைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறது. சிரியாவில் ஏற்கனவே 30 ஐ.நா. பார்வையாளர்கள் இருக்கிறார்கள். அனானின் திட்டப்படி பார்வையாளர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. வரும் நாட்களில் அவர்கள் சிரியாவுக்குச் சென்று யுத்த நிறுத்த நிலைமையைக் கண்காணிப்பார்கள் என்று கூறப்படுகிறது.

சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள ஐ.நாவின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மற்றும் கடமையிலுள்ள யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. சிரியாவில் மீண்டும் இடம்பெற்றுள்ள தாக்குதல் சம்பவங்களும் அதனால் பதிவாகியுள்ள உயிரிழப்புக்களையும் அடுத்தே இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. அனானின் யுத்த நிறுத்த ஏற்பாட்டுக்குப் பிறகும் பல இடங்களில் வன்முறை நடந்து வருவதாகவும் கடந்த வார இறுதியில் பல்வேறு இடங்களில் நடந்த மோதல்களில் பலர் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

சிரியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அரசியல் ரீதியான செயன்முறை ஒன்றை உருவாக்க வேண்டும் என அரபு லீக்கின் பொது செயலாளர் Nabil el-Arabi தெரிவித்துள்ளார். சிரியாவுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது. கடந்த வருடம் லிபியாவுக்கு எதிரான ஆயுத நடவடிக்கையையும், பிரான்ஸே ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக, சிரியாவில் விடியலை விரும்பும் மக்கள் பாதுகாக்கப்பட்டு நீதியும் மனித உரிமைகளும் நிலைநாட்டப்படுமா? அல்லது பஷர் அல் அஸத் உடைய இராணுவ அடக்குமுறைகள் தொடருமா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை மனித உரிமை ஆர்வளர்களிடமும் அமைப்புக்களிடமுமே ஒப்படைத்து காத்திருக்க வேண்டியுள்ளது.



Kingsbury இல் புதியதோர் உதயம்.
உங்களின் சகலவிதமான தையல் வேலைகளுக்கும்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களுக்கும் தேவையான Video, Photo, DJ, Hall Decoration போன்ற அனைத்துத் தேவைகளுக்கும்

விஜயம் செய்யுங்கள்.
J.R Station Market, 530 Kingsbury Road, London NW9 9HE
Phone:07417416584, 07508441362

HAPPY VESAK

# VESAK SPECIALS

FROM TRAVEL CENTER UK.co.uk IN TICKETS TO SRI LANKA

Tickets to SriLanka — WWW.TICKETSTOSRILANKA.CO.UK

உங்களின் சகலபயணத்தேவைகளை ஒரே கூரையின் கீழ் பூர்த்தி செய்துகொள்ள அழையுங்கள்

**£180+**
12,000 miles
CASH PLUS MILES OFFER
SriLankan Airlines

## WORLD WIDE FLIGHTS

atlantic, CATHAY PACIFIC, QANTAS, US AIRWAYS, IBERIA, Kenya Airways, KLM, Alitalia, DELTA, AIRFRANCE, BRITISH AIRWAYS, TAM AIRLINES, SINGAPORE AIRLINES

**CALL NOW ON**
**0800 368 5098**
**0207 612 0569**

FREE AIRPORT TRANSER WITHIN COLOMBO 01-15

## « WORLD FARE GUIDE »










### INDIA / SRI LANKA

| | |
|---|---|
| Colombo | £125+ |
| Chennai | £78+ |
| Goa | £180+ |
| Cochin | £180+ |
| Kolkata | £200+ |
| Hyderabad | £180+ |
| Trivandrum | £180+ |

### ASIA / MIDDLE EAST

| | |
|---|---|
| Singapore | £90+ |
| Dubai | £40+ |
| Bangkok | £90+ |
| Hongkong | £115+ |
| Kathmandu | £170+ |
| Phnom Penh | £180+ |
| Koh Samui | £242+ |

### AUSTRALIA / NZ

| | |
|---|---|
| Auckland | £285+ |
| Adelaide | £285+ |
| Perth | £270+ |
| Sydney | £160+ |
| Melbourne | £160+ |
| Brisbane | £285+ |
| Cairns | £285+ |

### USA / CANADA

| | |
|---|---|
| Kingston | £326+ |
| New York | £94+ |
| Miami | £153+ |
| Boston | £114+ |
| Orlando | £162+ |
| Toronto | £122+ |
| Vancouver | £124+ |

### AFRICA

| | |
|---|---|
| Jo'burg | £106+ |
| Capetown | £176+ |
| Cairo | £45+ |
| Accra | £70+ |
| Nairobi | £61+ |
| Durban | £172+ |
| Lagos | £68+ |

### SOUTH AMERICA

| | |
|---|---|
| Lima | £158+ |
| Bogota | £228+ |
| Rio | £106+ |
| Sao Paulo | £160+ |
| Caracus | £65+ |
| Cali | £228+ |
| Montevideo | £409+ |










All tour package prices are per person and excluding flights

**Please call us for more flights.**
**All Fares are subjected to availability & Taxes**

| TILANI | NARESH | MICHELLE |
|---|---|---|
| EXT: 6002 | EXT: 6027 | EXT: 6016 |

**Talk to Our Bilingual Agent**

Featured Airlines To Sri Lanka

SriLankan Airlines

WWW.TICKETSTOSRILANKA.CO.UK

KUWAIT AIRWAYS, QATAR, ROYAL JORDANIAN, ETIHAD, OMAN AIR, Emirates, GULF AIR, JET AIRWAYS

ATOL PROTECTED 3517 — IATA

**EMERGENCY HOTLINE**
Gladwin (Colombo): +94777635008

TravelCenterUk assures you the best quality of service available; all advertised fares are of real time itineraries during the issue publication. For more details on the terms and conditions please visit us at www.travelcenteruk.co.uk/terms.php. Fares are highly subjected to availability and changes without any prior notice. Travel conditions apply. Please be informed these fares exclude taxes.


TRAVEL CENTER UK.co.uk — Tickets to SriLanka

38, RIDING HOUSE STREET, LONDON W1W 7ES, UK
E mail : info@tcukmail.co.uk
Website : www.travelcenteruk.co.uk
www.ticketstosrilanka.co.uk

# தாயகச் சுடர்

## தமிழ் பிரச்சினைகளை அரசு குறுகிய சிந்தனையுடன் நோக்குகிறது

இரா.சம்பந்தன்



தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் மிக குறுகிய சிந்தனையுடன் நோக்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் தேசிய மே தின கூட்டம் யாழ் - குருநகரில் 01.05.2012 அன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும், தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட்டு தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தேசிய பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளதாக இதன்போது கூறிய அவர், அரசாங்கத்துடனான இதுவரையிலான பேச்சுவார்த்தையில் இன்று வரை தீர்வு எட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். இந்த நிலையில், தமிழ் மக்களின் பிரச்சனைக்கு அரசாங்கம் தீர்வை முன்வைத்தால் புலம்பெயர் மக்களின் உதவிகளும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையில் மனித உரிமைகள் இன்னமும் முன்னேற்றம் காணவில்லை




இலங்கை இன்னமும் கவனிக்கத்தக்க நாடு என்று 2011 ஆம் ஆண்டுக்கான பிரித்தானிய வெளியுறவு மனித உரிமைகள் அறிக்கை தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் வில்லியம் ஹேக்கினால் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும், 2011 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் போருக்குப் பின்னர் புனரமைப்புக்களை மேற்கொண்டு வருகிறது. விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமுகத்துடன் இணைக்கப்படுகின்றனர். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும், அவை இன்னும் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏராளமானோர் போரின் போது கைதுசெய்யப்பட்டு இன்னமும் விசாரணைகள் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் இன்னமும் முன்னேற்றம் காணவில்லை. பேச்சு சுதந்திரத்துக்கு இன்னமும் கட்டுப்பாடு உள்ளது. காணாமல் போனோர் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. அத்துடன், இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து அரசாங்கம் இன்னமும் உரிய பொறுப்புக் கூறலை வழங்கவில்லை. இந்த நிலையில், 2012ஆம் ஆண்டிலாவது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரித்தானியா நம்புகிறது. அதற்கான உதவிகளை வழங்கவும் தயாராக உள்ளது. என்று விபரிக்கப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம்

ஐரோப்பிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. இந்த குழு 30.04.2012 அன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக கொழும்பிலுள்ள ஐரோப்பிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. இலங்கையுடனான உறவை மேம்படுத்தும் நோக்கிலும், நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராயும் நோக்கிலேயே குறித்த குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த குழு எதிர்வரும் 5ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் என உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. குறித்த குழுவில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐவர் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்த குழுவினர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

## கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கத் தயார் மே தினத்தில்: ரணில்

தமிழ் மக்களின் விடிவுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு வலுவூட்டும் வகையில் பொறுப்பான ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில் முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, யாழ். நகரில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டு தேசிய மே தின விழா மேடையில் உறுதியளித்தார்.
வட பகுதியில் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வன்னி மக்கள் நரகத்தில் வாழ்வதைப் போன்றே வாழ்கின்றனர். இவற்றை நான் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன். இவர்களுக்கு விடிவு ஏற்படுத்த வேண்டும் எனவும் ரணில் அங்கு வலியுறுத்தி உள்ளார். தவறினால் அனைத்து எதிர் கட்சிகளும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவோம். இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்டது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள், எரிபொருள்களின் விலைகள் அதிகரித்து விட்டன, எனவும் தெரிவித்தார்

## நாடாளுமன்ற பதவிக்காலத்தினுள் நாட்டிலுள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தினுள் நாட்டில் காணப்படும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த நிலைப்பாட்டிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் தேசிய மே தின கூட்டம் யாழ் - குருநகரில் 02.04.2012 அன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யுத்தத்தினால் வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியேற்றுவதாக கடந்த 2009ஆம் ஆண்டு அரசாங்கம் உறுதியளித்ததாக கூறிய அவர், இந்த உறுதிமொழியை அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். மேலும் முகாம்களிலுள்ள மக்கள் நரக வாழ்க்கையினையே அனுபவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நிலைமை எதிர்க்காலத்திலும் தொடருமானால் இடம்பெயர்ந்துள்ள மக்களையும் வீதியில் இறக்குவதற்கு தய்ாராக உள்ளதாக அவர் அறிவித்தார். இதேவேளை, இயலுமானால் கே. பி. என்ற குமரன் பத்மநாதனுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை அரசாங்கம் அசைக்க வேண்டும் என அவர் இதன்போது சவால் விடுத்தார்.

## புனர்வாழ்வு நிலையங்களில் இன்னும் 650 முன்னாள் போராளிகளே எஞ்சியுள்ளனர்



புனர்வாழ்வு நிலையங்களில் இன்னும் 650 முன்னாள் போராளிகளே விடுவிப்பதற்கு எஞ்சியுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்கள் தற்போது 4 நிலையங்களில் புனர்வாழ்வு பெற்று வருவதாகவும், இவர்களுக்கான தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவர்கள் வெகு விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ. திஸாநாயக்க கூறியுள்ளார்.

## பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களை சில தமிழ் அரசியல் தலைமைகள் சரிவர பயன்படுத்தவில்லை



தமிழ் மக்கள் பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்களை சில சுயலாப தமிழ் அரசியல் தலைமைகள் சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழிற்றுறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் 01.05.2012 அன்று நடைபெற்ற ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கும்போது சந்தர்ப்பத்தை தமிழ்க் கட்சிகள் தவறவிட்டதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.
மேலும், உணர்ச்சி பொங்க பேசுவதும், மக்களை வீதிக்கு அழைத்து விட்டு, தாம் மட்டும் தமது குடும்பங்களோடு நாட்டை விட்டே தப்பித்து ஓடுவதும், தமிழ் மக்களுக்கான உரிமைபோராட்டமல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

## த.தே.கூ இற்கு எதிராக் சி.தே.கூ மனுத்தாக்கல

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித் தமிழ் இராச்சியக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதாக நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சிங்கள தேசியக் கூட்டமைப்பு என்னும் அமைப்பினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ போன்ற கட்சிகளின் பெயர்களிலேயே தனித் தமிழ் இராச்சியக் கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த கட்சிகளினால் தனித் தமிழ் இராச்சியக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1995 திம்பு தீர்மானத்தின் போதும் குறித்த கட்சிகள் தனித் தமிழ் இராச்சியம் பற்றி வலியுறுத்தியிருந்தன. தேர்தல் விஞ்ஞாபனங்களின் போதும் தனி நாட்டு கோரிக்கை பற்றி குறிப்பிட்டுள்ளன. இந்தக் கட்சிகள் இலங்கையை ஓரே நாடாக ஏற்றுக் கொள்ளும் அடிப்படை அரசியல் சாசன விதியை மீறிச் செயற்பட்டுள்ளன என்று சிங்கள தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் ஜயந்த லியனகே தெவித்துள்ளார்.

# இந்திய சுடர்

## பா.ஜ.க முன்னாள் தலைவருக்கு நான்கு வருட சிறை




இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிதக்கப்பட்டுள்ளது.

11 வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினருக்கு நவீன கருவிகள் வழங்கும் ஒப்பந்தம் பெற்று தருவதாகக் கூறி, இலஞ்சம் பெற்ற வழக்கிலேயே பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் பங்காரு லட்சுமணனுக்கு நான்கு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த 2000-2001 ஆம் ஆண்டுகளில் பாரதிய ஜனதா கட்சி தலைவராக பங்காரு லட்சுமணன் பதவி வகித்தார். அதன்போது இணையதளம் ஒன்று இராணுவத்திற்கு ஆயுதங்கள் பெற்றுக்கொள்வதில் ஊழல் நடப்பதாக சுட்டிக்காட்ட போலியாக சில விடயங்களை முன்னெடுத்தது. அதன்படி, நிருபர்களே ஆயுத தளபாட நிறுவனங்களை சேர்ந்தவர்களை போல் நடித்து, பங்காருவை சந்தித்து இந்திய இராணுவத்திற்கு நவீன கருவிகளை விநியோகம் செய்ய ஒப்பந்தம் அளிக்குமாறு இராணுவ அமைச்சகத்திடம் பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொண்டனர். இதற்கு இலஞ்சமாக பணம் பெற்றுக் கொண்ட போது குறித்த இணையத்தள நிருபர்கள் இரகசியமாக ஒளிப்பதிவு செய்துகொண்டு அதனை வெளியிட்டு பரபரப்பை எற்படுத்தினர்.

இதைத் தொடர்ந்து பங்காரு லட்சுமணன் தமது கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகியதோடு அவர் மீது வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்ததோடு பங்காருவை குற்றவாளியென நீதிமன்றம் அறிவித்தது. அதனை அடுத்து அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிமன்றம் தீப்பளித்தது. 10 ஆண்டுகளுக்கு பிறகு இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தன் பிள்ளைகளின் போரை தமிழீழம் மூலம் கருணாநிதி திசைதிருப்புகிறார்



இலங்கையில் தமிழீழம் அமைக் கட்படவேண்டும் என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மீண்டும் மீண்டும் கோரி வருகிறார். இது, தமது மகன்மாரான ஸ்டாலின் மற்றும் அழகிரி ஆகியோருக்கு இடையிலான பிரச்சினையை திசை திருப்புவதற்காக மேற்கொள்ளப்படும் உத்தியாகும் என்று "தெ டெலிகிராப்" (The Telegraph) தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழீழம் உருவாக்கப்படவேண்டும் என்பதற்காக 1980ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர்களின் அமைப்பான டெசோ அமைப்பின் கூட்டம் 30.04.2012 அன்று சென்னையில் கருணாநிதியின் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமைப்பு செயற்பட்டு வந்தபோதும் 1991 ஆம் ஆண்டு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் செயல் இழந்து போனது. இந்நிலையில் கருணாநிதி மீண்டும் தமிழீழத்தைப் பற்றி கூறுவது தமது மகன்மார்களுக்கு இடையிலான போரை மறைப்பதற்கான உத்தியாகும் என்று தெ டெலிகிராப் குறிப்பிட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் இடம்பெற்ற போது, இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எவ்வித அழுத்தங்களையும் கருணாநிதி கொடுக்கவில்லை. அதேவேளை, இந்திய இராணுவத்தை அனுப்பி தமிழர்களை காப்பாற்றவேண்டும் என்று அப்போதைய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கோரியபோது அதனை அரசியல் லாபம் என்று கருணாநிதி குறிப்பிட்டதாக தெ டெலிகிராப் சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தற்போது தமிழீழம் மீது காதல் பிறந்துள்ளது. இது 2014 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலை மையமாக வைத்து நடத்தப்படும் பிரசாரம் என்று தமிழகத்தின் அரசியல்வாதிகளான வைகோ மற்றும் விஜயகாந்த் ஆகியோர் குற்றம் சுமத்தியுள்ளனர். எனினும் இந்திய தேர்தலில் இலங்கை தமிழர்களின் பிரச்சினை தாக்கத்தை ஏற்படுத்தாது என்று தெ டெலிகிராப் தெரிவித்துள்ளது.

### அசாமில் படகு விபத்து 103 பேர் பலி



இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் 103 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த படகில் 300க்கும் அதிகமானவர்கள் பயணித்ததாக காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். அசாம் மாநிலத்தின் பரஹ்மாபுத்தரா ஆற்றில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த படகு பயணிகள் பயணிப்பதற்கு தகுந்த தரத்தில் இருக்காமையே இந்த விபத்துக்கான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

## இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற 500 பேர் கைது




சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற முஸ்லிம்கள் 500 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவ பொம்மையை எத்ரித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் பள்ளிவால் சேதப்படுத்தப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் சென்னையில் இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழக பொதுச்செயலர் அப்துல் சமது தலைமையில் இடம் பெற்ற இந்தப் போராட்டத்தில் ம.தி..க., விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவாளர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்கா அருகில் இலங்கை அரசை கண்டித்து கோஷமிட்ட அவர்கள், உருவ பொம்மையொன்றையும் தீயிட்டு கொளுத்தினார்கள். பின்னர் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டு இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற அவர்களை, பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

## ராஜிவ் கொலையாளிகளின் வழக்கு: உச்சநீதிமன்றத்துக்கு மாற்றம்



பேரறிவாளன் முருகன் சாந்தன்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் தாக்கல் செய்த கருணை மனுக்கள் தமிழகத்தில் இருந்து உச்சநீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
இந்த மனுக்களை தமிழக நீதிமன்றத்தில் இருந்து மாற்ற உச்சநீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது. முன்னதாக இவர்களின் கருணை மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித்திருந்தது. தங்களின் கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க குடியரசுத் தலைவர் 11 ஆண்டுகள் எடுத்துக் கொண்டதால் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்திவைக்க வேண்டும் என்று 3 பேரும் முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தனர். கொலையாளிகள் 3 பேர் தங்களுக்குரிய தூக்கு தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு தொடர்பான இறுதி முடிவை இனி உச்சநீதிமன்றம்தான் அறிவிக்கும். இதனால் தூக்கு நிறைவேற்றுவதா வேண்டாமா என்பதில் விரைவில் தீர்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரதீபா பாட்டீல் தென்னாப்பிரிக்கா விஜயம்

ஜனாதிபதி பிரதீபா பட்டீல் 2 நாள் செசல்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு தென்னாப்பிரிக்கா சென்றுள்ளார். தென்னாப்பிரிக்கா தலைநகர் பிரிட்டோரியா விமான நிலையத்தில் இறங்கிய பிரதீபா பட்டீலை, அந்நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் நகோனா மஷாபானே வரவேற்றார்.

இதையடுத்து தென்னாப்பிரிக்கா ஜனாதிபதி ஜேக்கப் ஜுமாவை பிரதீபா பட்டீல் சந்தித்து பேசியுள்ளார். அப்போது இரு தரப்பு உறவு, பிராந்தியப் பிரச்சினைகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதியுடன் சென்றுள்ள இந்திய வர்த்தகக்குழுவினர் இந்திய-தென்னாப்பிரிக்க வர்த்தக மன்றக்கூட்டத்தில் பேசியுள்ளனர். தென்னாப்பிரிக்காவில் ஒரு வார காலம் தங்கி இருக்கும் காலத்தில் மகாத்மா காந்தியுடன் தொடர்புடைய இடங்களை பிரதீபா பட்டீல் பார்வையிடுவார் என தகவல் வெளியாகியுள்ளன.

## சிறுமி நரபலி வழக்கின் கைதி அயூப்கான் திமுகவில் இருந்து நீக்கம்



மதுரையில் சிறுமியை நரபலி கொடுத்த வழக்கில் கைதாகி சிறையில் இருக்கும் முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவரும், திமுக மாநில செயற்குழு உறுப்பினருமான அயூப்கான் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகில் உள்ள கச்சைக்கட்டி கிராமத்தை சேர்ந்த கூலித்தொழிலாளி தொத்தன் என்பவரின் இளைய மகள் ராஜலட்சுமி(5) நரபலி கொடுக்கப்பட்டார். இந்த வழக்கில் முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவரும், திமுக மாநில செயற்குழு உறுப்பினருமான அயூப்கான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரை திமுகவில் இருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- கிருஷ்ணா -

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவினரது இலங்கைக்கான வருகை அவர்களுக்கு பல புதிய அனுபவங்களை வழங்கியுள்ளது. வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கை திரும்பி விட்டதாக காண்பிக்க அரசு முற்பட்ட போதும் அரசின் பங்காளிகளால் அவை போட்டுடைக்கப்பட்டு விட்டது என்பதே உண்மையாகும். இலங்கை விஜயத்தின் மூலம், இந்திய பாராளுமன்றக் குழுவுக்கு என்ன வகையான உணர்வு ஏற்பட்டிருக்கின்றது என்பது உடனடியாகத் தெரியவில்லை. இருப்பினும் இந்த விஜயமானது இலங்கையில் பலதரப்பினர் மத்தியிலும் பல்வேறு உணர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களின் வெளிவராத சொல்லொணாத் துயரங்கள் பலவும் கேட்பாரின்றி மௌனித்து போயுள்ளன. இலங்கை வந்த இந்தியக் குழு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் அகதி வாழ்விற்கும் என்ன பதில் சொல்லப் போகின்றது?



# இதுவும் பழைய புராணம் தானா ?

இதற்கு முன்னரும் தமிழக எம்.பி. க்கள் குழு இலங்கைக்கு வந்திருந்தபோது இன்றைய சூழலை விட மோசமான மக்கள் அவலங்களை அன்று கண்டு விட்டுச் சென்றனர். ஆனால் இவர்களால் இதுவரைக்கும் சாதிக்க முடிந்தது ஒன்றுமில்லை. இதே நிலைக்கு சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவும் தள்ளப்படுமா? அல்லது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒருநிரந்தரமான தீர்வை பெற்றுக் கொடுக்குமா? இவ்வாறான ஆதங்கம் எல்லா தமிழர் மனதிலும் தோன்றியிருந்தது. சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்த குழு இலங்கையில் ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை 6 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. 21ஆம் திகதி டெல்லிக்கு இந்த குழு திரும்பியது. இலங்கை வாழ் தமிழர்களின் கடந்த கால வரலாற்று அத்தியாயங்கள் பாரிய ஏமாற்றத்துக்கு உள்ளான ஏடுகளாகவே காணப்படுகின்றன. தமிழ் மக்களின் அரசியல் உள்ளிட்ட ஏனைய அனைத்து பிரச்சினைகளும் வெளியுலகுக்கு தெரியவந்தும் அதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதில் இம் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அழுத்தங்களும் எண்ணிலடங்காதவை.
வன்னியில் போர் முடிவடைகையில் அனைத்தையும் இழந்த பாவப்பட்டவர்களாக சொந்த நாட்டிலேயே அநாதைகளாக முகாம் வாழ்விற்கு தள்ளப்பட்டனர். இவர்களை வெளிநாட்டு குழுவினர்கள் ஏதோ காட்சிப் பொருட்களை பார்வையிடுவது போலவே பார்த்துவிட்டு சென்றனர்.
இந்நிலையில் எவ்விதமான மாற்றம் இன்றி இன்றும் அம் மக்கள் அதே அநாதை வாழ்வையே வாழ்கின்றனர். யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களாகியும் முகாம் வாழ்க்கை முடிவடையவில்லை. பலர் பலதும் கூறுகின்றனர். அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு என்று பேச்சுக்களாலேயே காலம் கடத்தப்படுகின்றதே தவிர மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையிலேயே உள்ளது. எமது தோழ நாடான இந்தியாவிற்கு அனைத்து சந்தர்ப்பங்கள் முன்பும் தற்போதும் காணப்படுகின்ற போதிலும் அவர்களின் தொப்புள் கொடி உறவுகளுக்காக குரல் கொடுப்பதில் உரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அரசியலுக்கே முக்கியத்துவம் அளித்து செயற்படுகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் இந்தியாவுக்கு புதிய விடயமல்ல. இங்கு வந்துதான் இம்மக்கள் படும் துன்பங்களை காண வேண்டும் என்ற நிலையும் அல்ல. காலாகாலமாக தமிழ் மக்களின் அரசியல் உள்ளிட்ட அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவிற்கு பூரண தெளிவு உள்ளது. இதனால்தான் 1989 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்று வலியுறுத்தி இருந்தது. இதனை இந்தியர்களும் இலங்கை வாழ் தமிழர்களும் மறந்திருக்க வாய்ப்பில்லை.

எவ்வாறாயினும் பழையவற்றை கிளருவதால் வேதனையைத் தவிர வேறொன்றும் ஏற்படப் போவதில்லை. இலங்கையில் உயிர் வாழ்வதற்கு கையேந்தும் நிலையிலேயே தமிழர் உள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் சர்வதே பார்வை இலங்கை மீது கண் கொண்டு நோக்குகையில் இந்தியாவின் தற்போதைய காங்கிரஸ் அரசு அனைத்து கட்சிகளாலும் உள்வாங்கப்பட்ட தனது பாராளுமன்ற குழுவொன்றினை இலங்கைக்கு அனுப்பிவைத்தது. இக்குழுவிற்கு அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவியும் பாரதீய ஜனதாக் கட்சியின் தற் போதைய தலைவியுமான சுஷ்மா சுவராஜ் தலைமை தாங்கி இலங்கையின் வட கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராயவும் அதற்கான தீர்வுக்கு உள் நாட்டு அரசு உட்பட ஏனைய அரசியல் கட்சிகளும் முன் வைக்கும் யோசனைகளை கேட்டறியவும் முற்பட்டனர்.

இக்குழுவின் வருகையில் இன்றும் வடக்கு மக்களின் அழியா போர் வடுவாக காணப்படும் செட்டிக்குளம் மெனிக்பாம் முகாமிற்கான விஜயமானது பல்வேறு விடை தெரியாத கேள்விகளுக்கும் இந்திய குழு உறுப்பினர்களின் மனச்சாட்சியை தொடும் வகையிலும் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் கேள்விகளை தொடுத்தனர். இவை சாதாரண வார்த்தைகளாக அம் மக்களின் வாய்களிலிருந்து வரவில்லை என்பதனையும் இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவினர் புரிந்து கொண்டனர். இலங்கை வந்திருந்த இந்திய ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற தூதுக் குழுவினர் தமது நடவடிக்கைகளை முடித்துக்கொண்ட நிலையில் கொழும்பு தாஜ்சத்திரா ஹோட்டலில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தினர் அதில் கலந்து கொண்டு கருத்துத் தெவித்த சுஷ்மா சுவராஜ், "இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் தேக்க நிலையில் கிடப்பதை அனுமதிக்க முடியாது. இதற்கான தடைகள் அகற்றப்பட்டு பேச்சுவார்த்தைகள் தாமதமின்றி ஆரம்பமாக வேண்டும்" என்று தெரிவித்திருந்தார். அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து அமுல்படுத்த வேண்டும் எனவும், ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்கவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு கோரியே வாக்களித்தது என்றும் குறிப்பிட்டார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கை வந்தபோது வட பகுதி மக்களிடையே தங்கள் எதிர்காலம் குறித்து அச்ச உணர்வு காணப்பட்டது. இப்போது அவர்கள் இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என விரும்புவதை உணர முடிந்தது என தமிழகத்தைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் கூறினார். கடந்த 23 ஆம் திகதி இந்திய அரசால் இலங்கைக்கு அனுப்பி வைத்த குழுவின் தலைவர் சுஷ்மா சுவராஜ், பிரதமர் மன் மோகன் சிங்கை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து தனது தலைமையிலான குழு இலங்கையில், இலங்கை தமிழர்களின் உண்மை நிலை என்னவென்றும், இந்திய அரசு உதவியினால் நடைறைபடுத்தப்பட்டு வரும் திட்டங்களின் நிலை குறித்தும் விளக்கம் அளித்தார்.

இறுதியாக நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான சுதர்சன நாச்சியப்பன், எம்.கிருஷ்ணசாமி, என்.எஸ். வி. சித்தன், மாணிக் தாகூர் ஆகியோர் பிரதமர் மன் மோகன் சிங்கை 26 ஏப்ரல் வியாழக்கிழமை மதியம் நாடாளுமன்ற வளாகத்தில்உள்ள அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து 10 அம்சங்கள் அடங்கிய மனு ஒன்றை பிரதமரிடம் அளித்துள்ளனர்.

சீனா இலங்கைக்குள் தடம் பதிக்கின்றது. எனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளை காரணம் காட்டி இலங்கையில் இந்தியா செயற்படுவதாக , உள்நாட்டில் பல தரப்புகள் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன. எனவே ஒளிவு மறைவுகளுக்கு இடமின்றி மக்கள் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் பாதுகாக்க வேண்டியது டெல்லியின் பொறுப்பாகும்.


தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

அன்பான அடியார்களே!
ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தவேளையில் திருப்பணி வேலைகளை முழுமையாக செய்து முடிப்பதற்காக ஆலய பரிபாலசபையினருக்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் சகல வழிகளிலும் தேவை. தாங்கள் விரும்பிய குறித்த வேலையை முழுமையாகவோ பகுதியாகவோ செய்யலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : கு. மயூரன்
0775359103
0212220325



Discover the world with....
Serendib Lanka Travels Ltd

COLOMBO SPECIAL
Emirates £485 Jet Airways £490
Gulf £500 Qatar £570
Kuwait £450 Etihad £587

SRILANKAN SPECIAL
Colombo £545 Chennai £500
Trichy £500 Kualalumpur £590
Singapore £590

INDIA SPECIAL
Chennai £460 Chennai £560
(Direct on British Airways)
Trichy £500

CANADA SPECIAL
Toronto £510 Montreal £545
Ottawa £590

WORLD WIDE SPECIAL
Sydney £795
Melbourne £680
Oslo £155
Zurich £135
Geneva £125
New York £410
Washington DC £420

All fares mentioned are low seasons including taxes

பாடசாலை விடுமுறையின் போது இலங்கை செல்வோருக்கு விசேட சலுகைகள்

LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
E.Mail : info@serendib-lanka.co.uk
IATA



# இலங்கையின் இன முரண்பாடுகளின் பின்னணியில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்திவரும் "மதம்"

– சிவா –

பொதுவாக முரண்பாடுகள்நபர் அல்லது குழுவினால் வலிமை குறைந்தவர்கள் மீது ஆதிக்கம் அடக்குமுறைகள் ஏற்படுத்தப்படுகின்ற போதும் அவர்கள் உரிமைகள் மறுக்கப்படும் போதும் மற்றும் பொருந்தாத விடயங்களுக்கு சமூகக் குழுவினரை வலியுருத்தும் போ தும் ஏற்படக்குடியவை. ஆரம்பத்தில் பிணக்குகளாக உருவெடுப்பவை தீர்க்கப்படாத போது முரண்பாடுகளாக மாற்றமடைகின்றன.

மதங்களுக்கு இடையே கொள்கை அடிப்படையில் மத முரண்பாடும், மொ ழி அடிப்படையில் மொழி முரண்பாடும் ஏற்படுகின்றது. இலங்கையைப் பொறு த்தவரையில் மதம், மொழி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் முரண்பாடு காணப்படுகின்றது.

அண்மையில் தம்புள்ளை நகரிலுள்ள முஸ்லிம்களின் வணக்கஸ்தலமான மஸ்ஜிதுல் ஹைறியா ஜும்மாப் பள்ளிவாசலை அகற்றுமாறு கோரி அண்மை யில் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். தம்புள்ளை ரஜமஹா விஹாரைக்கு அருகில் அமைந்துள்ள இந்த பள்ளிவாசலை அகற்றுமாரு. பள்ளிவாசலையும் சேதப்படுத்தினர். பின் இந்த விடயம் நாடு முழுவதும் முக்கியமாக முஸ்லீம் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த விடயம் தொடர்பாக முஸ்லீம் அரசியல் கட்சிகளும் உறுப்பினர்களும் நாடகத் தன்மையிலான அசமந்த போக்கையே கடைப்பிடித்திருந்தனர். பொய்யான ஆவணங்களை சுட்டிக்காட்டுவதும் நடக்காத கூட்டம் நடந்தது எனக் கூறுவதும் என்று பிரதமர் உட்பட அரசியல் தலைவர்களின் வேடிக்கையான போக்குகள் மக்களுக்கு புலப்பட்டது.

இலங்கையின் வரலாற்றை நன்கு அறிந்தவர்களுக்கு இந்த விடயம் புதிதாக இருக்காது என்பது மட்டும் உண்மை. ஏனெனில் இவாறான பல சம்பவங்களையும் அரசியல் தலைவர்களையும் கடந்து வந்ததுதான் இலங்கை அரசியல் வரலா று. நாம் கடந்து வந்த பாதைகளை சற்று மீட்டிப்பார்ப்போமானால் இந்த விடயம் தெளிவாகும்.

குடியேற்ற ஆட்சியின் பின்னர், தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசுகள் மொழி, மதம் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்றுவரை இந் நாடுகளின் தேசிய ஒருமைப்பட்டிற்கு ஊறு விளைவிப்பனவாக இயங்குவதனைக் காண முடிகின்றது. இந் நாடுகளில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் ஏனைய சிற்பான்மை இனத்தவர்களுக்கும் இடையிலே ஒற்றுமையின்மையையும் பகமை உனர்வையும் ஏற்படுத்தும் காரணிகளாக மொழி, மதம் இரண்டும் விளங்குவதை அவதானிக்கலாம்.

சுதந்திரத்திற்கு முன்னர் ஒன்றுபட்டிருந்த இனங்கள் பின்னர் ஒன்றையொன்று எதிர்த்து முரண்படத் தொடங்கினர். ஆட்சி உரிமை, கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் அரச உத்தியோகம் என்று தமது கோரிக்கைகளை முன்வைத்த சிறுபான்மை இனங்களுக்கு உரிய வகையில், பெரும்பான்மையினம் பதிலளிக்கத் தவறியமையால் இனக்குரோதம் வளர்ந்தது.

இலங்கையில் "இலங்கையர் தேசி யவாதம்" என்ற ஒன்று வளராமல் போன மை மற்றும் சிங்கள, பௌத்த தேசி யவாதம் வலுப்பெற்ற சக்தியாக இலங்கை அரசியலில் செயற்பட்டமை ஆகிய இரண்டிற்கும் ஒரு காரணமே பிரதானமானதாக உள்ளது. அது சிங்கள மொழியும் பௌத்த மதமும் நெருங்கிய வகையிலே பிணைக்கப்பட்டிருந்தமையே ஆகும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் அதிகாரத்திலிருந்த மேலைத்தேய மயமான மத்திய வகுப்பினர்க்கும், சிங்கள மொழியில் கல்வி கற்ற பிரிவினர்க்கும் இடையி ல் "தேசியவாதம்" பொறுத்து முக்கிய வேறுபாடு காணப்பட்டது. முதற் பிரிவினர் தேசியம் எனும்பொழுது நாடளாவிய ஒன்றாகக் கொள்ள, இரண்டாம் பிரிவினர் அதனை இனம் என்பதுடன் அடையாளம் கண்டனர். அவ்வாறே முதற் பிரிவினர் மதச்சார்பற்ற ஒன்றாகவும் மற்றவர் மதத்துடன் தேசியத்தை நெருங்கிய வகையிலே இணைத்துக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இதனால் தான் நாடு தழுவிய இலங்கையர் தேசியவாதம் ஒன்று வளர்ச்சியடையாமல் சிங்கள மொழி, பௌத்த மதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சிங்கள பௌத்த தேசியவாதம் வளர்ச்சியுற்று, ஏனைய மக்களின் நலன்களுக்கு மாறான வகையிலே செயற்படலாயிற்று. இத்தகைய போக்கு இலங்கையின் பல்லினத் தன்மை கொண்ட குடித்தொகையினரை இன, மொழி, மத அடிப்படையில் பிளவுபடுத்த வழிவகுத்தது.

1948 இல் டி.எஸ். சேனநாயக்கா தலைமையில் ஆட்சியை அமைத்துக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், மதம் தொடர்பாக தனிப்பட்ட ஆர்வம் எதுவும் கொண்டிருக்கவில்லை. அவர்களிடம் மேலைத்தேய பண்புகளும் தாராண்மைக் கொள்கைகளும் காணப்பட்டன. இவர்கள் ஆட்சியில் இருந்தபோது, 1950 களின் ஆரம்பத்தில் டாக்டர். ஜி.பி. மலலசேகரா போன்றோரும் பௌத்த பிக்குகளின் குழுக்களும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு கோரிக்கைகளை விடுத்த போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் அதனை ஏற்கவில்லை. இதனால் சிறுபான்மைஇனத்தோர் பாதிக்கப்படலாம் எனவும் தெளிவுபடுத்தினர். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்கள் மொழி, மதம் ஆகியவற்றைப் பயன்படுத்தி, இனவாத உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முற்படுகிறார். தொடந்து ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். பௌத்த மதம், சிங்கள மொழி அடிப்படையில் பிரச்சாரங்களை முன்னெடுத்த பண்டாரநாயக்காவின் பக்கம் சிங்கள மக்களின் ஆதரவு பெருகியது. இதனை பார்த்த சேர். ஜோன். கொத்தலாவல. தொடர்ந்து நடைபெறவிருந்த தேர்தலை சாதகமாகப் பயன்படுத்துவதற்காக, இதுவரை மதச்சார்பற்றதாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையில் பௌத்த மதமே அரச ஆதரவு பெற்ற மதம் என்ற கொள்கையை புகுத்தினார்.

1956 ஆம் ஆண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியத்துவம் பெற்றமை தெளிவானதே. இதற்கு பல நிகழ்வுகள் காரணமாக இருந்தன. அவற்றில் ஒன்றுதான் "புத்த ஜயந்தி தின விழா" ஆகும். மே மாதம் பூரணை தினமானது புத்தர் பரிநிர்வானமடைந்த 2500 ஆவது ஆண்டைக் குறித்து கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வும் இலங்கையில் பொதுவான ஒரு "இலங்கையர் தேசியவாதம்" மலர்வதை புறக்கணித்து, சிங்கள மக்கள் மத்தியில் பௌத்த தேசிய வாதத்தை முதன்மைப்படுத்தும் ஆர்வத்தை ஊட்டியது.

தொடர்ந்து, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஆனது பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்கான நடவடிக்கைகளை இலங்கை பூராகவும் முன்னெடுத்து வந்தது.

1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிய பண்டாரநாயக்கா, பௌத்த மதத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார், அவற்றில், "கலாச்சார அலுவல்கள் அமைச்சு" என்ற புதிய அமைச்சை ஏற்படுத்தியமை, "இரு பௌத்த பல்கலைக்கழகங்களை" நிறுவியமை, மற்றும் "பௌத்த சாசன கமிசனை" நியமனம் செய்தமை போன்ற நடவடிக்கைகள் இலங்கையில் வாழும் ஏனைய இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ மதப்பிரிவினரைப் புண்படுத்தும் தன்மை கொண்டனவாக அமைந்தன.

பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, திருமதி பண்டாரநாயக்கா அவர்களும் சிங்கள, பௌத்த மறுமலர்ச்சியின் சக்திகளுக்கு முழு வேகத்துடன் செயற்படுவதற்கு இடமளித்தார். 1956 - 1965 வரை அதிகாரத்தை கையில் எடுத்த பண்டாரநாயக்காவின் 02 அரசுகளும் சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை முன்னெடுத்தன. இவற்றில் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கியதும் முக்கியமானது.

1970 இல் மே மாதப் பொதுத்தேர்தலில் ஆட்சியமைத்த ஐக்கிய முன்னணி அரசு உருவாக்கிய "1972 குடியரசு அரசியல் திட்டம்" மற்றும் 1978 இன் "இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் திட்டம்" என்பவற்றிலும் பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

பல மதத்தோர் வாழும் இலங்கையில் தனியாக ஒரு மதத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வருகின்றமை அரசு வரலாற்றில் இழைத்துள்ள பாரிய தவறுகளின் பட்டியல்லில் முதன்மை பெறும் என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது.இலங்கையின் அரசியல் வரலாற்றிலே பௌத்த மதமும் அது சார்ந்த அமைப்புக்களும் ஏனைய மக்களின் நலன்களுக்கு மாறான வகையில் செயற்பட்டு வந்துள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓரளவு நீதியான தீர்வுகள் முன்வைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்தப் பௌத்த அமைப்புக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து அவற்றை கைவிடச் செய்துள்ளன. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து மிக அண்மையில் நடைபெற்ற தேர்தல்கள் வரை ஏனைய சிறுபான்மை மக்களின் உரிமைப் போராட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியிலேயே சிங்கள அரசியல் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளை வழங்கி அரசியல் நீரோட்டத்தில் எல்லோரையும் இணைத்துக்கொண்டு செல்வதனால் அரசிற்கு என்ன இழப்பு வந்துவிடப்போகின்றது.




# "மசாஜ்" உடலுக்கு எவ்வாறு நலம் பயக்கிறது?



இயற்கை மருத்துவ முறையில் தற்போது ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது "மசாஜ்!" பழங்காலத்தில் இருந்தே "மசாஜ்"க்கு மிக நீண்ட வரலாறு உள்ளது. இந்தியா, சீனா, கிரிஸ், ரோம், எகிப்து உட்பட பல நாடுகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, "மசாஜ்", நோய் தீர்க்கும் மருத்துவமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. "மசாஜ்" செய்வது உடல் உறுப்புகள் மற்றும் உடல் அமைப்புக்கு எவ்வாறு நலம் பயக்கிறது என்பதை விரிவாக காண்போம்.

### தோல்:

"மசாஜ்" செய்வதால் தோலில் ஏற்படும் நன்மைகள் இணையற்றது. "மசாஜ்" செய்வதன் மூலம் தோலில் காணப்படும் துளைகள் விரிவடைகிறது. இதனால் உடலில் காணப்படும் தீயகழிவுகள் வியர்வை மூலம் வெளியேறி விடும்.

### தசைகள்:

"மசாஜ்" தசைகளில் காணப்படும் இறுக்கத்தை குறைத்து, தசை வலியை நீக்குகிறது. கடினமான வேலைகளால் உடல் தசைகளில் லாக்டிக் ஆசிட் சேரும். "மசாஜ்" தசைகளில் சேரும் லாக்டிக் ஆசிட்களை நீக்கி, உடலை புத்துணர்ச்சி மற்றும் உற்சாகத்துடன் இருக்க உதவும்.

### ரத்த ஓட்டம்:

"மசாஜ்" செய்யப்படும் பகுதிகளில் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதனால் அந்த உடல் உறுப்புகளுக்கு அதிக அளவில் ஊட்டச்சத்து கிடைப்பதுடன், அந்த உறுப்புகளில் நோய் குணமாகும் தன்மையும் அதிகரிக்கும். ரத்த ஓட்டம் அதிகரிப்பதால், வீக்கம் போன்றவை ஏற்படுவது குறையும். "மசாஜ்" செய்வதால் ரத்தத்தில் அதிகளவில் ஆக்சிஜனை எடுத்துச் செல்லும் திறன் மற்றும் அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் திறன் அதிகரிக்கும்.

### நரம்பு:

நரம்புகளில் குறைந்த அழுத்தத்துடன், மெதுவாக மற்றும் மிதமாக செய்யப்படும் "மசாஜ்," நரம்புகளில் காணப்படும் இறுக்கத்தை குறைப்பதுடன், அவற்றை மென்மையாக்கும். சுறுசுறுப்புடன் செய்யப்படும் "மசாஜ்" நரம்புகளை இளக்கமடைய வைத்து அதன் ஆற்றலை அதிகரிக்கும்.

### செரிமான மண்டலம்:

வயிற்றில் "மசாஜ்" செய்வதால் செரிமான மண்டலம் தூண்டப்படுவதுடன், வயிற்றில் காணப்படும் கழிவுகளும் நன்கு வெளியேறும். மேலும் கல்லீரலின் ஆற்றல் அதிகரிப்பதால், உடலின் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

### சிறுநீர் மண்டலம்:

"மசாஜ்" செய்வது சிறுநீர் மண்டலத்தை நன்கு செயலாற்ற தூண்டுகிறது. இதனால் அதிகளவில் சிறுநீர் உற்பத்தியாகி, அதன் மூலம் உடல் கழிவுகள் விரைவில் வெளியேறுகிறது.

### இதயம்:

முறையாக செய்யப்படும், "மசாஜ்," இதயத்தில் ஏற்படும் பளுவை குறைத்து, அதன் செயல்திறனை அதிகரிக்கிறது. பொதுவாக, "மசாஜ்" செய்வதற்கு உலர்ந்த கைகளையே பயன்படுத்த வேண்டும் ஆனால், உடல் அதிக வறட்சி தன்மை உடையதாக இருந்தால் அல்லது உடல் மிகவும் பலவீனமாக இருந்தால், ஈரத்துணிகள் அல்லது மருந்து எண்ணெய்கள் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

மசாஜ் செய்வதற்கு நல்லெண்ணெய் பயன்படுத்துவது மிகவும் நல்லது. சிலர் மசாஜ் செய்யும் போது ஏற்படும் உராய்வை தவிர்ப்பதற்காக, டால்கம் பவுடரை பயன்படுத்துகின்றனர். இது உகந்தது அல்ல. இவ்வாறு செய்வதால் தோலில் காணப்படும் துளைகள் அடைபடும்.

### 'மசாஜ்' செய்வதை தவிர்க்க வேண்டிய சூழ்நிலைகள்:

* காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கும் காலங்களில் எவ்வித மசாஜும் செய்யக்கூடாது.
* கர்ப்பிணி பெண்கள் வயிற்றுப் பகுதியில் மசாஜ் செய்வதை தவிர்ப்பது நல்லது.
* வயிற்றுப்போக்கு வாயுப் பிரச்சினை, அப்பெண்டிசைட்டிஸ், சிறுகுடலில் புண்கள் அல்லது வயிற்றில் கட்டி ஆகிய பிரச்சினை உடையவர்கள் வயிற்றில் மசாஜ் செய்வதை தவிர்க்க வேண்டும்.
* தோல் வியாதிகள் உடையவர்களுக்கு மசாஜ் செய்வது பொருத்தமற்றது.

# பாடசாலை மாணவர்களுக்காக பேஸ்புக்கின் Groups for Schools என்ற புதிய வசதி




சிறியவர்களில் இருந்து பெரியவர்கள் வரை அனைவரையும் பேஸ்புக் தன்வசப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்கள் groups for schools என்ற புதிய வசதியின் மூலம் தகவல்களை பகிர்ந்து கொள்ளலாம். இதன் மூலம் பள்ளி மாணவர்கள் தங்கள் படிப்பு சம்பந்தமான பல தகவல்களை எளிதாக பகிர்ந்து கொள்ள முடியும். அது மட்டும் அல்லாமல் இந்த குழுவில் இணைந்துள்ளவர்கள் பகிர்ந்து கொண்ட தகவல்களை எளிதாக பதிவிறக்கவும் முடியும். இந்த groups for schools பக்கத்தில் உள்ள அனைத்து பைல்களையும், ஒரு க்ளிக் செய்வதன் மூலம் தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.

இதற்கு முன்பு பாடசாலையில் படிக்கும் மாணவர்களும் பேஸ்புக்கில் இணைந்து இருந்தாலும், இப்போது பள்ளி மாணவர்களுகென்றே பிரத்தியேகமாக groups for schools என்று ஒரு வசதி உருவாக்கப்பட்டு இருப்பது உண்மையில் ஒரு சிறப்பான விடயம்.

# உயர் பாதுகாப்புத் தொழிநுட்பத்துடன் Blackberry 7




Trend Micro நிறுவனம் வெளியிட்டுள்ள "Enterprise Reading of Consumer Mobile Platforms" - நுகர்வோரின் கையடக்கத் தொலைபேசிகளின் வர்த்தக ரீதியான வாசிப்பு என்ற அறிக்கையில் Blackberry 7 கையடக்கத்தொலைபேசியை உயர் பாதுகாப்பான தொழிநுட்பமுடையதென்று தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம், Android 2.3,iOS 5,Windows Phone 7.5 மற்றும் Blackberry 7 போன்ற நான்கு வகையான நவீன தொலைபேசிகளை வைத்து ஆய்வு செய்து, டீடயஉமடிநசசல 7 தொழிநுட்பமே சிறந்த பாதுகாப்புடையதென்று அறிவித்துள்ளது. Blackberry 7, 2.89 தரப்படுத்தல் புள்ளிகள் பெற்று முன்னணியில் இருக்கின்றது. இது உட்கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு, பயன்படுத்தும் application களின் பாதுகாப்பு, தொலைபேசியின் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் நடைமுறை செயற்பாடுகள், சட்டபூர்வ செயற்பாடுகள் என்று பல காரணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலாகும். Apple iOS 5 தொழிநுட்பத்தையுடைய செல்பேசி, 1.7 புள்ளிகளையும், Microsoft னுடைய Windows Phone 1.61 புள்ளிகளையும், கூகிளின் Android 2.3 தொழிநுட்பத்தையுடைய செல்பேசிகள், 1.37 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

Apple i OS 5 மற்றும் Windows Phone ஐ விடக் கூடிய சேமிக்கும் திறன் அதிகமாகவும், சிறந்த பாதுகாப்புடைய தொழிநுட்பத்தைக் கொண்டதாக இந்தக்கைபேசி இருப்பதாக ஆய்வாளர்கள், Blackberry 7 ஐ வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். இருந்தாலும், இது தொடர்பில் கூகிளின் Android இயங்குதளமானது, எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டுள்ளது. நாளொரு போட்டியும் பொழுதொரு புது போனுமாக தொழிநுட்ப உலகம் மிக வேகமாக சுழன்று வருகையில் புதிய மாற்றங்களும் மெருகூட்டல்களும் கையடக்கத் தொலைபேசிகளை மேலும் மேலும் நவீனமயமாகவும் கணினிகளைவிட செயற்பாடு மிகுந்தனவாகவும் மாற்றப்போகின்றன என்பது மட்டும் உறுதி.

# குளிர்ந்த பாலை பிஸ்கட் விரைவில் உறிஞ்சாதது ஏன்?

அணுக்கள் அல்லது மூலக்கூறுகளுக்கிடையே கவர்ச்சி விசையினால் உண்டாகும் பிணைப்பை வேண்டர் வால் பிணைப்பு என்பர். பிஸ்கட்டைப் பொறுத்த வரையில், அதன் துகள்களுக்கிடையே நிலவும் மேற்கூறிய அப்பிணைப்பு வலிமை குன்றியதாக உள்ளது. இதனால் பிஸ்கட் மென்மையாக இருப்பதுடன் எளிதில் தூளாகியும் விடுகிறது. அடுத்து பிஸ்கட் தண்ணீரை எளிதில் உறிஞ்சி விடுவதைக் காணலாம்.

இதற்குக் காரணம் அதன் துகள்களுக்கிடையேயுள்ள வேண்டர் வால் பிணைப்பு தண்ணீரின் தொடர்பால் சிதைக்கப்பெற்று மிகவும் மிருதுத் தன்மை அடைந்துவிடுவதேயாகும். பாலைப் பொறுத்தவரை, அது தண்ணீர் மற்றும் பாகுத்தன்மை கொண்ட புரதம், கொழுப்பு ஆகியவற்றின் கலவையாகும். பிஸ்கட்டைப் பாலில் தோய்த்தவுடன், அதிலுள்ள தண்ணீர் ஏற்கனவே குறிப்பிட்டவாறு பிஸ்கட் துகள்களுடன் வினைபுரிந்து பிஸ்கட்டை மிருதுத்தன்மை அடையச்செய்துவிடும். மேலும் சூடான பாலில் புரதம் கொழுப்பு ஆகியவற்றின் பாகுத்தன்மை மிகவும் குறைந்து போய்விடுகிறது. பிஸ்கட் சூடான அந்நிலையில், சூடான பால் மிகவும் விரைந்து பிஸ்கட் துகள்களுக்கிடையே பரவுகிறது. இதன் காரணமாக பாலை விரைந்து உறிஞ்சிக்கொள்கிறது. இவ்விரைவுத் தன்மை ஆறிய பாலில் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் அதிலுள்ள பாகுத்தன்மை குறைவின்றி இயல்பு நிலையில் இருப்பதேயாகும்.

# விண்வெளிக் கலங்களை ஏவும்போது, இறங்குமுகமாக எண்களைக் கூறுவது ஏன் ?



விண்வெளிக்கலங்களை ஏவுவதற்கு முன்னர் அதனுடைய எல்லா அமைப்புகளும் சரியாக உள்ளனவா என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்திடுவது மிக முக்கியம். ஏதேனும் ஒரு படிநிலையில் நிகழும் சிறு தவறும் பேரிழப்பை உண்டாக்கிவிடும். எனவே, பொறியாளர்கள் விண்கலங்களைச் செலுத்தும் முறையைப் படிப்படியாக மேற்கொள்ளுகின்றனர்.

இந்தப் படிநிலைகளின் எண்ணிக்கையை 10, 9, 8, 7,------- 0 என இறங்குமுகமாக கணக்கிடுகின்றனர். இதில் ஒவ்வொரு எண்ணும் ஒரு படிநிலையைக் குறிப்பதாகும். கடைசி எண்ணான பூஜ்யத்தைக் குறிப்பிடும் போது கலம் விண்வெளியில் செலுத்தப்பட்டுவிட்டது எனப் பொருள்படும்.




RONNIE SCREWVALA
UTV
UTV MOTION PICTURES
&
AVNI CINEMAX (P) LTD
PRESENT
கலகலப்பு
@ MASALA CAFE
May 11
முதல்
IVALUNGA IMSAI THAANGA MUDIYALE ...
MUSIC FROM TOMORROW
At Cineworld Cinemas
Ilford, Wandsworth, Feltham, Milton, kynes
Glasgow & sheffield ஆகிய திரை அரங்குகளில்
SUNDAR .C
VIJAY EBENEZER PA.VIJAY U.K. SENTHILKUMAR BADRI
K.L. PRAVEEN SREEKANTH GURURAJ DEENA BOBBY THALAPATHI DINESH
R.P.BALAGOPI VENKAT JOHNSON V.RAJAN SHABEER
PRODUCED BY RONNIE SCREWVALA & SIDDHARTH ROY KAPUR
QUBE
KALAKALAPPU @ MASALA CAFE
வெகு விரைவில் அஜித் நடிப்பில் பில்லா II
AJITHKUMAR
பில்லா II
THE BEGINNING
IN ENTERTAINMENT
PRESENTS
AJITHKUMAR
II
THE BEGINNING
A FILM BY CHAKRI TOLETI
YUVAN SHANKAR RAJA
R.D. RAJASEKHAR
SUNIR KHETERPAL SURESH BALAJE GEORGE PIUS

## புதுப்படத்தில் நடிப்பது பற்றி விரைவில் முடிவு செய்வேன்: வடிவேலு



தற்போது காமெடி நடிகர் வடிவேலுவைத் தேடி மீண்டும் பட வாய்ப்புகள் வருகின்றன. கதாநாயகனாக நடிக்கவும், மற்ற ஹீரோக்களுடன் காமெடி வேடங்களில் நடிக்கவும் பல இயக்குநர்கள் இவரைத் தேடி வருகின்றனர். சட்டமன்ற தேர்தலுக்கு பின்னர் படங்களில் நடிப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இம்சை அரசன் 23 ஆம் புலிகேசியின் இரண்டாம் பாகத்தில் நாயகனாக நடிக்கவும் வடிவேலுவிடம் கதை சொல்லியுள்ளார் சிம்புத்தேவன். இதுபற்றி வடிவேலுவிடம் விசாரித்த போது, சினிமாவில் சில காலம் இடைவெளி விட்டு விட்டேன். இதனால் நிறைய படங்களில் நடிக்க இயலாமல் போனது. இதற்காக நான் வருத்தப்படவில்லை. சினிமாவில் பல வருடங்களாக பிசியாக நடித்து வந்தேன். இதனால் எனது குடும்பத்தினருடன் செலவிட நேரம் இல்லாமல் போனது. இப்போது குடும்பத்தினருடன் இருந்து நேரத்தை செலவிடுகிறேன். இந்த வாய்ப்பு கிட்டியமைக்காக கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். மீண்டும் சினிமாவில் நடிக்க கதை தேடுகிறேன். சிலர் கதை சொல்லி உள்ளனர். சிம்புத்தேவனும் பிரமாதமான கதையொன்று சொல்லி இருக்கிறார். புதுப்படத்தில் நடிப்பது பற்றி விரைவில் முடிவு செய்வேன் எனக் கூறினார்.

## ஷாருக்குடன் தீபிகா.. பிரியங்காவுக்கு கல்தா?!



பாலிவுட் திரையுலகில் உறவுகள் பிரிவதற்காகவே என்ற நினைப்புடனையே ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்றன போல. அந்த அளவுக்கு நேற்று வரை நண்பர்களாக இருப்பவர்கள் விடிந்தால் நீ யாரோ..நான் யாரோ என்று ஆகி விடுகின்றனர்.

கடந்த ஐ.பி.எல்., சீசனின் போது தீபிகா படுகோனே பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் விளையாடும் இடத்திற்கு எல்லாம் அந்த அணியின் உரிமையாளர் விஜய் மால்யாவின் மகன் சித்தார்த் மால்யாவுடன் ஜோடி போட்டு சென்று கலக்கிக் கொண்டிருந்தார். காலம் மாறிப் போச்சு..ஐ.பி.எல்.., சீசன் மாறிப் போச்சு அதனால் தீபிகாவின் நட்பு வட்டாரமும் மாறி விட்டது. சித்தார்த் மால்யாவுடன் ஸ்டேடியத்தில் ஹாட்டாக முத்தங்களை பறிமாறிக் கொண்டு கேமராக் கண்களை தங்கள் பக்கம் இழுத்த தீபிகா இப்போது சித்தார்த்துடன் பேசுவது இல்லை.

உறவு கசந்து விட்டதாம்?! அதனால் இந்த முறை அவர் உற்சாகப் படுத்த இருப்பது கோல்கட்டா நைட் ரைடர்ஸ் அணியையாம். தீபிகாவை வரவேற்று இருப்பவர் ஷாருக்கான். இதற்காக மனாலியில் இருந்து தனி விமானம் மூலம் கோல்கட்டா டைந் ரைடர்ஸ் போட்டி நடைபெறும் இடத்திற்கு வந்துள்ளார் தீபிகா. இதில் என்ன , விஷயம் என்றால் லாஸ்ட் ஐ.பி.எல்., சீசனில் ஷாருக்குடன் சேர்ந்து கோல்கட்டா நைட் ரைடர்ஸ் டீமை ஊக்குவித்து உற்சாகப்படுத்தியவர் பிரியங்கா சோப்ரா.இப்ப ஜோடி மாறிப் போச்சு!! ஐ.பி.எல்., சீசன் மாதிரி.. நட்புக்கும் சீசன் போல..!

## பாலிவுட் ஹீரோ நிபந்தனை லிங்குசாமிக்கு புது தலைவலி



லிங்குசாமி இயக்கத்தில் நடிக்க பாலிவுட் நடிகர் சாஹித் கபூர் நிபந்தனை விதித்ததால் வசனகர்த்தா மாற்றப்பட்டார். மாதவன், ஆர்யா நடித்த படம் "வேட்டை". லிங்குசாமி இயக்கினார். இப்படம் இந்தியில் ரீமேக் ஆகிறது. இதில் நடிக்க மாதவன், அசின் உள்ளிட்ட பல்வேறு பாலிவுட் நட்சத்திரங்களை அணுகியபோது கால்ஷீட் தர மறுத்துவிட்டனர். இந்நிலையில் சாஹித் கபூர் ஒப்பந்தம் ஆனார். ஸ்கிரிப்ட் பணி முடிந்து ஷூட்டிங் செல்லும் நேரத்தில் திடீரென்று சாஹித் நிபந்தனை விதித்தார்.

"தமிழில் எழுதப்பட்ட வசனங்களை அப்படியே இந்திக்கு மொழி பெயர்த்திருப்பதை ஏற்க முடியாது. இந்தி ரசிகர்களின் ரசனைக்கு ஏற்ப வசனத்தை மாற்றினால்தான் நடிப்பேன்" என்றார். இதனால் லிங்குசாமிக்கு புது தலைவலி ஏற்பட்டது. இதையடுத்து இந்தி படங்களுக்கு வசனம் எழுதும் பிரசூன் ஜோஷி ஒப்பந்தம் செய்யப்பட்டார். அதன்பிறகே சாஹித் நடிக்க ஒப்புதல் அளித்தார். இதுபற்றி லிங்குசாமி கூறும்போது, எனக்கு இந்தியில் மற்றவர்களுடன் எளிதாக தொடர்புகொண்டு பேச தெரியாது. இந்நிலையில்தான் தமிழ் வசனங்கள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டது. அது திருப்தியாக அமையவில்லை. இதுதான் முக்கிய பிரச்சினையாக இருந்தது. இதையடுத்து மற்றொரு வசனகர்த்தாவை ஒப்பந்தம் செய்தோம். அவர் தமிழ் படத்துக்கு வசனம் எழுதியவருடன் அமர்ந்து ஆலோசித்து வசனத்தின் உட்பொருளை கேட்டறிந்து அதற்கேற்ப வசனம் எழுதினார். இதையடுத்து பிரச்சினை தீர்ந்தது. இதற்குமுன் நான் இந்தி படம் இயக்கியதில்லை. இது புது அனுபவம் என்பதால் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கிறேன். இந்தி "வேட்டை"தமிழிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். சர்வதேச மார்க்கெட்டுக்கு ஏற்ப இது உருவாகும். ஆர்யா நடித்த வேடத்தில் சாஹித் நடிக்கிறார். மாதவன் நடித்த வேடத்தில் பாகிஸ்தான் இசை அமைப்பாளர் அலி நடிக்கிறார். ஹீரோயின் இலியானா என்றார்.









## ஹெலிகாப்டரின் கம்பியைப் பிடித்து தொங்கிய அஜித்!



"பில்லா 2" படத்தின் டிரைலருக்கு பெரும் வரவேற்பு இணையத்தில். பல லட்சம் பேர் பார்த்த வீடியோவாக மாறியுள்ளது இந்த ட்ரைலர். வெளியான சில மணி நேரங்களில் 4 லட்சம் பேர் பார்த்துவிட்டார்கள். இந்த வீடியோவில் ரசிகர்களை உறைய வைத்தது அஜித்தின் மயிர்க்கூச்செரியும் சண்டைக் காட்சிகள். மிக உயரத்தில் பறக்கும் ஹெலிகாப்டரில், கயிறுகூட கட்டிக் கொள்ளாமல் திறந்த கதவருகே நின்றபடி அஜித் போடும் சண்டைக் காட்சி அது. நானும் எத்தனையோ படங்களுக்கு ஸ்டண்ட் அமைத்துள்ளேன். ஆனால் இந்த அளவு ரிஸ்க் எடுத்த முன்னணி நடிகரை பார்த்ததில்லை. மைனஸ் டிகிரி குளிரில், உயரப் பறக்கும் ஹெலிகாப்டரிலிருந்து குதித்த அஜித், ஒரு கையால் ஹெலிகாப்டரின் கம்பியைப் பிடித்து தொங்கியபடி . சண்டை போட்டது என்னை அதிர்ச்சியில் உறைய வைத்தது. சினிமா வரலாற்றிலேயே எந்த நடிகரும் எடுக்காத ரிஸ்க் இது என அவருக்கு ஸ்டண்ட் அமைத்துக் கொடுத்த இயக்குநர் கீசா காம்பக்தீ வியப்பு தெரிவித்துள்ளார்.

## ரஜினிக்கு பொருத்தமான வில்லன் நான்தான் – ஜாக்கி ஷெராப்



ரஜினிக்கு பொருத்தமான வில்லன் நான்தான் என்கிறார் நடிகர் ஜாக்கி ஷெராப். ரஜினியின் அடுத்த படமான கோச்சடையானில் ஜாக்கி ஷெராப் பிரதான வில்லன் பாத்திரத்தில் நடிக்கிறார். இவர்களுடன் இந்தப்படத்தில் தீபிகா படுகோன், ருக்மணி, ஷோபனா, சரத்குமார், நாசர், ஆதி என பெரும் நட்சத்திரப் பட்டாளமே நடிக்கின்றனர். ரஜினி என் நெருங்கிய நண்பர், அவருடன் பல வருடங்களுக்குப் பிறகு இணைந்து நடிப்பதில் மிகவும் மகிழ்ச்சி என இது தொடர்பில் குறிப்பிடுகின்றார் ஜாக்கி ஷெ ராப். ரஜினி மிகச் சிறந்த நடிகர் எனக் குறிப்பிடும் இவர், அவருக்குப் பொருத்தமான வில்லன் நான்தான் என்பதை படம் வந்ததும் புரிந்து கொள்வீர்கள் எனவும் கூறியுள்ளார்.

## உடல் உறுப்புகளை தானம் செய்ய ஒப்புக்கொண்ட நட்த்திர ஜோடி

தங்களது உடல் உறுப்புக்களை தானம் செய்ய திருமண ஜோடியான பிரசன்னா, சினேகா ஒப்புக்கொண்டுள்ளனர். "உடல் உறுப்புகளை தானம் செய்ய வேண்டும" என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சகா அறக்கட்டளை நிறுவனம் சென்னையில் நடத்திய விழாவில் கலந்து கொண்டிருந்த போதே இந்த நட்சத்திர ஜோடி, தங்களது உடல் உறுப்பு தானத்திற்கு ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டனர்.

## டர்டி பிக்சருக்குத் தடை?



வித்யாபாலன் நடித்து பரபரப்பாக ஓடிய இந்திப்படம் டர்டி பிக்சர், மறைந்த கவர்ச்சி நடிகை சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையை இதில் படமாக்கி இருக்கின்றனர். திரையுலகில் அவர் பட்ட கஷ்டங்கள், ஏமாற்றங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இப்படம் ஆபாசமாக இருப்பதாக எதிர்ப்புகள் கிளம்பின. படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும் என்று நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. இதையெல்லாம் மீறி டர்டி பிக்சர் படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடியது. வித்யாபாலன் இப்படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருதும் கிடைத்தது.

அப்படத்தை வேறு மொழிகளில் வெளியீடு செய்யவும் ஏற்பாடுகள் நடக்கின்றன. இதற்கிடையில், டர்டி பிக்சர் படத்தை தொலைக்காட்சியில் ஒளிபரப்ப சோனி டி.வி. தயாரானது. இதற்கான விளம்பரங்களும் செய்யப்பட்டன. பகலிலும் இரவு 8 மணிக்கும் இப்படம் ஒளிபரப்பாகும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்திய மத்திய அரசு திடீரென தொலைக்காட்சியில் டர்டி பிக்சர் படத்தை ஒளிபரப்பத் தடை விதித்துள்ளது. படத்தினை தணிக்கை குழு 59 இடங்களில் வெட்டி எறிந்துள்ளது. எனவே பகலிலும், இரவு 8 மணிக்கும் படத்தை ஒளிபரப்பக்கூடாது என்று மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

## பாலிவுட் நடிகையுடன் இணைந்த பிரபுதேவா



நயன்தாரா காதல் முறிவிற்கு பின்னர் பிரபுதேவா, பாலிவுட் நடிகை சோ-னாக்ஷியை கரம் பிடித்துள்ளார். தற்போது பிரபுதேவா, பாலிவுட்டில் "ரவுடி ரத்தோர" என்ற திரைப்படத்தை இயக்கி வருகிறார்.இப்படத்தில் நாயகியாக சோனாக்ஷி சின்ஹா என்பவர் நடித்து வருகிறார்.இந்நிலையில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளின் ஒரு பகுதியான பெங்களூர்-றாயல் சேலஞ்சர்ஸ் அணி மோதும் போட்டியை இருவரும் சேர்ந்து பார்க்க வந்தனர்.

இவர்களை ஜோடியாக பார்த்ததும் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அப்போட்டியில் மழை பெய்ததும் பிரபுவும் சோனாக்ஷியும் புறப்பட்டு சென்று விட்டனர். இந்த சம்பவம் பாலிவுட், கொலிவுட், டே-ாலிவுட் என அனைத்துப் பகுதிகளிலும், பிரபுதேவாவுக்கு புதிய காதலி கிடைத்து விட்டதாக பேசப்படுகிறது.


BLJ Solicitors
Expert Confidential & independent advice
BISHOP LLOYD AND JACKSON

1. குடிவரவு சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனைகளுக்கு

நாங்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் குடியேறுதல் வேலைகளை செய்து முடிக்கிறோம்.

- Same day visa service just for £250
- All Tier-1 ( Post Study Work, Entrepreneur, Investor) Applications
- Tier-2 ( Work Permit) applications, extensions and appeals
- Tier-4 (Student) application, extensions and appeals.
- SPONSORSHIP LICENCE Application for employers
- Marriage and Dependent Application
- Family visitor and Entry clearance matters

தயவுசெய்து கவனிக்கவும் நாங்கள் தனிப்பட்ட வாடிக்கையாளர்களை மட்டும் கருத்தில் கொள்ளவில்லை, அத்துடன் சட்டபூர்வமான உதவி வேலைகளையும் செய்கிறோம். ஆகவே சட்டபூர்வமான உதவிக்கு நீங்கள் தகுதியுடையவர்கள்என்றால் உங்களுக்கு எந்தவிதமான கட்டணமும் இல்லை.

2. நீங்கள் வாடகை வீட்டில் வசிப்பவரா ! அல்லது Council/Housing Accossiction வீட்டில் வசிப்பவரா ?

உங்கள் வீட்டு பராமரிப்பு சம்மந்தப்பட்ட கீழ்வரும் சட்ட ஆலோசனைகள்.

- ஈரம், பூச்சுக்காளான், காளான்
- வெள்ளம், அல்லது நீர் கசிவு
- எலிகளும்,பூச்சிகளும் பெருமளவில் நிரம்பியிருத்தல்
- பழுதான ஜன்னல்கள்,கதவுகள்,சுவர்கள்
- சூடான காற்று, சூடான தண்ணீர் குறைவாக வருவது
- மின் சுற்றில் உள்ள குறைபாடுகள் அல்லது அதில் ஏதாவது திருத்த வேலை சம்பந்தமான பிரச்சனைகள்

சில வேலை திருத்த வேலை செய்யப்படாவிடில் வீட்டுச்சொந்தக்காரரைக் கொண்டு தேவையான திருத்த வேலைகளை நாங்கள் செய்து முடிப்போம். இவைகள் உங்களது சட்டபூர்வமான உரிமை.

3. விவாகரத்து சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனைகள்

15-17 Exchange Road
Watford, Hertfordshire, WD18 0JD
TEL: 020 3544 6763 FAX: 020 3544 1162
DX: 4505 WATFORD

# சிவராம் அவர்களின் ஏழாவது நினைவு தினம்







சிவராம் அவர்களின் ஏழாவது நினைவு தினம் 29.04.2012 அன்று சூரிச் - சிலீரன் நகரில் (சுவிஸ்) நடைபெற்றது. இந்த நிகழ்வு சுவிஸ் சிவராம் நினைவுப் பணி மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஊடகவியலாளர் கனகரவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சிவராம் தமிழீழத்தின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் மகேஸ்வரி, புவிராஜகீர்த்தி தர்மரட்ணம் அகியோருக்கு மகனாகப் பிறந்தார். இலங்கையின் பிரபலமான ஊடகவியலர்ளரும் தமிழ்நெட் இணையத்தின் பிரதான எழுத்தாளரும் முன்னாள் போராளியுமாவார். கொழும்பு பம்பலப்பிட்டியில் காவல் நிலையம் முன்பாக வெள்ளை நிற ஊர்தி ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இவர் தாக்கப்பட்ட பின்னர் வாகனமொன்றில் கொண்டு வரப்பட்டு இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதன் நீண்ட உரையினை நிகழ்த்தியிருந்தார். இதன்போது, "நண்பர் சிவராம், தமிழ் மக்களுடன் பல்வேறு பரிமாணங்களில் பயணித்தவர். இன்று நாம் பல கேள்விகளுக்கு விடை தெரியாமலேயே பயணிக்கின்றோம், தமிழ் மக்களை வழிநடத்திச் செல்லவேண்டிய வரலாற்றுச் சூழல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உருவாகியுள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது." எனவும் குறிப்பிட்டதுடன் புலம்பெயர்ந்து வாழும் எம் உறவுகள் தொடர்ந்தும் தம்மாலான உதவிகளை இனத்திற்கு வழங்குவதற்கு கரம்கொடுக்க வேண்டும்" எனவும் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, சிவராம் நினைவு நிகழ்வுடன் தராக்கி என்ற ஆவணப்படம் திரையிடல் வைபவம் சென்னையில் ஏப்ரல் 29ஆம் திகதி நடைபெற்றது. திரைப்படத்துறையினர் சென்னை ஊடகவியலாளர்கள் ஆய்வாளர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். சென்னை எம் எம் திரையரங்கில் தராக்கி ஆவணப்படம் திரையிடப்பட்டது. சிவராம் கொல்லப்பட்டபோது சென்னையில் ஒரு சில கண்டனக் கூட்டங்கள் நடைபெற்ற பின்னர் முதல் தடவையாக இந்த நினைவு நிகழ்வு நடைபெற்றது.

இந்த - ஆவனப்படதினை ஊடவியலாளரும் ஆவணப்பட இயக்குனருமான சோமிதரன் தயாரித்திருந்தார். சிவாரம் கொலைக்கு பின்னர் சரிநிகர் பத்திரிகை ஆசிரியர் சிவகுமாருடன் இணைந்து இலங்கை தமிழ் ஊடவியாலாளர்கள் மற்றும் ஊடகவியல் குறித்து ஒரு ஆவணப்படத் திற்கான ஒளிப்பதிவை ஆரம்பித்து தொடர்ச்சியாக ஆவணப்படுத்தி வந்தனர். இந்த நிலையில் அதில் ஒரு பகுதியாக சிவராம் நினைவாக தராக்கி ஒரு பத்திரிகையாளனின் பயணம் ஆவணப்படம் சுவிஸ் சிவராம் ஞாபகார்த மன்றத்தின் அனுசரணையுடன் திரையடப்பட்டது. -

இந்த நிகழ்வில், 1992 - 2011 வரையில் ஊடகவியலாளர் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற முன்னிலை நாடுகள் இருபதும் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கையும் காட்சிப்படுத்தப்பட்டது. அவை, ஈராக் -151, பிலிப்பைன்ஸ் - 72, அல்ஜீரியா - 60, ரஷ்யா - 52, கொலம்பியா - 43, பாக்கிஸ்தான் - 41, சோமாலியா - 35, இந்தியா - 27, மெக்சிகோ - 27, ஆப்கானிஸ்தான் - 24, துருக்கி - 20, இலங்கை - 19, பிரேசில் - 19, பொஸ்னியா - 19, தஜிகிஸ்தான் - 17, சியாரா லியோன் - 16, பங்களாதேஸ் - 12, அங்கோலா - 10, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் - 10.

# மரண அறிவித்தல்



## திருமதி சிவஷரூபராணி செந்திவடிவேலு

## (இந்திரா)

## இறப்பு : 28 ஏப்ரல் 2012

**வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஷரூபராணி செந்திவடிவேலு அவர்கள் 28-04-2012 சனிக்கிழமை அன்று காலமானார்.**

அன்னார், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், திலகவதி(மாரிமுத்து) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நல்லதம்பி செந்திவடிவேலு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிறிதரன், நவநீதன்(அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற மணிவண்ணன், பால்ராஜன்(லண்டன்), காலஞ்சென்ற ரஞ்சித்குமார்,யசோதை(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகதுரை, மங்களேஸ்வரி, கஜலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறண்டன், அபிா, வினூா, சிறிதரன், மணிவண்ணன், கேசவன், ரஞ்சித்குமார், அருண்குமார் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
**செந்திவடிவேலு - இலங்கை**
**செல்லிடப்பேசி +94776354237**



2012 May Bank Holiday Offers Available
தமிழ் இறைச்சிக்கடை
EAST HAM இல் HIGH STREET CONVENIENCE STORES
355 High Street North , Manor Park , London E12 6PQ
Tel: 020 8548 1503 Mob: 079 0460 7186
கிழக்கு லண்டனில் தமிழர்களால் பல ஆண்டுகளாக
நடாத்தப்படும் ஒரே ஒரு மீன் இறைச்சிக்கடை
Open time 8.00.am to Till Midnight 1.00.am
நாங்கள் Billingsgate மீன் சந்தையில் விற்கப்படும் விலையை விட மிகவும் மலிவு விலையிலே தருவித்து தருகின்றோம்.
வாரத்தில் 7நாட்களும் (fresh) உடனடி பங்கு இறைச்சி கிடைக்கும் நாட்டுக்கோழி / மான் மற்றும் மரை இறைச்சிவகை உண்டு
HALAL
BANK HOLIDAY SPECIAL (MAY 2012)
Special கமல் பங்கு இறைச்சி £ 4.99
1kg மான் இறைச்சி £ 7.49
நாட்டுக் கோழி £ 5.50
அறுக்குழா மீன் மலிவு விலையில் மற்றைய மீன் வகைகள் From £ 5.50 per Kg
"CUSTOMER LOYALTY ALBUM"
Spend £ 5 / £5 1 Date
Spend £ 5 / £5 2 Date
Spend £ 5 / £5 3 Date 1£ OFF
Spend £ 5 / £5 4 Date
Spend £ 5 / £5 5 Date
Spend £ 5 / £5 6 Date 2£ OFF
Spend £ 5 / £5 7 Date
Spend £ 5 / £5 8 Date
Spend £ 5 / £5 9 Date
Date 10 பங்கு இறைச்சி இலவசம்
தற்போது தாயக,இந்திய மளிகைப் பொருட்களுடன் மரக்கறி வகைகள் Off Licence உண்டு

# பிரான்சிய ஊடகவியலாளர் கொலம்பிய போராளிகளால் கடத்தப்பட்டார்



கொலம்பியாவில் கடத்தப்பட்ட ஊடகவியலாளருக்கு முழுப் பொறுப்பும் FARC போராளிகளே எனவும் அவர்கள் கப்பம் பெறுவதற்காக ஆட்கள் கடத்துவதை உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது. கடந்த திங்கட்கிழமை, பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சர் Alain Juppe செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் "கடத்தப்பட்ட ஊடகவியலாளரின் வாழ்க்கைக்கு நீங்களே பொறுப்பு" என தாம் FARC இற்கு சுட்டிக்காட்டியுள்ளதாகவும், கப்பம் பெறுவதற்காக கடத்துவதை உறுதியளிப்பதற்கு அந்த போராளிக் குழுவிற்கு ஒரு வாய்ப்பு உள்ளது, உடனடியாக செய்தியாளரை விடுவிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பிரான்சிய செய்தி சேனலான France 24 இல் பக்கச்சார்பற்ற ஒரு செய்தியாளராக கடமையாற்றிய Romeo Langlois என்பவரே கடத்தப்பட்டுள்ளார். இவர், கொலம்பியாவில் அரச துருப்புக்களுக்கும் மார்க்சிய கெரில்லாக்களுக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் சிக்கிய பின்னர் FARC எனப்படும் கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படையால் சிறைப்பிடிக்கப்பட்டார். கடந்த சனிக்கிழமை, Caqueta இன் தென்பகுதி வனங்களில் போதைப்பொருள் எதிர்ப்பு ரோந்து நடவடிக்கையில் அவரும் இணைந்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்துள்ளார், அப்பொழுது, கொகையின் ஆய்வகங்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்த FARC போராளிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர், இந்த தாக்குதலில் அவரது இடது கையில் காயம் ஏற்பட்டுள்ளது, என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கொலம்பியாவின் ஜனாதிபதி Juan Manuel Santon , FARC குழு அவரைப் பிடித்து வைத்துள்ளதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும், அவரை விடுதலை செய்யுமாறும் அறிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், சில வாரங்களுக்கு முன்னர் கடத்தல்களை நிறுத்துவதாக FARC உறுதியளித்திருந்தது. அதனால் நாங்கள் திருப்தியடைந்திருந்தோம், அவர்கள் எமக்கு மதிப்பளிக்கின்றார்கள் எனவும் சமாதானதிற்கான பாதை திறக்கப்பட்டுள்ளது எனவும் நம்பினோம், பொதுமக்கள் மற்றும் இராணுவம் மீதான தாக்குதல்களையும், கடத்தல்களையும் அக்குழு நிறுத்தினால் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கொலம்பியாவின் பாதுகாப்பு அமைச்சர் Juan Carlos Pinzon, செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டவுடன் Longlois, குண்டு துளைக்காத சட்டையையும் தலைக்கவசத்தையும் கழற்றி எறிந்துவிட்டு, போராளிகளை நோக்கி ஓடினார், அவர் சிவில் உடையில் இருந்தார், அதனால், தான் ஒரு இராணுவப்படை உறுப்பினர் இல்லை என்பதை நிருபிக்க முடிந்தது" என்றார், அவர் மேலும் குறிப்பிடுகையில், பிரான்ஸ் அரசுடன் இதுவரை பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படாததனால் Longlois இனை விடுவிப்பதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை, பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் காணப்படுகின்றன, இருப்பினும், Longlois எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றார் என்பது எமக்குத் தெரியாததனால் அவரை விடுவிப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளவில்லை எனவும் பிரான்ஸ் அரசுடன் இதுபற்றி பேசப்போவதாகவும் கூரினார்.

# பிரான்ஸ் - செனகல் இடையே ஒப்பந்தம்



பிரான்ஸ் மற்றும் செனகல் நாடுகளுக்கு இடையே பாதுகாப்பு மற்றும் ஆயுத ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.
ஆப்ரிக்கா மற்றும் பிரான்சுக்கு இடையிலான உறவில் ஒளிவு மறைவு கிடையாது என்றும், இவ்வுறவு மேம்பாடு அடைந்து வருவதாகவும் செனகலின் ஜனாதிபதி சால் குறிப்பிட்டுள்ளார். சால் பிரெஞ்சு ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியை அவரது எலிசி அரண்மனையில் சந்தித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தப்படி, செனகலில் இருந்து பிரெஞ்சு இராணுவத்தை குறைத்தல் உள்ளடக்கப்பட்டது. அடுத்ததாக இரு நாட்டு நிதியமைச்சர்களும் ஒரு கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி பிரான்ஸ் செனகல் நாட்டுக்கு 130 பில்லியன் யூரோ கடனாக வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

# பிரான்சில் கறுப்பின அழகி போட்டிக்கு வெள்ளைக்காரர்கள் எதிர்ப்பு




பிரான்சில் கறுப்பின அழகி போட்டி நடைபெற்றது. இந்த போட்டிக்கு நவ்வீலா பிரான்சு என்ற வெள்ளைக்கார அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர். போராட்டத்தை ஒடுக்க போலீஸ் துறையினர் முயன்றும் பயனளிக்கவில்லை.

போராட்டக்காரர்களுக்கும், போட்டியின் பார்வையாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சுமார் 30 பேர் போட்டி நடந்த அரங்கத்தின் வாயிலில் கூடி அழகிப் போட்டிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். போராட்டக்காரர்கள் "பிரான்ஸ் நாடு பிரெஞ்சுக்காரருக்கே" என்ற கொள்கை உடைய தேசிய முன்னணிக்கட்சியின் ஆதரவாளர்களாவர்.

நவ்வீலா பிரான்ஸ் அமைப்பை சேர்ந்தவர்கள் கூறும்போது, "பிரான்ஸ் நாடு பிரெஞ்சு மக்களுக்கு உரியது. இங்கு ஏன் ஆசியரும், ஆப்பிரிக்கரும் வந்து அதிக உரிமை கொண்டாடுகின்றனர்?" என்று கூறினார்கள். மேலும் அவர்கள் பிரான்சு வெள்ளை அழகிப் போட்டி என்று தனியாக நடத்த வேண்டும் என்றும் கூறினார்கள்.

கறுப்பின அழகிப் போட்டியின் ஒருங்கிணைப்பாளரான பிரெட்ரிக் ரோயெர் பேசும்போது, பிரான்சில் கறுப்பழகிகளுக்கு விளம்பர வாய்ப்போ, வேறு வேலை வாய்ப்போ கிடைப்பதில்லை. எந்த பிரெஞ்சு பத்திரிகையும் கறுப்பின அழகியின் படத்தைத் தமது அட்டைப்படத்தில் வெளியிடுவதில்லை. இதனால் இவர்கள் லண்டனுக்கோ, நியூயோர்க்குக்கோ பிழைப்பு தேடிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றார். பல அழகிகளும் இதே கருத்தை தான் கூறினார்கள். இந்த போட்டியில் செனகலைச் சேர்ந்த 21 வயது மாணவியான பாதியோ பெபி கருப்பழகி பட்டம் வென்றார்.

# பிரான்ஸ் சுற்றுலா பயணிகள் 9 பேர் பீகாரில் வெளியேற்றப்பட்டனர்

விசா நிபந்தனைகளை மீறியதாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 9 சுற்றுலா பயணிகள் பீகாரில் கைது செய்யப்பட்டு பின்னர் அம்மாநிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பீகார் மாநிலம் நவாடா நகரில் தொண்டு நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த பாத யாத்திரை ஒன்றிலும் ஆலோசனைக்கூட்டம் ஒன்றிலும் பிரான்ஸ் சுற்றுலா பயணிகள் சிலர் பங்கேற்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கு விரைந்து சென்ற பீகார் போலீசார் அந்த சுற்றுலா பயணிகளின் விசாக்களை பரிசோதித்து பார்த்ததில் அவர்கள் விசா விதிமுறைகளை மீறி பீகாரில் நுழைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அந்த 9 பிரான்ஸ் சுற்றுலா பயணிகளை போலீசார் கைது செய்தனர். பிறகு மேல் அதிகாரிகளின் உத்தரவுப்படி அவர்கள் 9 பேரும் பீகார் மாநிலத்தை விட்டு உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

இவர்கள் 9 பேரும் வைத்திருந்தது சுற்றுலா பயணிகளுக்கான விசா. ஆனால் அவர்கள் தொண்டு நிறுவனத்தின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டது விசா விதிமுறைகளை மீறிய செயலாகும் என்றும் அதனால்தான் அவர்கள் கைது செய்யப்பட்டு பிறகு மாநிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர் என்று பீகார் மாநில காவல்துறை தலைவர் அபியானந்த் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

# கடும் மன அழுத்தத்தால் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்திய பிரான்ஸ் முதல் பெண்மணி



பிரான்ஸின் இரண்டாம் சுற்று ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அந்நாட்டு முதல் பெண்மணி கடும் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளதாக அந்நாட்டு சஞ்சிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. தனது கணவரான ஜனாதிபதி சார்க்கோஸியின் தேர்தல் பிரசாரங்களின் போது கடும் அவதூறுகளுக்கு உள்ளானதால் கார்லா புருணி (44 வயது) உளவியல் ரீதியில் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் அதனால் அவர் தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தியுள்ளதாகவும் மேற்படி "குளோஸர்" சஞ்சிகை தெரிவிக்கிறது. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற முதல் சுற்று தேர்தலில் ஜனாதிபதி சார்க்கோஸி பெரும் பின்னடைவை சந்தித்ததும் அவரது மன நிலையை பெரிதும் பாதித்துள்ளதாக கூறப்படுகிறது.

அவர் அடிக்கடி கண்ணீர் சிந்தி அழுவதாகவும் உறங்க முடியாது தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தனது உடல் ஆரோக்கிய நிலையைப் பேணும் முகமாக அவர் தனது 8 மாத குழந்தை கியுலியாவுக்கு தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தியுள்ளார்.

# பபிரான்சில் முஸ்லிம்களுக்கு பாரபட்சம்

பிரான்சின் வலது சாரி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, பிரான்ஸ் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான எண்ணம் சட்டத்திலும், சமுதாயத்திலும் நிலவுவது தெரியவந்துள்ளது.
பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து நாடுகளில் முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்பில் பாரபட்சம் காட்டுவதில்லை என்று சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அவ்வாறு இல்லை. முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. மேலும் பணி புரியும் நபர்கள் அவர்களது சமய உடைகளை அணிந்து வர தடை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரான்சில் வேலையின்மை அதிகரிப்பு

கடந்த 1999ஆம் ஆண்டில் 16,600 என்ற அளவில் இருந்த வேலையில்லாதோர் எண்ணிக்கை தற்போது 2.88 மில்லியனாக உயர்ந்துள்ளது.
2007ஆம் ஆண்டில் நடந்த தேர்தலின் போது சர்கோசி வேலையின்மை 5 சதவீதமாக குறைக்கப்படும் என உறுதி அளித்தார். ஆனால் தற்போது அது 9.3 சதவீதமாக அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

# பாரிஸ் நகரில் தமிழீழ மக்கள் பேரவையினரால் ஒன்றுகூடல்



பிரான்சில் கொட்டும் மழையிலும் கடும் குளிர்காற்றுக்கிடையே பிரித்தானிய அரசை ஈழத்தமிழர் விடயத்தில் அவர்கள் சிறி லங்கா அரசுக்கு எதிராக காலனித்துவ ஆட்சியாளர்கள் என்ற அடிப்படையிலும், காமன்வெல்த் நாடுகளின் நிறுவனர் என்ற அடிப்படையில், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பாரிஸ் நகரில் ஏப்ரல் 27 ஆம் திகதி பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவையினரால் ஒன்றுகூடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது காலநிலை பாராது போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல தமிழ் உறவுகளும் பிரான்சஸ் நாட்டு நண்பர்களும் இந்த ஒன்றுகூடலில் பங்கு பற்றினர்கள்.

# 40% வரை தள்ளுபடி இந்தியாவிற்கும் தெற்காசிய நாடுகளுக்கும்.*(1)

இல்லத்திற்கு புன்னகையுடன் பணம் அனுப்புங்கள்.(2)



**தெற்காசியாவிற்கான கட்டணம்(3)**

| தொகை (€) Montant | | கட்டணம் (€)* Frais |
|---|---|---|
| முதல் De | வரை À | புதியது Nouveau |
| 0.01 | 50.00 | 8.50 |
| 50.01 | 250.00 | 10.00 |
| 250.01 | 500.00 | 14.00 |
| 500.01 | 1,000.00 | 18.00 |
| 1,000.01 | 2,000.00 | 25.00 |
| 2,000.01 | 3,000.00 | 33.00 |
| 3,000.01 | 4,000.00 | 41.00 |
| 4,000.01 | 5,000.00 | 49.00 |
| 5,000.01 | 6,000.00 | 57.00 |
| 6,000.01 | 8,000.00 | 65.00 |



இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, € 2000 வரையுள்ள தொகைக்கு 40% தள்ளுபடியில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா, பூடான், மால்டிவ்ஸ் அல்லது நேபாளத்திலுள்ள உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு பணம் அனுப்புங்கள்.(4)

**WESTERN UNION**

**• Transfert d'argent •**
***L'argent en mouvement pour le meilleur***

***moving money for better***


*Tarifs en vigueur à partir du 15.07.2012 en France, dans les agences dédiées et chez les agents agréés Western Union. 40% de réduction en moyenne sur les frais de transferts pour des montants d'envoi entre 0 et 2000 euros. Outre les frais de transfert, Western Union, génère également des revenus à partir du change de devises. Soumis aux conditions générales du service.
(1) Jusqu'à 40% de remise vers l'Inde et l'Asie du Sud. (2) Envoyez de l'argent au pays avec le sourire. (3) Tarifs vers l'Asie du Sud. (4) Profitez de l'occasion pour envoyer de l'argent à vos proches en Inde, au Pakistan, au Bangladesh, au Sri Lanka, au Bhoutan, aux Maldives et au Nepal avec des remises jusqu'à 40% jusqu'à 2000 euros d'envoi..

14

# புரட்சித்தீ பிடல் கேஸ்ட்ரோ

(எழுதுவதுகிருஸ்ணா)

.......அரசியலின் முதல் அனுபவம் இப்படி தனக்கே தெரியாமல் அமைந்ததை நினைத்து இப்போதும் புதிராக சிரிக்கின்றார் காஸ்ட்ரோ. முதலாளித்துவம் என்ற பெயர் தெரியாமலும், அதன் கொடூர அர்த்தம் புரியாமலும், அல்லது முதலாளித்துவம் என்ற வார்த்தையே கூட தெரியாமல் அதனை



வெறுக்க முதல் படி இந்த முதல் தேர்தல்தான் என்கிறார் காஸ்ட்ரோ. நல்லதொரு தலைமையினால் அரசியலில் எப்படியான முடிவையும் துணிவோடு எடுக்க முடியும். அப்படி துணிவோடு முடிவு எடுக்கும் தகுதி படைத்தவனால்தான் நல்லதொரு தலைவனாக இருக்க முடியும். ஆனால் அப்போதைய கியூபாவில் முடிவெடுக்கும் தேவைக்காக தலைவர்கள் தேர்வு செய்யப்படவில்லை வெறுமனே ஒரு ஆட்சியையும் நிர்வாகமும் இருப்பதாய் காட்டிக்கொள்ள மட்டுமே அங்கு தலைவர்கள் இருந்தார்கள். மக்கள் வாக்களிப்பதை ஒரு கடமையாக செய்தனர் அல்லது ஏதோ அர்த்தமே தெரியாமல் விழா கொண்டாடுவதை போல வாக்களிப்பதையும் ஒரு சம்பிரதாயமாக செய்து வந்தனர். எதற்காக வாக்களிக்கின்றோம் வாக்கின் மதிப்பு என்ன தேர்தல் என்றால் என்ன இப்படி எதுவுமே புரியாத மக்கள் அவர்கள். கரும்பும் அதன் சூழலும்தான் வாழ்க்கை என்ற பின்னணியில் முதலாளித்துவம் அவர்களை சிந்திக்கவே விடவில்லை.

குழந்தைகளின் தீவிர படிப்பை கூட வறுமையின் காரணமாக நிறுத்தியதால் பல தலைமுறைக்கு அடிமை தொழில் நிலையையும் முதலாளித்துவம் விதைத்து வைத்தது. அரசியல் தொடர்பான கேள்விகளினால் காஸ்ட்ரோவுக்கு மனதுக்குள் பாரிய போராட்டமே நடந்துகொண்டிருந்தது. ஆனால் அவை கேள்விகளாகவே பல வருடங்கள் தனக்குள் அலைமோதும் என்று அவர் நினைத்திருக்க வாய்ப்புக்கள் இல்லை. குழப்ப நிலைதான் ஆரோக்கியமான நிலை என்பார்கள் பின் நவீனத்துவ வாதிகள். குழப்பத்தை வரவேற்கும் பக்குவம் படைத்தவர்கள் மிக குறைவானவர்களே புரட்சியாளர்கள் மற்றும் புதிய விடயங்களை உருவாக்கும் பக்குவம் படைத்தவர்கள் எப்போதும் குழப்பத்தை ரசிப்பார்கள். காஸ்ட்ரோவின் குணமும் அப்படியே குழப்பத்தின் இறுதிக்கட்டம் தெளிவை கொடுக்கும் அல்லது பித்து நிலையை கொடுக்கும்.குழப்பத்தின் ஊடாக பயணித்த பல கேள்விகளுக்கு பதில் கிடைக்க காஸ்ட்ரோவுக்கு பல ஆண்டுகள் எடுத்தது. இப்போதும் தன் மனதுக்குள் அப்போது எழுந்த பல கேள்விகளுக்கும் குழப்பங்களுக்கும் பதிலே இல்லை என்பார் காஸ்ட்ரோ. காஸ்ட்ரோவின் அடங்காத கோபம் சிறு வயதிலேயே அவர்களின் குடும்பத்திற்கு மன அழுத்தத்தை கொடுத்தது. தினமும் ஏதாவது ஒரு பிரச்சினையை வீட்டுக்கு கொண்டுவருவதே வாடிக்கை ஆகிவிட நொந்து போனார்

"புரட்சிகளோ புரட்சியாளர்களோ பிறப்பதில்லை அப்படி ஒரு வேளை அவை பிறந்தாலும் மரணிப்பது இல்லை"

அமெரிக்க அளவுக்கு வத்தின் அமெரிக்கா புகழ் பெறாத ஒரு கண்டம்தான் என்றாலும் கியூப தேசம் பற்றி பலர் அறிய, தெரிய காரண மாய் அமைந்தவர் இந்த பிடல் காஸ்ட்ரோ. உலகமே அமெரிக்காவை தலைமையக-மாக கொண்டு இயங்கினாலும் தன் தேச எல்லைக்குள் அமெரிக்காவின் காற்றை கூட அனுமதிக்கமால் நெஞ்சு நிமிர்த்தி ஆட்சி புரியும் ஒருமாட்சிமை கொண்ட தலைவன் இந்தபிடல் காஸ்ட்ரோ புரட்சிஎன்ற சொல் கொச்சைபடுத்தப்பட்ட தொருகாலத்தில் புரட்சியின் உண்மை வடிவ மாய் வாழ்நாள் உதாரண-மாய் போற்றப்படுபவன் இந்தபிடல் காஸ்ட்ரோ தேசவிடுதலைக்காக ஏகாதிபத்திய எதிர்ப்புக்காகதன் சொத்து சுகங்களை தூர எறிந்த மின்னல் வீரன் இந்தபிடல் காஸ்ட்ரோ படிப்பதற்கும் அனுபவிப்பதற்கும் ஒருஉண்மைபுரட்சியாளனின் விறுவிறுப்பானவாழ்க்கை தொடர்.

காஸ்ட்ரோவின் அப்பா. ஆனால் எல்லா பிரச்சினைகளுக்கு பின்னாலும் காஸ்ட்ரோ பக்கமே நியாயம் இருந்ததால் காஸ்ட்ரோவின் தந்தைக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அதிலும் என்னதான் அடங்காமல் இருந்தாலும் கல்வியில் காஸ்ட்ரோ காட்டிய சரியான பார்வையினால் காஸ்ட்ரோ மீது அவர் அப்பாவினால் வெறுப்பை காட்ட முடியவில்லை. காஸ்ட்ரோவின் இள வயதுகளில் அவரின் தந்தைக்கு தேவைப்பட்டது அனைத்துமே காஸ்ட்ரோவுக்கு பொறுப்பு வந்தால் போதும், தன் சொத்துக்களை பொறுப்புடன் பாதுகாக்க தெரிந்தால் போதும் கூடவே தமது பாரம்பரியத்தில் எந்த குறையும் இல்லாமல் காஸ்ட்ரோவுக்கு ஒரு திருமணம். காலம் முழுவதும் பண்ணையை சுற்றி சுற்றியே காஸ்ட்ரோவின் வாழ்க்கை அமைய வேண்டும் என அவர் தந்தை நினைத்தார்.

ஆனால் காஸ்ட்ரோவின் சிந்தனைகளோ வேறு பக்கம் முதலில் சமூகத்தின் இந்த வேறுபட்ட தன்மையை அவர் புரிந்துகொள்ள முயன்றார். ஆனால் அந்த மாறுபட்ட மேடு பள்ளங்களை கொண்ட சமூக அமைப்பு அவனுக்கு புரியவே இல்லை. இப்போது தேர்தல் பிரசாரத்துக்கு சென்றபோது அவன் உணர்ந்த பல விடயங்களில் முக்கியமான பல முக்கியமாக தலைமையை தேர்ந்தெடுப்பதில் அந்த மக்களுக்கு நல்ல ஆயுதங்கள் எத்தனையோ இருக்கும் நிலையில் ஏன் மக்கள் அப்படியாவது தமது எதிர்ப்பை காட்டக்கூடாது என்பது அவனுக்குள் பெரிய கேள்வியாக இருந்தது.ஒரு கட்டத்தில் மக்களிடமே சென்று எல்லாவற்றையும் கேட்க ஆரம்பித்தான்.

புரட்சியின்தேவையை உணராமல் புரட்சி பாதையில் சிலரை மட்டுமே காலம் வழி நடத்தும் அவ்வாறானவர்களை சுற்றியே உலகமும் பின் தொடரும் அவர்களை மையப்படுத்தியே உலக இயக்கமும் தங்கும் காஸ்ட்ரோ தன்னை அறியாமலேயே புரட்சியின் வழியே செல்ல ஆரம்பித்தபோது பதினைந்து வயதையும் தாண்டி இருக்கவில்லை தன்னை சூழ இருக்கும் சமூகத்திற்கு சம கால தேவைகள் அதிகம் என்பதை உணர முயற்சித்த நேரம் காஸ்ட்ரோ தன்னை அறியாமலேயே புரட்சிக்குள் அல்லது புரட்சிகர சிந்தனைகளுக்குள் உள்வாங்க நேர்ந்தது.

ஆனால் புரட்சியின் பல படி நிலைகள் மிக வித்தியாசமானவை காஸ்ட்ரோ அந்த ஆழமான புரட்சிக்குள் செல்ல பல காலம் எடுத்தது அடுத்த அடுத்த நாட்கள் தீவிரமான சிந்தனைகள் பலதரப்பட்ட கேள்விகள் என்று உச்ச கட்ட குழப்பத்தில் தெளிவு தேடி பயணித்தான் காஸ்ட்ரோ என்னும் அந்த புரட்சியாளன்

தொடரும் ..........

# பகுதிநேர வேலையா? முழுநேர வேலையா?

அண்மையில் பிரிட்டனில் பகுதிநேரத் தொழிலாளர்களின் தொகை அதிகரிக்கும் நிலையானது வேலையின்மையின் அளவினைக் குறைப்பதில் அதிக பங்களிப்புச் செய்துள்ளது. ஒரு மாற்றுத்தீர்வாக உள்ள இந்த தொழில்வடிவத்தின் நன்மைகள் என்ன என்பதை அறிவதற்கு ஆழமாக ஆராய்தல் வேண்டும். தேசிய புள்ளிவிபரங்களுக்கான அலுவலகம், கடந்தவாரம் வெளியிட்ட தரவில், 2011 டிசம்பர் தொடக்கம் 2012 பெப்ரவரி வரையான இறுதிக் காலாண்டில் வேலையின்மையானது 1.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் வேலையற்றோர் தொகையானது 2.65 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்து. இப்புள்ளிவிபரங்களை மேலும் விரிவாக நோக்குவோமானால், முழுநேர வேலையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை 27,000 ஆல் வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளை, பகுதிநேர வேலை செய்பவர்களின் தொகை 80,000 இலிருந்து 7.9 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது 1992 இலிருந்து பார்க்கும்போது உயர்ந்த மட்டமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சில விமர்சகர்கள் இத்தகவலை கெட்ட செய்தியாகவே நோக்கினாலும், உண்மையில், பிரித்தானியாவில் வேலைவாய்ப்பு நிலைமை சிக்கலான நிலையில் இருப்பதனால் இந்த மாற்றம் நன்மை என்றே கூறலாம். முழுநேர தொழில் வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதனால், மக்கள் பகுதிநேர அல்லது தற்காலிக அல்லது சுயதொழில் வேலையாட்களாக மாறுகின்றனர். எனவே வேலையின்மையின் அளவு புள்ளிவிபரங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் சில வேலைத்துறைகளின் விபரங்கள் இத்தரவில் சேர்க்கப்படவில்லை




என்பதும் உண்மையே. ஏனெனில், ஒரு பிரபலமான இணையத்தளத்தில் முழுநேர வேலை விளம்பரங்கள் 114,962 என்ற தொகையில் இருந்தது. அதேவேளை 3747 பகுதிநேர வேலைகளே இருந்தது. முழுநேரப் பதவிகளுக்கான போட்டி அதிகரிப்பதனால், அதிகமானோர் பகுதிநேர வேலைகளை நோக்கி நகர்கின்றனர். அத்துடன், முழுநேர வேலையில் ஈடுபடுவதற்கான திறமைகளை பற்றாக்குறையாகக் கொண்டுள்ளவர்களும், நெகிழ்ச்சித்தன்மையான வேலை வகைகளை நாடுகின்றனர். (பல மில்லியன் மக்கள் வேறுபட்ட திறன்களுடனும் ஆர்வங்களுடனும் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுகின்றனர்.)

வேலையின்மையின் அளவு மேலும் அதிகரிக்கின்றபொழுது, வேலையை தேடும் உத்வேகமும் ஆர்வமும் அதிகரிக்கின்றது. எப்படியிருப்பினும் நீண்டகாலமாக வேலையற்றிருப்போர் தொகையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. கடந்த 12 மாதங்களாக 900,000 வரையானோர் வேலையற்றிருப்பதாக சமீபத்திய புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களில் 231,000 பேர் 18 தொடக்கம் 24 வயதிற்கு இடைப்பட்டவர்களாவர். இவர்களில் பலர் பகுதிநேர வேலைக்குக் கூட பொருத்தமற்றவர்களாக உள்ளனர்.

# சிதம்பர ரகசியம் என்பது எது தெரியுமா?



பஞ்சபூதங்களாக விளங்குபவன் இறைவன். அதில் ஆகாய ஷருபமாக திகழ்கிற தலம் தான் சிதம்பரம். இங்கே உருவம், அருவம், அருவுருவம் என்று மூன்று நிலைகளில் சிவப்பரம்பொருள் காட்சி கொடுப்பது இத்தலத்தின் கூடுதல் சிறப்பு. அதாவது ஆனந்தத் தாண்டவக் கோலத்தில், ஆனந்த நடராஜராகவும், சிவகாமி அம்மையாகவும் காட்சி தருவது உருவநிலை.

சிவலிங்க ஷருபத்தில் திருமூலராகவும், ஸ்ரீசக்ரமாக உமையபார்வதியும் காட்சி தருவது அருவுருவ நிலை. அடுத்து அருவமாக தரிசனம் தருவது தான் சிதம்பர ரகசிய ஸ்தானம். பொற்சபையில் ஆடல்வல்லாரின் வலப்பக்க சுவற்றில் சக்கரம் இருக்கும் இடம் தான் இது. இதை திருவம்பலச் சக்கரம், அன்னாகர்ஷண சக்கரம் என்றும் கூறலாம். சுதர்சன சக்கரத்தில் செல்வம் கொழிக்கும் தலமாக திருப்பதி விளங்குவது போல் அன்னாகர்ஷண சக்கரத்தால் அன்னத்தில் செழிக்கிறது சிதம்பரம். அந்தக் காலத்தில் அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என்று போற்றப்பட்ட தலம் இது. நான்கு வேதங்களோட விழுப்பொருள், அண்ட சராசரங்களோட முழுமுதற்பொருள் ஆகியவற்றை குறிப்பது தான் அருவ நிலை. அதனால் தான் இந்தத் தலத்துக்கு சிதம்பரம் என்ற பெயர் அமைந்தது. (சித்-அறிவு அம்பரம்-வெட்டவெளி) அதனால் தான் பரந்து விரிந்த ஆகாய தலமாகப் போற்றப்படுகிறது. இங்கே நம் கண்ணுக்குப் புலப்படும் நிலையில் தங்க வில்வ மாலைகள் சார்த்தப்பட்டிருக்கும்.

சர்வம் சிவமயமாகத் திகழும் இறைவனை, அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவனை, கருவறைச் சன்னதியின் திரையை விலக்கியதும், தங்க வில்வ மாலையை தரிசிக்கலாம். உலகப் பற்று, அறியாமை ஆகியவற்றுடன் வாழ்கிறவன், அவற்றிலிருந்து விலகி மெய்ப்பொருளை உணரும் நிலையைப் பெற, மூடிய திரையினுள்ளே இருக்கிற சிவப்பரம்பொருள் அருள்பாலிப்பதாக ஐதீகம்! இதனை ஆழ்ந்த பக்தியால் உணரமுடியுமே தவிர, எவருக்கும் உணர்த்த முடியாது.

இங்கே தினமும் இரவு 7.30 மணிக்கு சிறப்பு பூஜைகள் உண்டு. இந்த பூஜையில் கலந்து கொண்டால் உடலுக்கும், மனதுக்கும் புது சக்தியையும், முக்தியையும் கொடுக்கும். சிதம்பரத்தில் இந்த அருவ நிலைதான் மூலஸ்தானம். அதுதான் ரகசிய ஸ்தானமும். திரையை விலக்கியதும், நம் அறியாமை என்கிற இருளை விலக்கி அருள்கிறார் இறைவன் அஞ்ஞானத்தில் இருக்கிற நமக்கு மெய்ஞ்ஞானத்தை உணர்த்துகிறார். உலகத்தால் அனைவருமே, ஒரு திரையைப் போட்டபடியே பேசுகிறோம், பழகுகிறோம், வாழ்கிறோம். சகஉயிர்களைப் பார்ப்பதையும் இறைவனை அடைவதையும் உணர்த்துவதே சிதம்பர ரகசியத்தின் நோக்கம்.

# உலகச் சுடர்

## பான் கீ மூன் மியன்மாருக்கு விஜயம்



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயமொன்றை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பேன் கீ மூன் மியன்மாருக்கு சென்றடைந்துள்ளார். ஜனநாயக செயற்பாட்டளார் ஆன் சான் சூகியை சந்தித்த பான் கீ மூன் மேலும் ஜனநாயக மறுசீரமைப்பை ஏற்படுத்துவது குறித்து மியன்மார் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். ஐந்து வருடகால இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சிவில் அரசாங்க அதிகாரிகளை பான் கீ மூன் முதல் முறையாக சந்தித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரி கத்தரின் அஷ்டனின் விஜயத்தை தொடர்ந்து ஐ.நா செயலாளர் நாயகம் மியன்மாருக்கு சென்றுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதரக மட்ட அலுவலகத்தை மியன்மாரில் நிறுவவுள்ளதாக கத்தரின் அஸ்டன் அறிவித்திருந்தார். இதனிடையே மியன்மாரில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்கள் வலுவற்ற ஒன்றாக தற்போதும் காணப்படுவதாக நியூயோர்க்கில் வைத்து பான் கீ மூன் கூறியிருந்ததார்.முன்னாள் இராணுவ ஜெனரல் தான் சுவேவின் அழைப்பினை ஏற்று கடந்த 2009 ஆண்டு மியன்மாருக்கு விஜயம் செய்த பான் கீ மூன் கருத்து வேறுபாடுகளுடன் விஜயத்தை நிறைவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்த கப்பல் கைப்பற்றப்பட்டது



சிரியாவின் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்ததாக தெரிவிக்கப்படும் கப்பல் ஒன்றை லெபனான் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். சியாரா லியோனில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தக் கப்பலில் கனரக ஆயுதங்கள் பல இருந்ததாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்தக் கப்பலில் இருந்த 11 கப்பல் பணியாளர்களும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவை லிபியாவுக்குச் சொந்தமானவை என்று தகவல்கள் கூறுகின்றன. லிபியா சிரியாவின் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதாக ஏற்கனவே ரஷ்யா குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிரியாவில் தற்போது யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒபாமா, மனைவியுடன் சேர்ந்து 5 – ந் தேதி பிரசாரத்தை தொடங்குகிறார்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஒபாமா தனது மனைவியுடன் சேர்ந்து வருகிற 5-ந் தேதி தேர்தல் பிரசாரத்தை தொடங்குகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதம் 6-ந் தேதி நடைபெறுகிறது. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். ஒபாமாவின் தேர்தல் பிரசார சுற்றுப்பயணத்தை அவருடைய பிரசார மேலாளர் ஜிம் மெச்சினா வெளியிட்டார்.

அதன்படி ஒபாமா, தனது மனைவி மிச்செலியுடன் இணைந்து மே 5-ந் தேதி பிரசாரத்தை தொடங்குகிறார். அன்றைய தினம் ஒஹியோ, வெர்ஜினியா ஆகிய 2 இடங்களில் நடைபெறும் பேரணி-பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள். என்றாலும் ஜனாதிபதி என்ற முறையில் அதிகாரபூர்வ ஒபாமாவின் பிரசார பயணம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மெச்சினா கூறினார்.

ஒபாமா தனது முதல் பிரசாரத்தை ஒஹியோ மற்றும் வெர்ஜினியாவில் தொடங்குவதற்கு 2 காரணங்கள் கூறப்படுகிறது. இதில் ஒன்று மனைவியை அழைத்து சென்று பிரசாரம் செய்வதால் கூடுதல் ஆதரவு கிடைக்கும் என்பதாகும். மேலும் இரு மாநிலமும் வெற்றிக்கு உதவியாக அமையும் முக்கிய மாநிலமாக இருப்பதாலும் இந்த முடிவை ஒபாமா எடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

வெர்ஜினியா மாநில கவர்னராக குடியரசு கட்சியை சேர்ந்த பாப் மெக்டோனில் பதவி வகித்து வருகிறார். ஒபாமாவின் தேர்தல் பிரசாரம் குறித்து அவர் கூறுகையில், "ஒபாமா வெர்ஜினியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவருடைய கொள்கைகள் நாட்டிற்கு எதிராக இருக்கிறது. எனவே வெர்ஜினியா மக்களும், ஏனைய பகுதியும் அவரை மேலும் 4 ஆண்டுகள் நீடிக்க அனுமதிக்க மாட்டார்கள்" என குறிப்பிட்டார்.

ஒபாமாவை எதிர்க்கும் குடியரசு கட்சியின் வேட்பாளர் யார்? என்பது இன்னும் அதிகாரபூர்வமாக முடிவாகவில்லை. என்றாலும் வேட்பாளராக மிட் ரோம்னி தேர்வு பெறுவது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. சமீபத்தில் நடந்த 5 மாகாணங்களிலும் அவருக்கே அமோக ஆதரவு கிடைத்தது. இவரை எதிர்த்து நின்ற ஜின்கிரிச் வேட்பாளர் தேர்வு போட்டியில் இருந்து விலகினார். தற்போது மற்றொருவரான டெக்சாஸ் கவர்னர் ரிக் பெர்ரியும், மிட் ரோம்னிக்கு தனது ஆதரவை தெரிவித்து விட்டார். பெர்ரியின் இந்த முடிவை மனதார வரவேற்பதாக மிட் ரோம்னி கருத்து தெரிவித்தார். எனவே குடியரசு கட்சி வேட்பாளராக அவர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதும் மிட் ரோம்னியும் தனது தீவிர பிரசாரத்தை மேற்கொள்வார்.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையில் ஒபாமா கைச்சாத்து



ஆப்கானிஸ்தானின் எதிர்கால அபிவிருத்தி குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா கைச்சாத்திட்டுள்ளார். யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கை ஆப்கான் ஜனாதிபதி ஹமிட் கர்ஸாயின் இணக்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு அமெரிக்கப் படையினர் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியதன் பின்னர், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஆப்கானிஸ்தான் படையினரின் பங்களிப்புக்களை அதிகரித்து, திறமையான இராணுவக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு திடீர் - விஜயம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா, இராணுவத் தளம் ஒன்றிலிருந்து அமெரிக்க மக்களுக்காக நேரடியாக உரை நிகழ்த்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தான் யுத்தத்தில் அமெரிக்கப் படையினரின் பங்குபற்றல்களை ஜனாதிபதி ஒபாமா இதன்போது பாராட்டியுள்ளார். அல்கைதா இயக்கத்துக்கு எதிரான யுத்தத்தை அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் ஆரம்பித்து 10 வருடங்கள் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அல்கைதா இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஒசாமா பின்லாடன் கொல்லப்பட்டு ஒரு வருடம் நிவைடையும் நிலையில், ஜனாதிபதி ஒபாமாவின் விஜயம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

## எகிப்து அமைச்சரவையில் உடனடி மாற்றங்கள்

எ்கிப்தின் அமைச்சரவையில் உடனடியாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய அமைச்சர்களின் பொறுப்புக்கள் பெரும் பாலும் மாற்றப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் முஸ்லிம் தோழமைக் கட்சியுடன் இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள முரன்பாடுகளை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட்டதன் பின்னர், எகிப்தில் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. மக்கள் போராட்டத்தை அடுத்து, முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவி விலகியிருந்தார்.

## ஒசாமா நினைவு தினத்தில் ஆப்கானில் தொடர் குண்டுத்தாக்குதல்கள்

அல்குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடனின் முதலாம் ஆண்டு நினைவு தினமானல் ஆப்கானில் தொடர் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது ஒருநாள் பயணத்தை முடித்து விட்டு திரும்பிய சிறிது நேரத்தில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்படட்டுள்ளன. இதனால் இத்தாக்குதல்கள் ஒபாமாவை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றன. இச்சம்பவத்திற்கு தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அல்குவைதா இயக்கத்தின் முன்னாள் தலைவர் பின்லாடனின் நினைவு தினத்தை முன்னிட்டு தீவரவாதிகள் திடீர் தாக்குதலில் ஈடுபடக்கூடும் என அமெரிக்க உளவுத்துறை ஆப்கான் பொலிஸாருக்கு ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது.தாக்குதலில் குறைந்தபட்சம் 6 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

## ஆங் சான் சூகி பதவியேற்கவுள்ளார்



மியன்மாரின் ஜனநாயக செயற்பாட்டாளர் ஆங் சான் சூகி பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றதை அடுத்து அவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். எனினும் நாட்டில் ஜனநாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதற்கு சூகி மறுப்புத் தெரிவித்திருந்தார். சர்வதேச நாடுகளின் கோரிக்கைகள் மற்றும் உறுதி மொழிகளை அடுத்து ஆங் சான் சூகி பதவியேற்க இணங்கியிருந்தார்.இது மியன்மாரின் வரலாற்றில் முக்கியதொரு விடயமாக கருதப்படுகின்றது.

## ஹில்லரி கிளின்டன் சீனா விஜயம்

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹில்லரி கிளின்டன் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனாவைச் சென்றடைந்துள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகள் குறித்து இந்த விஜயத்தின்போது கலந்துரையாடப்படவுள்ளது. சீனாவின் உயர்மட்ட அதிகாரிகள் பலரையும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் சந்திக்கவுள்ளார். இதன்போது அமெரிக்க தூதரகத்தில் தஞ்சமடைந்த சீன செயற்பாட்டாளர் குறித்து கவனம் செலுத்தப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் மனித உரிமைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று கூறப்படுகின்றது. சீனாவும் அமெரிக்காவும் அடிக்கடி சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிக்கும் நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## துருக்கியில் முதன்முறையாக சிவில் அரசியலமைப்பு

துருக்கியில் முதல் முறையாக முழுமையான சிவில் அரசியலமைப்பு வரையப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 30 வருடங்களின் முன்னர் இராணுவ ஆட்சியாளர்களால் வரையப்பட்ட தற்போதுள்ள அரசியலமைப்பில் ஜனநாயக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. தற்போதுள்ள அரசியலமைப்பின் பிரகாரம் இராணுவத்தினருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தனிநபர் மற்றும் சிறுபான்மையினர் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இறுதியில் புதிய அரசியலமைப்பு வரையப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# உண்ணாவிரத நடிகனின் தனிஈழம் சாத்தியமாகுமா?

மூன்று தசாப்த யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு யுத்தக்குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச ரீதியில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவரபடுகின்றது. இவ்வாறான நிலையில் தனி தமிழீழத்தை அமைக்கவேண்டும் என்று தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான மு.கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளமை



சர்வதேச அரங்குகளிலும் பெரும் சர்ச்சையை மீண்டும் தோற்றுவித்துள்ளது. 1985 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட 'டெசோ' எனப்படும் தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு மீண்டும் தலையை தூக்கி தனித்தமிழீழ கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது. பல ஆண்டுகளுக்கு பின்னர் தூசு தட்டப்பட்ட அவ்வமைப்பின் முதல் கூட்டத்தில் 'தனித் தமிழ் ஈழத்தை அமைப்பதற்காக ஐ.நா. சபை பொதுவாக்கெடுப்பை நடத்த வேண்டும். அதனை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தனித் தமிழ் ஈழம் உருவாக்கியே தீரவேண்டும். அதைப் பார்க்காமல் நான் கண் மூடமாட்டேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறிவருகின்றார்.

தனது இருப்பை மீண்டும் தக்கவைத்து கொள்வதற்காக இவ்வாறான நாடங்களை அவர் மீண்டும் ஆடுகின்றாரா?என்ற சந்தேகமும் வலுப்பெற்றுள்ளது. இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நடத்தப்பட்ட தமிழக சட்டசபைத்தேர்தலில் தி.மு.க தோல்வியை தழுவியிருந்தது. இந்நிலையில் காங்கிரஸி டமிருந்து வேகமாக விலகி வருகின்ற தி.மு.க.வின் இந்த கோஷமானது அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. மீண்டும் தனது இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் தமிழகத்தின் தமிழின உணர்வாளர்களின் ஆதரவை திரட்டிகொள்ளும் "இலங்கையில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே இனியும் ஒத்துப்போகாது. இருவேறு இனங்களான இவர்கள் தனித் தனியாக வாழ்வதே சரியானதாக இருக்கும்.

தமிழர்களின் தாயகப் பகுதிகளான கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களைப் பிரித்து தனித் தமிழ் ஈழம் அமைப்பதே பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதாக இருக்கும். தனித்தமிழ் ஈழம் அமைப்பது தொடர்பான பொது வாக்கெடுப்பை ஐ.நா. பொதுச்சபை நடத்த வேண்டும். இதற்கு இந்திய அரசு தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது" "சிங்களவர்களை ஒருபோதும் நாம் நம்ப முடியாது. அவர்கள் நம்ப வைத்துக் கழுத்தறுப்பவர்கள். அவர்களின் உறுதிமொழியை நம்பித்தான் நான் கூட சென்னையில் உண்ணாவிரதம் இருந்ததை வாபஸ் பெற்றேன். ஆனால் அவர்கள் பொய்யான உறுதியமொழியை அளித்து விட்டு ஒட்டுமொத்தத் தமிழர்களையும் கொன்று குவித்தனர். இனியும் தமிழ் மக்களால் அவர்களுடன் இணைந்து வாழ முடியாது. தமிழர்களுக்கென தனி நாடு, தமிழ் ஈழ நாடு அங்கே அமைந்தால்



மட்டுமே தமிழ் இனம் அங்கு பிழைக்கும். எனவே, இதனை ஐ.நா. பொதுவாக்கெடுப்பின் மூலம் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு இந்திய அரசு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றே முதலாவது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 'போராடுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய உள்ளம் தூய்மையாக இருந்தால் அந்த போர்க்குணம் என்றைக்கும் மாறாமல் இருக்குமானால் எந்த இலட்சியத்திற்காக, குறிக்கோளுக்காக போராடுகிறார்களோ அந்த நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் மாறாமல் இருப்பார்களேயானால் அந்த போராளிகளிடத்தில் எங்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு என்று கருணாநிதி கூட்டத்தின் முடிவில் தெரிவித்துள்ளார். இவருடைய இந்த கோரிக்கை எவ்வளவு தூரத்திற்கு சாத்தியமாகும் என்பதற்கெல்லாம் வரலாறு முடிவுகண்டுவிட்டது. யுத்தத்திற்கு பின்னர் இலங்கைக்கு வருகைதந்திருந்த தமிழக எம்.பிக்கள் குழுவிடவும், இந்திய பாராளுமன்ற எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழுவிடவும் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்திய குழுக்கள் நாடு திரும்புவதற்கு முன்னரே அவ்வாறான உறுதிமொழிகள் எதனையும் வழங்கவில்லை என்று இலங்கை அரசாங்கம் மறுதலித்தது. கருணாநிதியின் மகளான கனிமொழி தலைமையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த குழுவினரிடமும் இதே உறுதிமொழியே இலங்கை அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டு பின்னர் மறுக்கப்பட்டது. இதில் ஓர் விடயத்தை மட்டுமே நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் தனி தமிழீத்திற்கான உச்சக்கட்ட யுத்தம் இலங்கையில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துவதற்கு பல முனைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உண்ணாவிரத நாடகத்தையும் குறிப்பிடலாம்.

தமிழர்களை கொன்று குவிக்காதே எனும் தொனியில் மின்விசிறிகள், குளிரூட்டிகள் சகிதம் உண்ணாவிரத மேடையில் படுத்துக்கொள்கின்ற கருணாநிதி எவ்விதமான உறுதிமொழிகளும் இன்றி இடைநடுவில் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்ட சம்பவங்களும் அக்காலப்பகுதியில் இடம்பெறாமல் இல்லை. அக்காலப்பகுதியில் கருணாநிதி உண்ணாவிர நடிகனாகிவிட்டமை தமிழகத்தை சேர்ந்தவர்கள் மத்தியில் மட்டுமன்றி உலகவாழ் தமிழர்கள் மத்தியில் இருந்த கருத்தாகும். அதனாலோ என்னவோ சட்டசபைத்தேர்தலில் அவர் தோல்வியை தழுவிக்கொண்டார். சாதாரண அதிகார பகிர்வை கூட வழுங்காத, சர்வதேச கோரிக்கைகளை நிறைவேற்றதாத, தான் நிறுவிய கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கூட நிறைவேற்றாமால் பின்னடிக்கின்ற இலங்கை அரசாங்கம் தனி தமிழீழத்திற்கான அங்கீகாரத்தை வழங்குமா? தமிழீழத்திற்கு முன்னர் தமிழர்தாயக பகுதிகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோதமான இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளிவைப்பதற்கு கருணாநிதி அழுத்தங்களை கொடுத்திருந்தால் அது சாதாரண கோரிக்கையாக அமைந்திருக்கும். எனினும் யுத்தத்தினால் வென்றெடுக்கமுடியாத தமிழீழத்தை படுக்கை உண்ணாவிரத நாடகனால் பெற்றுக்கொடுக்கமுடியுமா? இதேவேளை எமது நண்பனான இந்தியா தனது வெளியுறவுக் கொள்கைக்கு அப்பால் எவ்வாறான அழுத்தங்களையும் எம்மீது பிரயோகிக்காது என்று அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில்,தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தி.முக. வின் தலைவருமான மு.கருணாநிதி தமிழீழத்தை அமைக்கும் தனது கனவை இந்தியாவில் வைத்துக்கொள்ளட்டும். அக்கனவு இலங்கையில் சாத்தியமாகாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையில் வாழும் தமிழர்களை விட மிகவும் அதிகமான தமிழர்கள் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர் என்பதனால் தமிழீழத்தை அமைக்கும் தனது கனவை தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி இந்தியாவில் வைத்துக் கொள்ளட்டும். இலங்கையில் அது ஒருபோதும் சாத்தியமாகாது. கருணாநிதியால் இலங்கையில் ஈழத்தை உருவாக்க முடியாது. இது ஒரு இறைமையுள்ள நாடு. ஈழம் பற்றி யார் பேசுகிறார்களோ அவர்களை நாம் பயங்கரவாதிகளாகவே கருதுவோம். இலங்கையில் இப்போது யுத்தம் இல்லை. இன இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எல்லோருடைய வாழ்வும் அமைதியாக நகர்கின்றுத என்று பாதுகாப்பு அமைச்சின் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சர்ச்சைக்குரிய அறிக்கைகளின் மூலம் அரசியல்ஆதாயம் தேடும் இந்திய அரசியல் வாதிகளில் ஒருவராவார். தனது மகள் கனிமொழியை விடுதலை செய்தால் டெசோ அமைப்பையும் கைவிடுவதாக மத்திய அரசிற்கு ஒப்புதல் அளிக்கும் அளவிற-கு கருணாநிதி தன் குடும்பத்தின் நலனையே விரும்பும் ஒருவராவார். இப்படியிருக்க ஈழத்தமிழர்களின் உயிரோடு விளையாடும் நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றார் இது தனிதமிழீழத்திற்கான கோரிக்கையா? இல்லையேல் அரசியல் தந்திரோபாயமா? என்பதற்கெல்லாம் விடைகாண வேண்டிய நேரம் வெகுதொலைவில் இல்லை.

**நாடோடி.......**



## அரசியலில் குதிக்கப் போவதில்லை : சச்சின்



இந்திய அணியின் "மாஸ்டர் பேட்ஸ்மேன்" சச்சின். கிரிக்கெட் அரங்கில் 100 சதம் உட்பட எண்ணற்ற சாதனைகள் படைத்துள்ளார். இதற்கு அங்கீகாரமாக ராஜ்யசபா எம்.பி பதவிக்கு, ஜனாதிபதியால் பரிந்துரை செய்யப்பட்டார். இவருக்கு மாதம் ரூ.50 ஆயிரம் சம்பளம், பார்லிமென்ட் நடக்கும் நாட்களில் ரூ. 2 ஆயிரம் தினப்படி, டில்லியில் சொகுசு பங்களா, இலவச ரயில், விமான பயணம் உள்ளிட்ட ஏராளமான சலுகைகள் கிடைக்க உள்ளன. இதையடுத்து இவர் முழுநேர அரசியலில் குதிக்கப் போவதாக செய்திகள் வெளியாகின.

இது குறித்து புனேயில் நடந்த பாராட்டு விழாவில் பங்கேற்ற சச்சின் பேசியபோது, நான் அரசியல்வாதி கிடையாது. விளையாட்டு வீரராகவே தொடருவேன். கிரிக்கெட்டை கைவிட்டு அரசியலில் குதிக்கப் போவதில்லை. கிரிக்கெட் தான் எனது வாழ்க்கை. தொடர்ந்து போட்டிகளில் விளையாடுவேன். 22 ஆண்டுகளுக்கும் மேலாக கிரிக்கெட்டுக்கு ஆற்றிய சேவைக்கு அங்கீகாரமாக தான் ராஜ்யசபா எம்.பி., பதவிக்கு ஜனாதிபதி என்னை தேர்வு செய்திருக்கிறார் என நம்புகிறேன். இதற்கு முன் பிரபல பாடகி லதா மங்கேஷ்கர், நடிகர் பிரித்விராஜ் கபூர் போன்றோர், அவர்கள் சார்ந்த துறையில் செய்த சேவைக்காக எம்.பி., பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டனர்.என்னைப் பொறுத்தவரை 100வது சதத்தை காட்டிலும் உலக கோப்பை வென்ற தருணத்தையே சிறந்ததாக கருதுகிறேன். கடந்த 2003ல் பயிற்சியாளர் ஜான் ரைட், 100வது சதம் அடித்த முதல் வீரர் என்ற பெருமையை பெறுவேன் என கணித்தார். இந்தக் கனவு நனவானது. அதே நேரத்தில் உலக கோப்பைக்காக சுமார் 22 ஆண்டுகள் காத்திருக்க நேர்ந்தது. 2011ல் உலக கோப்பையை இந்தியா வென்ற போது, மும்பை மைதானத்துக்கு வெளியே எனது கார் மீது ஏறி நின்று ரசிகர்கள் ஆட்டம் போடுவதாக, டிரைவர் புகார் கூறினார். அவர்களை தடுக்க வேண்டாம் என அறிவுறுத்தினேன். எனது காருக்கு ஏற்படும் சேதத்தை பற்றி கவலைப்பட வில்லை. ஏனென்றால் உலக கோப்பை வெற்றி, நாட்டை ஒருங்கிணைத்தது. அனைவரும் ஒன்றுசேர்ந்து கொண்டாடினர். அது தான் எனது வாழக்கையின் மிகச் சிறந்த நாளாக அமைந்தது.

ஒருவர் "பேட்" செய்யும் போது நிகழ்காலத்தை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த காலத்தை பற்றி நினைக்கக் கூடாது. மனதை தெளிவாக வைத்துக் கொண்டால், நெருக்கடி இல்லாமல் விளையாடலாம். கிரிக்கெட் மீதான எனது மோகம் அப்படியே உள்ளது. அது தான் எனது வாழ்க்கை. எனக்காக ரசிகர்கள் பிரார்த்திக்க வேண்டும். அவர்களது ஆதரவு எனக்கு தேவையான பலத்தை அளிக்கும். ஓய்வு பெறும் எண்ணம் தற்போதைக்கு இல்லை. சரியான முடிவுகளை எடுக்க, எனக்கு வழிகாட்டும்படி கடவுளை பிரார்த்திக்கிறேன். இவ்வாறு சச்சின் கூறினார்.

## உலக நீச்சல் சம்பியன் குளியலறையில் மரணம்



100 மீற்றர் பிரேஸ்ட்ஸ்ரோக் நீச்சலில் தற்போதைய உலக சம்பியனான டேல் ஓயன் (Alexander Dale Oen) தனது 26 ஆவது வயதில் திங்கட்கிழமை காலமானார்.

நோர்வேயைச் சேர்ந்த டேல் ஓயன் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான நோர்வே நீச்சல் போட்டியாளர்களுடன் அமெரிக்காவில் பயிற்சிகளில் ஈடுபட்டுவந்தார். இம்மரணத்திற்கான காரணம் உடனடியாக கண்டறியப்படவில்லை. எனினும் அவர் மாரடைப்பால் இறந்ததாக நோர்வே நீச்சல் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் திங்கட்கிழமை இரவு குளியலறையில் ஷவரில் குளித்துக் கொண்டிருந்த நிலையில் தரையில் வீழ்ந்து கிடந்ததாக நோர்வே நீச்சல் சம்மேளனம் கடந்த ஞாயிற்றுககிழமை அறிவித்துள்ளது. "அவர் குளியலறைக்குச் சென்று நீண்ட நேரமாக திரும்பிவராமல் இருந்ததால் கதவை தட்டியபோது பதில் எதுவும் வரவில்லை. பின்னர் உள்ளே சென்று பார்த்தபோது அவர் தரையில் கிடந்தார். அவர் அவசரமாக மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவரின் இதயத்தை மீண்டும் துடிக்க வைப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்குமேல் முயற்சிக்கப்பட்டபின் அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது என அச்சம்மேளனம் தெரிவித்தது.

அன்று மாலை அவர் தனது குடும்பத்தினருடன் ஸ்கைப் மூலம் உரையாடியதாகவும் அவர் உடல் நலமில்லாமல் இருப்பதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை எனவும் நோர்வே பத்திரிகையான Aftenposten தெரிவித்துள்ளது. கடந்த வருடம் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகளில் 100 மீற்றர் பிரேஸ்ட்ஸ்ரோக் போட்டியில் டேல் ஓயன் தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். அதற்குமுன் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அவர் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் நோர்வே வென்ற முதலாவது பதக்கம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

டேல் ஓயனின் திடீர் மரணம் குறித்து நோர்வே பிரதமர் ஜேன்ஸ் ஸ்டோல்டன்பர்க் அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவித்துள்ளார். சர்வதேச நீச்சல் சங்கங்களின் சம்மேளனமும் டேல் ஓயனின் மரணம் குறித்து அதிர்ச்சியடைவதாக தெரிவித்துள்ளது.


JK Accountants
ACCA
Chartered Certified Accountants

Accounting, Bookkeeping, Payroll Services and Tax Advice in East London


Tax Returns | VAT Returns
Payroll | Solicitors Accounts
Bank Reconciliation | Company Formation
Business Plan | CGT & Death Tax Advice
Cash-Flow Forecast

தரமான சேவை நிறைவான கட்டணம்
TP: 02084711644/02084712200
Fax: 020847110101

230, High Street North, East Ham, London E 12 6SA
info@jkaccountants.com www.jkaccountants.com

UK COOL
SHOP FITTINGS
168 MANRO FARM ROAD, WEMBLEY ,MIDDLSEX, HA0 1DD, UK
TP: 02033710046 , MOB:07951854057, EMAIL: UKCOOL247@YAHOO.CO.UK

REFRIGERATION
FRIDEG
FREEZER
COLD ROOM
AIR CONDITION
(New & Used)
REPAIRING & INSTALLATION
SHOP FITTINGS
CEILING
COUNTER
SHELVING
FLOORING
CCTV CAMER
LIGHTING & WIREING
SHOP FRONT & SHUTTER
BUILDING WORKS
ROOFING
EXTENSION
MOVING & DELIVERY
URGENT REPAIR
CALL: 07951854057
1 YEAR PARTS & LABOUR WARRENTY
7 DAYS 24 HURS SERVICE & REPAIR


DEEPAM TV
செய்திகள்
NEWS
சதுரங்கம்
தீபம்
www.deepamtv.tv
QUALITY TAMIL MEDIA

# புலம்பெயர்ந்தோர் வாக்குகளை ஜனநாயக்கக் கட்சி கைப்பற்றுமா?

அண்மையில் David Cameron, தனது உயர்மட்ட அரசியல் ஆலோசகர்களில் ஒருவரான Stephen Gilbert இனை கனடாவிற்கு அனுப்பியிருந்தார். தனது பிரச்சார உத்திகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில், புலம்பெயர்ந்தோர் வாக்குகளை தம் பக்கம் ஈர்க்கும் முகமாகவே இவரை அனுப்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Gilbert, கனடாவில் தற்போதைய குடியுரிமை அமைச்சரான Jason Kenney யை சந்தித்திருந்தார். புலம்பெயர்ந்த சமுகங்களின் மத்தியில் Kenney கொண்டுள்ள செல்வாக்கின் காரணமாக, ஊடகங்களில் அதிகமாக இவர் "smiling buddha" or "minister for curry in a hurry" என்றவாறெல்லாம் குறிப்பிடப்படுகின்றார்.

கனடாவிலுள்ள ஜனநாயகக் கட்சிகளின் நிலைத்திருப்பினை, புலம்பெயர் மக்களைக் கொண்டு தீர்மானிப்பதில் இவர் மிக முக்கியமானவராகக் காணப்படுகின்றார். எனவே Gilbert இனை கனடாவிற்கு அனுப்பி நுணுக்கங்களை அறிய Cameron முற்பட்டுள்ளார். கலாச்சாரம் சார்ந்த நிகழ்வுகள், உணவுகள் மற்றும் உடைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட திருப்புமுனைகளின் ஊடாக, இனம் சார்ந்த சவால்களையும் வாய்ப்புக்களையும் பலப்படுத்தும் பிரதான உத்திகளை கனடா பயன்படுத்துகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த Tories என்பவருக்கு புலம்பெயர்ந்த சமுகங்களின் மத்தியில் வலுவான ஆதரவு இருப்பதாக ஆய்வுகள் தெரிவித்து வருகின்றன. எனவே Cameron கடுமையான போட்டியை எதிகொள்ள வேண்டி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கறுப்பின மற்றும் சிறுபான்மையின மக்களுடனான பிரச்சாரங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது, என ஜனநாயகக் கட்சியின் தலைவரான Baroness Warsi குறிப்பிட்டுள்ளார்.

Tory யினுடைய தலைமையகம் கடுமையாகவும் தந்திரமாகவும் சிந்திக்கவேண்டியுள்ளது. ஏனெனில் அவர் சில சவால்களை சந்திக்கும் அபாயம் காணப்படுகின்றது. புலம்பெயர் குடும்பங்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் Tory க்கு பிரச்சினைகளை உண்டுபண்ணலாம்.

# பிரித்தானியப் பொருளாதாரம் இரண்டு மடங்கு பின்னடைவு.



பிரித்தானியப் பொருளாதாரம் இரண்டு மடங்கு பின்னடைவை சந்தித்துள்ளதாக பொருளாதார வளர்ச்சி பற்றிய இவ்வாண்டின் முதல் உத்தியோகபூர்வ மதிப்பீடு எடுத்துக்காட்டியுள்ளது. 1970 காளில் ஏற்பட்ட இரண்டு மடங்கு வீழ்ச்சியைப் போன்று நிதி நெருக்கடிகளின் பின்னர் பிரித்தானியப் பொருளாதாரம் மந்த நிலைக்குச் சரிவடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சியினால் இந்நிலை தோன்றியுள்ளதாக இந்த தரவு தெரிவித்துள்ளது. இவ்வாண்டின் முதல் காலாண்டில் 0.2 சதவீதமாக பிரித்தானியாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என தேசிய புள்ளிவிபரங்களுக்கான அலுவலகம் (ONS) தெரிவித்துள்ளது. 2011 இன் இறுதிக் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) 0.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்தே இந்த நிலை நீடிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதாவது ஜனவரி தொடக்கம் மார்ச் வரையான முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்ற சந்தை எதிபார்ப்புக்களை குழப்புவதாக இவ்விடயம் அமைந்துள்ளது. நாட்டின் உற்பத்தித்துறை வளர்ச்சியடையத் தவறியமையால் மூன்று ஆண்டுகளில் கட்டுமான உற்பத்தி பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது என ONS தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2011 இன் இறுதியில் இருந்த 0.3 சதவீதம் என்ற நிலையானது 2012 இன் முதல் காலாண்டில் 0.2 சதவீதம் என்ற நிலைக்கு சரிந்துள்ளதாக ONS குறிப்பிட்டுள்ளது. 2012 இன் ஆரம்பத்தில் 2.4 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் அதிக வளர்ச்சி ஏற்படும் என பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் சேவைத்துறையின் மந்தமான வளர்ச்சி மற்றும் கைத்தொழிற் துறையின் உற்பத்தி வீழ்ச்சி போன்ற காரணங்களால் 03 வருடங்களாக பாரிய கட்டுமான உற்பத்தி வீழ்ச்சி காணப்பட்டு வந்திருப்பதனால் அவர்களது எதிர்பார்ப்பு உடைந்து போயுள்ளது.

யூரோ வலய கடன் நெருக்கடிகள், அரச செலவுக் குறைப்புக்கள், உயர் பணவீக்கம் மற்றும் பாதிப்படைந்த வங்கித்துறை போன்ற சிக்கல்களால் 2008--2009 வரையான காலப்பகுதியில் பிரித்தானியப் பொருளாதாரம் 7.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. புதன்கிழமை (25.04.2012) வெளியான தரவுகளின் படி, 2008 இன் முதல் காலாண்டில் 4.3 சதவீதம் வரை சரிந்திருந்தது. அதேவேளை 2010 இன் இரண்டாவது காலாண்டில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பொருளாதாரம் 0.4 சதவீதம் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளது.

மக்கள் வெப்ப உடைகளை வாங்குவது அதிகரித்தமை போன்ற காரணங்களால் கடந்த மாதம் சில்லறை வியாபாரம் அதிகரித்துள்ளது. ஆனால், கைத்தொழில் துறை 0.4 சதவீதத்தாலும் சேவைத்துறை 0.1 சதவீதத்தாலும் சரிந்துள்ளது. பாரிய வணிக சேவைகள், நிதித்துறை என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இவற்றிற்கு காரணமானது.

இந்த ஆண்டில் 0.8 சதவீதம் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என வரவு செலவுத் திட்டங்களுக்குப் பொறுப்பான பிரித்தானிய அலுவலகம் எதிர்வுகூறியிருந்தது. ஆனால் புதன்கிழமை தரவின்படி இந்த வருட முதல் காலாண்டின் உற்பத்தி முன்னைய ஆண்டுகளை விட உயர்வடையவில்லை என எடுத்துக்காடியுள்ளது. புதன்கிழமைக்கு முன்னர், இங்கிலாந்து வங்கி மற்றும் பெரும்பாலான தனியார் துறை பொருளாதார நிபுணர்கள், பிரித்தானியப் பொருளாதாரம் வலுவான நிலையில் உள்ளது" என வாதிட்டனர். இதற்காக அவர்கள் தனியார் துறையின் சேவைகள் அதிகரிப்பையும் வேலையின்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் காரணம் காட்டினர்.

புதன்கிழமை வெளியான புள்ளிவிபரங்கள், பிரித்தானிய ஜனநாயக் கூட்டணிக்கு ஒரு ஆழமான அடியாகவே இருக்கும். பிரதமர் டேவிட் கமருனுடைய கூட்டணி அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் அதிகரிக்கின்றன. மார்ச்சில் வெளியிடப்பட்ட வருடாந்த வரவுசெலவுத்திட்டம் மோசமான வரவேற்பையே பெற்றுள்ளதாகவும், மே-03 இல் நடக்கவிருக்கும் தேர்தலில் பல சங்கட நிலைகளை ஏற்படுத்தும் எனவும் கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை காட்டும் புள்ளிவிபரங்கள் மிக மிக ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் டேவிட் கேமருன் கூறியுள்ளார். இப்பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதமரும் நிதியமைச்சர் ஜார்ஜ் ஆஸ்பர்ணுமே பொறுப்பு என்று எதிர்கட்சித் தலைவர் எட் மிலிபாண்ட் குற்றஞ்சாட்டியுள்ளார். அழிவை ஏற்படுத்தக் கூடிய பொருளாதார கொள்கைகளே இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் மிலிபாண்ட் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் ஏற்கனவே அழுத்தத்திலேயே உள்ளதாக ஜாம்பவான் ஊடகமான Report Murdoch என்ற ஊடகம் தெரிவித்துள்ளது. எப்படியிருப்பினும் பாரிய வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை நீக்கி, எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது அரசின் கட்டாயத் தேவையாகும்.

# இங்கிலாந்து இளவரசர் வில்லியமுடைய திருமண நாள் கொண்டாட்டம்



இங்கிலாந்து இளவரசர் வில்லியம் - கேத் மிடில்டன் தம்பதி தங்கள்து முதல் திருமண நாளை கடந்த மாதம் 29 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடினர். இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - மறைந்த இளவரசி டயானா தம்பதியின் முதல் மகன் வில்லியம். வயது 29. இவருக்கும் இவரது காதலி கேத் மிடில்டனுக்கும் கடந்த ஆண்டு ஏப்ரல் 29ம் தேதி லண்டனின் பழமையான வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்தில் திருமணம் நடந்தது. 30 ஆண்டுக்கு பிறகு நடந்த அரச குடும்ப விழாவை காண லண்டன் நகர தெருக்களில் 10 லட்சம் பேர் குவிந்திருந்ததனர். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு மூலம் பார்த்து பரவசமடைந்தனர். வில்லியம் - கேத் தம்பதி தங்கள் முதல் திருமண நாளை கொண்டாடியதன் மூலம் கேத் அரச குடும்பத்தின் அதிகாரப்பூர்வ முக்கிய உறுப்பினராகி உள்ளார். இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத், மன்னர் பிலிப், அவர்களது மகன் சார்லஸ், அவரது 2வது மனைவி கமீலா பார்க்கர் உட்பட அரச குடும்பத்தினர் அனைவரும் இந்த தம்பதிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். இதுதவிர, உலகம் முழுவதிலுமிருந்து பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தனர். வில்லியம்,கேத் தம்பதி தங்களது திருமண நாளை முன்னிட்டு, பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நேரில் சென்று பல்வேறு உதவிகளை - வழங்கியுள்ளணர். அத்துடன் கேத் கர்ப்பமாக இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# ஹீத்ரோவில் பயணிகள் மூன்று மணித்தியாலங்கள் வரிசையில் நின்றதாக புகார்




ஹீத்ரோ விமான நிலையத்தில், குடிவரவு பரிசோதனைகளை கடப்பதற்கு பயணிகள் மூன்று மணிநேரங்கள் வரை வரிசையில் காத்து நிற்கவேண்டி ஏற்பட்டதாக உத்தியோகபூர்வ புகார் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இந்த நிலமையை அடுத்து அரசின் கடவுச்சீட்டுப் பரிசோதனைக் கொள்கை அவசரநிலையின்கீள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மாத ஆரம்பத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடரும் கடும் மழையால் வெள்ள அபாயம்

ஏப்ரல் மாதத்தில் அதிக குளிர் நிலைமையைத் தொடர்ந்து கடும் மழை பெய்துவருவதால் பிரிட்டனில் வெள்ள அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1910 இல் அதிக ஈரப்பதன் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டின் ஏப்ரல் மாதம் அந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக வானிலை அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது. அதேவேளை 2000 ஆம் ஆண்டில் சரா சரியாக 120.3 mm ஆகப் பதிவு செய்யப்பட்ட பின் ஏப்ரல் 29 இல் 121.8 mm எனப் பதிவாகியுள்ளது எனவும் தமது 06 வானிலை நிலையங்களில் ஏப்ரல் மாதத்தில் வழக்கமான சராசரியை விட 03 தடவைகள் உயர்ந்த பதிவு பெறப்பட்டது எனவும் வானைலை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

தென்மேற்கு, மத்திய பகுதி, கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் சூழல் முகவர் அமைபபின் நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. பிரிட்டன் மற்றும் அயர்லாந்துப் பகுதிகளில் கடும் மழையும் பலத்த காற்றும் நிலவியதுடன் மேற்பரப்பு நீரிலும் பல வீதிகளிலும் ஆபத்தான நிலைகள் தோன்றியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை Hampshire இலுள்ள Compton wood பகுதியில் கார் ஒன்று நீரில் மூழ்கியதன் காரணமாக 54 வயதான ஒருவர் மரணமடைந்தார். அவரின் மனைவி உயிர் பிழைத்த அதேவேளை அவர்களின் நாயும் மரணமடைந்தது.

வெள்ள அச்சம் காரணமாக, Northampton பகுதியிலிருந்து சுமார் 1000 வரையானோர் - இடம்பெயர வேண்டியும் செயற்பட்டது. அத்துடன் மைதானம் நீரால் பாதிக்கப்பட்டதனால், வியாழக்கிழமை ஆரம்பமாகவிருந்த Badminton Horse ஒத்திகைக்கான முன்னேற்பாடுகளும் கைவிடப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் பல பகுதிகளும் கூடிய சராசரி மழைவீழ்ச்சியை பெற்றுள்ளது. நதிகளின் நீர மட்டம் உயர்வடைந்துள்ளது. இருப்பினும் வறட்சி நிலைமைகளை மாற்றுவதற்கு தரைகீழ் நீரமட்டம் இன்னும் குறைந்த அளவிலேயே உள்ளதாக சூழல் முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் வெள்ளத்தால் மண் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறிருப்பினும் இங்கிலாந்தின் Swathes பகுதியில் இன்னும் வறட்சி நிலைமைகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்துக்களை அவமானப்படுத்தியுள்ள "மதுரை ஆதீனம்" : இப்போது சஞ்சலத்தில்



மதுரை ஆதீனத்தின் சமீபத்திய முடிவால் இந்தியா, இலங்கை உட்பட சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. மதுரை ஆதீனம் என்பது மதுரையின் கலாசாரத்தின் ஒரு அங்கமாக மாறிப்போன ஒன்று. எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்பது கூட சரியாக தெரியாத அளவுக்கு மிக மிகப்பழைமையான ஒரு மடம். 1250 ஏக்கர் காணி பல்வேறு ஆலயங்கள் சொத்துக்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இந்த ஆதீனத்திற்கு உரித்தாக உள்ளன.

சைவக் குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் 1500 ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவித்த மடம் இது. தென்னிந்திய சைவ சிந்தாந்த தத்துவத்தின் முன்னோடிகளான சமய குரவர்களினால் பேணிப் பராமரிக்கப்பட்ட, சங்க காலத்தின் தொன்மை கொண்டதாகும். சிவபெருமான் உமா தேவியாரின் மறு அவதாரங்களான சொக்கநாதரும் மீனாட்சியும் மதுரை மீனாட்சிசுந்தரேஷ்வரர் ஆலயத்தில் குடிகொண்டிருப்பதாக சைவ சிந்தாந்த கோட்பாட்டைப் பேணுபவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். சங்கத்தமிழையும் சைவ சித்தாந்த கோட்பாட்டையும் பாரம்பரியத்தையும் பல நூறு வருடங்களாகப் பேணி பாதுகாத்து வந்த இந்த மடத்தில் இதுவரை இந்த அளவுக்கு பரபரப்பான சம்பவம் எதுவும் நடந்ததில்லை. ஆனால் தற்போது மதுரை ஆதீனம் அகில இந்திய அளவில் ஆச்சரியக் குறியாக எழுந்து நிற்கிறது. அதற்கு, நடிகையுடன் ஆபா வீடியோவில் தோன்றியதாக பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ள நித்தியானந்தா, மதுரை ஆதீனத்தின் 293 ஆவது மடாதிபதியாக முடிசூட்டப்பட்ட சம்பவமே காரணம். நடிகை ரஞ்சிதா சம்பந்தப்பட்ட வழக்குத் தொடர்பாக 2010 ஏப்ரல் 21 இல் இமாச்சலப் பிரதேசத்தில் வைத்து நித்தியானந்தா கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் 2010 ஜூன் 11 இல் கர்நாடக நீதிமன்றத்தால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அத்துடன் சுவாமி நித்தியானந்தா, பரத்வாஜ் என்ற தனது உதவியாளருடன் இயற்கைக்கு மாறாக உறவு வைத்துள்ளதாகவும், இதற்காக தான் வெளிநாடு செல்லும் போது பரத்வாஜையும் அழைத்துச்சென்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது.மதுரை ஆதீனத்தின் 292 ஆவது மடாதிபதியான அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தியான பீடத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை சுவாமி நித்தியானத்தாவை 293 ஆவது ஆதீனகர்த்தாவாக நியமிப்பதாக அறிவித்திருந்தார். 293 ஆவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமகம்ச நித்தியானந்த ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள் என்று புனிதருக்கு நாங்கள் முடிசூட்டுகிறோம்" என நிருபர்கள் மத்தியில் அவர் அறிவித்திருந்தார்.

சமீபத்தில் தனது சீடர்களுடன் மதுரை ஆதீனத்துக்கு சென்றிருந்த நித்தியானந்தா, அங்கு ஆதீனத்தை சந்தித்து ஆசிபெற்றதுடன் தங்க முலாம் பூப்பட்ட 6 அடி உயரமுள்ள செங்கோலை கொடுத்தார். இதனைத் தொடர்ந்து மதுரை ஆதீனத்தின் அடுத்த மடாதிபதியாக நித்தியானந்தா நியமிக்கப்படுவார் என்ற பரபரப்பான பேச்சுக்கள் எழுந்தன. இறுதியில் அதுவே உண்மையாகி அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்து விட்டது. கர்நாடக மாநிலம் பிடதி ஆசிரமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியிலேயே தற்போதைய மதுரை ஆதீனம், நித்தியானந்தாவிடம் செங்கோலை கொடுத்து மதுரை ஆதீனத்தின் அடுத்த வாரிசு என்று அறிவித்து வெள்ளை காகிதத்தில் கையெழுத்திட்டு கொடுத்தார். அப்போபோது இருவரும் தங்கக் கிரீடத்துடன் காட்சியளித்தனர். அப்போது பேசிய மதுரை ஆதீனம் அருணகிநாதர், "பிடதி வழிபாடுகள் என்னை கவர்ந்தன. மதுரை ஆதீனத்துக்கு, நல்ல மனிதரை நியமிக்க வேண்டும் என்று சிவபெருமான் கனவில் கூறினார். அதற்கேற்ப நித்தியானந்தாவின் நட்பு கிடைத்தது. அவரது பிடதி ஆசிரமத்தில் நடைபெறும் வழிபாடுகள் பிடித்தன.

தொடர்ந்து அங்கு ஆசிரம பூஜையில் இளம் பெண்கள் உட்பட பலர் நடனமாடி ஆண்டவனை வழிபடுவது என்னைக் கவர்ந்தது. நானும் ஆடினேன். மனிதன் எப்போதும் சிரித்துக் கொண்டு சந்தோஷ மாக இருக்க வேண்டும். பல ஆயிரம் கோடி ரூபாய் சொத்துகள் உள்ள மதுரை ஆதீனத்தை பாதுகாக்க நித்தியானந்தாவை விட சிறந்தவர் வேறு யாரும் இல்லை. அவர் புனிதமானவர். பணத்தால் எதையும் பெற்று விடலாம். ஆனால் பக்குவப்பட்ட மனிதனை வாங்க முடியாது" என்றார்.

இதனைத்தொடர்ந்து பேசிய நித்தியானந்தா, "தற்போதைய மதுரை ஆதீனத்தின் பதவிக் காலம் கூட என் வயதில்லை. நான் பிறந்தது, 1978 ஆம் ஆண்டுதான். மதுரை ஆதீனத்துக்கு சொந்தமான பல கட்டடங்களை, அவர் தான் உருவாக்கினார். மதுரை ஆதீனம், அகில உலக ஆன்மிக இயக்கமாக தரம் உயர்த்தப்படும். முதல் கட்டமாக, 1 கோடி ரூபா வழங்குகிறேன். ஆதீனத்துக்கு சொந்தமான கோவில்களை புனரமைத்து, இந்த ஆண்டு இறுதிக்குள் கும்பாபிஷேகம் செய்யப்படும். ஜூன் 5 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ள குரு பூஜையில் சந்நிதானத்திற்கு தங்க சிம்மாசனம், தங்க கிரீடம், தங்க செங்கோல் வழங்கப்படும்" என்றார். முடி சூடிக்கொண்ட நித்தியானந்தா, "மதுரை ஆதீனத்தை உலகளாவிய ஆன்மீக நிறுவனமாக மாற்றுவேன். மதுரை ஆதீனம் ஆற்றிய சேவைகளை தொடர்ந்து செய்வேன். அதை மேம்படுத்துவேன் என்று உறுதியளிக்கிறேன். மீனாட்சி, சொக்கநாதர், திருஞானசம்பந்தர் வரையும் நினைத்து அவர்கள் சாட்சியாக இந்த பொறுப்பை ஏற்கிறேன். இந்து பாரம்பயத்தையும் சைவ சித்தாந்த சம்பிரதாயத்தையும் வாழும் மதமாகவும், கொண்டாடும் மதமாகவும் உலகம் முவதும் உயிர்ப்போடு வைத்திருப்பேன்" போன்ற உறுதிமொழிகளை ஏற்றுக் கொண்டார்.

இதனிடையே, இந்த நிகழ்வுகளை நடிகை ரஞ்சிதா முன் வரிசையில் அமர்ந்திருந்து பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பெரிய அளவில் மக்களிடையே களங்கப்படாதவராக இருந்து வந்த மதுரை ஆதீனத்தின் இந்த புதிய முடிவு மதுரை மக்களிடையே பெரும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மதுரையில் உள்ள ஆதீன மடத்திற்கு புதிதாக மகுடம் சூட்டிய நித்தியானந்தா வந்த போது இந்து மக்கள் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இவரது நியமனம் தொடர்பாக மடாதிபதியிடம் பேச வேண்டும் என கேட்டனர். ஆனால் இதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இதனால் நித்தியானந்தா சீடர்களும், இந்து மக்கள் கட்சியினரும் காரசார வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து வந்த போலீசார் பதட்டத்தை தணித்தனர். இந்து அமைப்புகள், மதுரை ஆதீனத்தின் அதிரடி முடிவால் அவரமாக கூடுவதுடன், இந்துக்கள் அவமானப்படுத்தப்பட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளன.







## உலக பணமாற்றுச் சேவை

*Weltweiter Geldtransfer*
*Worldwide Money Transfer*

- Bester Wechselkurs
- Best exchange rate
- Bon cours du change
- Mejor curso de cambio
- Migliore corso del cambio

BON 10CH

அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

Copyright©worldnet

**IMC Worldnet Ltd** Militarstrasse 85, 8004 Zurich
Tel: 043/928 04 75, Nat: 076/412 51 77

## கோகிலா நகை மாடம் & பணமாற்றுச் சேவை



### தங்க நகைச் சீட்டு

(10ஆம் திகதிக்கு முன் பணம் செலுத்தினால்
சீட்டு முடிவில் 50 CHF மேலதிகமாக வழங்கப்படும்)

**தாலிக்கொடிக்கு தனிக் கழிவு விலையில்**
மகத்துவம் காண வாருங்கள்

உறவினர் வதியும் இடத்தில் உடன்
பணம் தரும் சேவை

**Elisabethen Anlage 7, 4051 Basel.**
**Tel: 0612732525, 0793221339, 0763071339**

## உலகின் முதலாவது பல மொழித் தமிழ் அகராதி

30 சுவிஸ் பிராங் மட்டுமே




தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் யேர்மன், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், நெதர்லாண்ட், சுவீடன், ஆகிய நாட்டு மொழிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

- தமிழ் மொழியில் குறுஞ்செய்தி அனுப்ப எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
- தமிழ் – ஜேர்மன், ஜேர்மன் – தமிழ் அகராதி — விலை 95 chf
- சாரதி அனுமதிப் பயிற்சிப் புத்தகம் ஜேர்மன், தமிழ், இத்தாலி, பிரான்ஸ் மொழிகளில் ஒரே புத்தகம் விடைகளுடன் — விலை 80 chf

தொடர்புகளுக்கு : மூர்த்தி மாஸ்ரர்
**0041 79 204 74 05 / 0041 61 813 15 52**
**நடா : +41788202054 / + 41326855829**
இணையத்தில் இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ள
**www.tamilkadai.ch**

## பாசல் SPT ரவி கடை

நடாத்தும்

### தமிழ் புத்தாண்டு மலிவு விற்பனை

முகூர்த்த பட்டு புடவைகளுக்கு கைராசியான கடை குறைந்த விலையில் நிறைந்த தரத்தில்

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா அனைத்தற்கும் தேவையாய புதிய டிசைன் பட்டு புடவைகள் அனைத்தும் 75% கழிவு விலையில்

கண்கவர் தங்க நகைகள் தரமும் மலிவும் நிலையான விலை. நாகரீகத்தின் சிகரமான புதிய டிசைன் ஆடை வகைகள். எம்மவர் மனம் மகிழும் உணவு வகைகள், நேரடி இறக்குமதியில். மகத்தான மலிவு விற்பனைக்குப் பெயர் பெற்ற நிறுவனம்

**Zürich** மாநகரில்
04.05.12 தொடக்கம்
06.05.12 வரை
Langstr. 113a, Zürich

**Luzern** மாநகரில்
12.05.12திகதி மட்டும்
cTamil Mandram,
Triefchenstr. 51,
6002 Luzern

**Basel** மாநகரில்
25.05.12 தொடக்கம்
27.05.12 வரை
Elisabethenanlage 9,
4051 Basel



SPT
**Elisabethen Anlage**
**4051 Basel**
**061 272 09 90, 079 356 22 78**

# TIEFSTE PREISE!



SOLANGE VORRAT!!

**ILARIA**
Komplette Polstergruppe
Echt Leder rot
Auch in weiss erhältlich

**1700.–**
statt 3290.-

## Möbel Ferrari
**HINWIL**

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

**0.0%** Direkt Finanzierung

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

# Southall Travel™

## Redefining the TRAVEL EXPERIENCE

### Why travel with Southall Travel?

- Number One Travel Agent to India, with over 20 years experience
- Open 24 hours a day, seven days a week. Call us anytime
- Price guarantee will not be beaten on price
- Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- Fast and reliable service
- Multilingual staff offering impartial advice
- UK's 100 Fast Track Companies (Sunday Times 2005)
- Trusted household brand for total peace of mind

### ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்தி பெற்ற நிறுவனம்.
- நம்பிக்கையான துரித சேவை
- பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்.
- யு.கேயில் துரித வளர்ச்சியடைந்த 100 நிறுவனங்களின் பட்டியலில் அங்கம் வகிக்கும் ஓர் நிறுவனம். (சன்டே டம்ஸ் 2005)
- நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

24 HOURS CALL CENTRE
0208 574 8410

**THINK TRAVEL, THINK SOUTHALL TRAVELTRAVEL**

www.southalltravel.co.uk

ABTA 80626